# வேதாந்த
# சித்தாந்த விளக்கம்

(சைவ வைஷ்ணவக் கொள்கைகளைத் தழுவி
வரையப்பட்டது.)

சோ. சிவ அருணகிரி முதலியார் பதிப்பு, 1901.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# வேதோக்த
# சித்தாந்த விளக்கம்.

சித்தாந்தம் என்பது நிச்சயமான முடிபு என்று பொருள்படும். முடிபாவது ஆத்மாக்களுடைய கர்ம பரிபாகத்தையும், புத்தி தாரதம்மியத்தையும், சரீர பலாபலத்தையும, காலதேச வேறுபாடுகளையும் அநுசரித்து, அவரவர் பக்குவத்துக்கேற்றபடி அநு சரித்தொழுக அநேக பிரகாரங்களாக சர்வேஸ் வரனாலே சொல்லப்பட்ட முத்தியடையும் வழிபாடுகள் அடங்கிய வேதத்தினந்தமாம். அவ்வேதம் இரண்டு பாகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. பூர்வபாக மென்றும், உத்தரபாகமென்றும்—அதுவே கர்ம காண்டமென்றும், ஞானகாண்டமென்றும், அற்பசுருதி

யென்றும், பிரபலசுருதி யென்றுங் கூறப்பட்டிருக்கின்றது. இதில் பின்பாகமாகிய உத்தரபாகமே (ஞான காண்டமே) வேதாந்தமென் றுணரப்படும். இவ் வேதாந்தத்தின் முடிபையே கேட்டுச் சிந்தித்துத் தெளிந்த பெரியோர்கள் சித்தாந்தமென்று கூறுகின்றார்கள். இதனை "வேதாந்தத் தெளிவாஞ் சித்தாந்தம்" என்று ஸ்ரீமத் உமாபதி சிவமும, "வேதாந்தஞ் சித்தாந்தம் வேறென்னார்" என்று ஸ்ரீ தாயுமான சுவாமிகளும் ஆணைதந்திருக்கின்றார்கள். இச்சித்தாந்தமாகிய வேதாந்த முடிபையே ஒவ்வொரு சமயத்தாரும தங்கள் தங்கள் மதத்தின் முடிந்த பொருளாக ஒப்புக்கொண்டிருக்கின்றார்களாதலால் தங்கள் சமயத்தை யெடுத்து உதகரிக்கும்போது சைவசித்தாந்தமென்றும், வைஷ்ணவசித்தாந்தமென்றும், மாத்துவ சித்தாந்தமென்றும் இப்படி பலவிதமாகக் கூறுகின்றார்கள். இவர்கள் சைவம், வைஷ்ணவம, மாத்துவம் முதலான அடைமொழிகளைத் தங்கள் சித்தாந்தத்தோடு சேர்த்து சொல்லாவிடின் இவர்கள் சமய மின்னதென்றறிந்துகொள்ளக் கூடாமையாயிருக்கும். ஆகவே ஒவ்வொரு சமயியும் தன்னைச் சித்தாந்தியென்று வாளா

கூற உடன்படான். அதைக்கொடுக்கக் கூற முயலு
வான். ஆனால் சித்தாந்தியென்று தனியே தன்னைக்
கூறிக்கொள்கிறவன் ஒரு சமயத்தையுஞ் சாராது சம
யங் கடந்த சமயாதீத நிலையிலிருப்பவன். அந்தச்
சமயாதீதத்தையே சன்மார்க்கமென்றும், வேதாந்த
சித்தாந்த சமரசமென்றும், நன்னிலையென்றும், சித்
தாந்தமென்றும், வேதாந்த தரமென்றும், சைவத்திற
மென்றும், வேதாந்தத் தெளிவென்றும் வேதவித்துக்
கள் விதந்து கூறுகின்றார்கள். இச்சித்தாந்த மார்க்
கத்திலிருப்பவன் ஏதாவதொரு சமயத்தைச் சார்ந்
திரானோவெனின், அவசியமிருப்பன். தன்னுடைய
நித்தியானுஷ்டான கர்மங்களை முடித்துக்கொள்ள
ஏதாவதொரு சமயத்தைச் சார்ந்தும், சுவானுபவ
நிலைக்குமாத்திரனு சித்தாந்தக்கொள்கையுடையவனு
மாயிருப்பன். அப்படியிருக்கின்றபோது இந்தச் சம
யந்தானாகும் இது ஆகாது; இந்த மதந்தான் உத்தமம்
இது உத்தமமல்ல, என்கிற யாதொரு விகற்பமுமில்லா
மல் எல்லாச் சமயங்களையுந் தனக்குச் சாதனமாகக்
கொண்டு பரமதயாளுவாய் விளங்கிக்கொண்டிருப்பன்.
இப்படிப்பட்ட உத்தம புருஷனுக்கே ஊன்றுகோலா

யிருப்பது வேதாந்த முடிபாகிய சித்தாந்தம். இவ்வொருவனே பலவகைச் சமயங்களிலுங் கண்ட முடிபுகளை தனக்குடன்பாடாகக் கொண்டு அவ்வம் முடிபுகளுக்குத்தக்க பலன் உண்டென்று கூறி அவை யனைத்தையும் சோபானமுறையாகக் கொண்டு மகிழ்வான். இதனையே ஸ்ரீ ஞானசம்பந்தப்பெருமான் அநுக்கிரகஞ் செய்ததாக ஒழிவிலொடுக்கத்தாரும் வற்புறுத்தி இருக்கின்றனர்.

வேதாந்த சித்தாந்த பேபிறவா வீடென்றான்
ஓதாமல் வேத முணர்ந்தோன்.

இப்படிப்பட்ட உயர்வும் ஒப்புமில்லாத வேதாந்தத் தெளிவாகிய சித்தாந்தத்தில் பிரதிபாதிக்கப்பட்ட கடவுள் தன்மை எத்தன்மையதெனின், உத்தர மீமாஞ்ஸையாகிய வேதாந்த சூத்திரத்தில் அறுதியிட்டபடி சேதனம் அசேதன மென்னும் இருவகைப் பிரபஞ்சங்களும் எதனிடத்திலே தோன்றி, [illegible] எதனிடத்திலே ஒடுங்குகின்றனவோ. சிருஷ்டிக்கு முன்னும் சம்ஹாரத்துக்குப் பின்னும் எது பிரகாசித்துக் கொண்டிருக்கின்றதோ, அதுவே தத்துவங்களைக் கடந்த நிர்மலப் பிரமமாகிய கடவுளென்று கூறப்படும்.

அப்பிரமம் இரண்டு லக்ஷணங்களை உடையதாயிருக்கும். அவற்றைச் சொரூபமென்றும் தடஸ்தமென்றும் பெரியோர் பணிப்பர். சொரூபமாவது நிஷ்களாதீத மென்றும், நிராகாரமென்றுஞ் சொல்லப்படும். தடஸ்தமாவது சகள மென்றும், சாகார மென்றும், ஓர் காலத்திலே தோன்றி ஓர் காலத்திலே மறையும் படியான தன்மையுடையதென்றுங் கூறப்படும். இதில் சொரூபதனைத விரிசகின் ஸ்தூலம், சூக்ஷ்மம், பரம் என்னும் மூவகைப் பிரகிருதிகளையுங் கடந்ததாயும், ரூபம (சகளம) அரூபம் (நிஷ்களம) ரூபாரூபம் (சகளநிஷ்களம) என்னும் மூவகை உருவங்களுக்கும் அப்பாற்பட்டதாயும், அகண்டாகார சச்சிதாநந்த பரவெளியாயும், உள், புறம், நடு, கீழ், மேல், பக்கம் என்னும் எவ்விடத்திலேயும் நீக்கமற நிறைந்திருப்பதாயும், தன்னையுந் தனக்காதாரமாய் நின்ற தலைவனையும் உணர்ந்த மெய்ஞ்ஞானிகளுக்கே சுவாநுபவ நிலையில் விஷயமாவதாயும், "சமயகோடிகளெலாந் தந்தெய்வ மென்தெய்வமென், றெங்குந் தொடர்ந்தெதிர் வழக்கிடவு நின்றதெது" என்னுந் தாயுமானசுவாமிகள் வாக்கின் படியும், "மதிவிகற்பாற் பிணங்குறு சமயம் பலபல

வாக்கி'' என்னுஞ் சடகோபர் திருவாணையின்படியும் அகண்டாகார ஆதிமத்யாந்த சமானாதிக நாமரூபகுண ரஹித வஸ்துவாய் இலங்[illegible]ன்றி நக்கும். இந்தச் சொரூப லட்சணம் நிக ந[illegible] ட[illegible]ப்பின்கண் எப்தப் பெறும் ஜீவன் முக்தி த[illegible]ல் ஸ்வரூபவிகாசமும் ஞானவிகாசமுமடைந்து முதல்வனறிவு மாத்திரமாய் நிற்குந் தான் என்னுஞ் சிவஞானிகளல்லாத மற்றைய கலைஞானிகளுக்கு இருண்மயமாகக் காட்டும். இதனையே சிவராஜ யோகிகளாகிய திருமூல நாயனார் ''காணுண வேதாந்தம் தானென்னுஞ் சித்தாந்தம்'' என்று கரதலாமலகம்போல் உண்மை நிறுவினார். ''ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவா'' என்னும் பழமொழியின்படி கலைஞானம்தத்துவஞானத்துக்கு சோபானமாதலால் பரம்பரையாகக் கேட்டுணர்ந்த அபரஞானம் அநுபவ ஞானத்துக்குமுன்னில்லா! ஆதலால் கலைஞானிகள் கூற்று வெறுங் கூற்றும்.

நிற்க, பிரமத்தின் சொரூபலட்சணத்தன்மை அடியில் காட்டிய பிரமாணங்களால் நன்கு விளங்கும்.

1. உலகமும் பல்லுயிரு மொன்றிநிறைந் தோங்கி
யிலகுஞ் சிவனெம் மிறை (ஔவைக்குறள்)

2. அகர வுயிர்போ லறிவாகி யெங்கும்
நிகரிலிறை நின்றது நிறைந்து. (திருவருட்பயன்)

3. பாரபத மண்ட மனைத்துமாய் முளைத்துப்
பரந்ததோர் படரொளிப் பரப்பே. (திருவாசகம்)

4. உடன்மிசை யுயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன். (திருவாய்)

5. ஒருநாம மோருருவ மொன்றுமிலாற் காயிரம் (திருவாசகம்)

6. பேருமோ ருருவமு முளதில்லை யிலதில்லை. (திருவாய்)

7. பாரகமுடன் மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணானந்தமே, (தாயுமானவர்)

8. ஆக்கையுள்ளு மாவியுள்ளு மல்லபுறத்தி னுள்ளும்
நீக்கமின்றி யெங்கு நின்றாய். (திருவாய்மொழி)

இன்னும் அநேகமுள. இத்தகைய பிரமாணங்களினாலே பரப்பிரமமானது அகண்டாகாரப் பரம்பொருளாகப் பிரகாசித்துக்கொண்டிருக்கின்றதென்று நன்றாய் விளங்குகின்றது. அங்ஙனமிருக்க சில சமயிகள் ஆணென்றும், சிலர் பெண்ணென்றும், சிலர் அலியென்றும், பலவாறாக நிச்சயப்படுத்தி வாதிக்கின்றார்கள். அப்படி வாதிப்பதால பிரமமானது காலதேச வஸ்துக்களினாலே பரிச்சின்னப்பட்டுப் போமென்பதற்குத் தட்டில்லை. ஆயின் உண்மை பாதெனின்,

பிரமம் நீங்கிய பொருந்திய சொரூபப்போல் ஆண் பெண் அலி யென்னும் மூன்றுபொருள்களிடத்தும் பிரிவற நிற்கையால் அவ்வப்பொருள்களாக வேதங் கூறுவதேயன்றி வேறன்று. எனவே, இம்மூன்றையுங் கடந்த பரஞானப் பெருவெளியே பரவஸ்துவென்று சித்தாந்த வித்தகர்கள் கூறுகின்றார்கள். இதற்குப் பிரமாணம

1 ஆணல்லன் பெண்ணல்லன் அலியுமல்லன். (திருவாய்)

2. பெண்ணில்லை ஆணில்லை பேடுமில்லை (தேவாரம்)

3. ஆணோ அலியோ அரிவையோ வென்றிருவர்
காணாக் கடவுள். (திருவாசகம்)

4 பெரியதல்ல சிறியதல்ல பெண்ணும் ஆணும் அல்லவே
(சிவவாக்கியர்)

அன்றியும், இவை போன்ற பிரமாணங்கள் இன்னும் அநேகம் இருக்கின்றன. எந்தக் காரணநாமங்கள் இம்மூவகையாகவுங் கூற இடந்தருகின்றனவோ அவைகளே பரத்துவத்தைத் தெளிவாய் ஸ்தாபிக்கும் நாமங்களென்று ஆன்றோர் பணித்திருக்கின்றார்கள். சுருதி யுக்தி அநுபவங்களுக்கும் ஒத்திருக்கின்றன. அவற்றிற் சில வருமாறு:—பிரஹ்மம், பிரஹ்ம: பிராஹ்மீ; சிவம், சிவ:-சிவை; பரம்-பர:-பரை; பரமேஸ்வரம்-

பரமேஸ்வரன்-பரமேஸ்வரி; மஹாதேவம் மஹாதேவன்-மஹாதேவி; நாராயணம்-நாராயணன்-நாராயணி.

இப்படிப்பட்ட தன்மையோடுகூடிய கடவுள் எல்லாச் சமயங்களிலுள்ள உபாசகர்களது தியானமுறைப்புக்குத் தக்கபடி திருமேனிகொண்டு அநுக்கிரகஞ்செய்யுமாதலால் முழுமுதற் கடவுளொருவரே. இதற்குப் பிரமாணம்.

1. அறுவகைச் சமயத்தோர்க்கு மவ்வவர் பொருளாய். (சிவஞானசித்)

2. ஆறுசமயங்கள்தொறும் வேறுவே றாகிவிளை
யாடுநினை யாவ ரறிவார். (தாயுமானவர்)

3. அறுவகைச்சமயத் தறுவகையோர்க்கும்
வீடுபேறாய்நின்ற விண்ணோர்பகுதி
கீடம்புரையுங் கிழவோன். (திருவாசகம்)

4. உருவாகிய வாறு சமயங்கட் கெல்லாம்
பொருளாகி நின்றான். (திருவாய்மொழி)

இன்னும் பலவுள. இவ்வித உண்மைகள் சுருதிகளிலே கோஷிக்க இவைகளை அங்கீகரியாது மதாபிமானத்தால் தங்கள் சமயத்திலேயே பிரஹ்மம் பிரகாசித்துக்கொண்டிருக்கிறதென்றும், தங்கள் சமயத்தைத்

யன்றி வேறு சமயத்தைச் சார்ந்திருக்கின்றவர்களுக்கு மோக்ஷமில்லையென்றும், வாசாஞானம் பேசி வெறும் வாயை மெல்லுவார் கூற்று அடாததாகும். இவர்கள் கூற்று பசையிலதென்றுணர்த்துதற்கே "சமயவாதிகள் தத்தம் மதங்களே யமைவதாக வலற்றிமலைந்தனர்" என்று மணிவாசகப்பிரானும், "அவ்வவர் சமயந் தோறுந்தோய்விலன்" என்று நம்மாழ்வாரும், "நன்றிது தீதிது என்றுரை மாந்தர்கள் குன்றுகுரைத் தெழுநாயை யொத்தாரே" என்று திருமூலரும், "சாவிபோஞ் சமயத்தாழ்ந்து சகத்திடை தவிக்கின்றேனே" என்று தாயுமானவரும் முழக்கியிருக்கின்றார்கள்.

இனி தடஸ்தலட்சணத்தை விரிக்கின், ஸ்தூலம் சூக்ஷ்மம் என்னு மிருவகைப் பிரகிருதிகளையுங் கடந்ததாய், ஸ்வயம்பிரகாச ஸ்வரூபமாய், சிருஷ்டி, திதி, சம்ஹாரம் என்னும் மூன்று கிருத்தியங்களையுஞ் சங்கற்பமாத்திரமாகச் செய்வதாய், கர்மானுகுணமான சரீரத்தைத் தாங்காது அருளை திருமேனியாய், சத்துவம், ரஜசு, தமசு என்னுந்திரிகுணங்களில் தோய்ந்த திரிமூர்த்திபரமாய், ஹேயகுணமற்ற கல்யாணகுணங்

களுடையதாய், அப்பிராகிருதமென்னும் சுத்த மாயா புவனத்திலே யெழுந்தருளியிருக்கும் இருப்பு. இதனை ரூபமாகவும் (சகளமாகவும்), அரூபமாகவும் (நிஷ்களமாகவும்), ரூபா ரூபமாகவும் (சகளநிஷ்களமாக வும்) பக்குவத்துக்குத் தக்கபடி உபாசகர்கள் நெருதிப் பார்கள். சொரூபலட்சணத்தை இயல்பாகப் பெற்றிருக் கும் பிரமமே ஆன்மாக்களை அநாதியே பற்றியிருக்கும் பாசத்தளையை யகற்றி நிரதிசயானந்த வின்பத்தை யநுபவிக்கும்பொருட்டும், ஆன்மாக்களுக்குத் தநுகரண புவன போகங்களை மாயையினின்றுந் தோற்றுவிக்கும் பொருட்டும், இச்சாமாத்திரமாய் இப்படிப்பட்ட சகளத் திருமேனி தாங்கியபடியால் நிஷ்களாதீதப் பிரமமே சகளமெனத் தட்டில்லை. (நிஷ்களமும் அதிசூக்ஷ்மமான சகளமே). இந்தச் சகளப் பிரமம் அசுத்த மாயாதீத சுத்த மாயா மஹா சிவலோகத்திலே மும்மலாதீத ராகிய சிவோபாசகர்கள் சமாதிபரளாய் சூழ்ந்திருக்கப் பரசிவ மூர்த்தியாய் விளங்கிக்கொண்டிருக்கின்றதென்று சைவர்களும், மூலப்பிரகிருதியைக் கடந்த அப்பிரா கிருத பரம வியோமமான பரமபதமென்னும் விஷ்ணு லோகத்திலே "பல்லாண்டும் பரமாத்மனைச் சூழ்ந்திருந்

தேத்துவர் பல்லாண்டே'' என்று ஆழ்வாரருளிப்படி யே மாயாசம்பந்தமற்ற நித்திய முக்தர்களாலே சேவிக்கப்பட்டு திவ்ய மங்கள விக்கிரஹ பரவாசுதேவனைப் பிரகாசித்துக்கொண்டிருக்கின்றனென்று வைஷ்ணவர்களும், பிரகிருதி வர்ஜிதமான நித்தியமாயுள்ள பிரமலோகத்திலே பிரம்மோபாசகர்கள் சூழ்ந்து திபாணிக்க விரிஞ்ச பகவானைப் வீற்றிருக்கிறனென்று ஹிரண்யகர்ப்பவாதி முதலானவர்களும் அனேக பிரமாணங்களை உதகரித்துக் கூறுகின்றார்கள். இவர்கள் இங்ஙனம் சகளப் பிரமத்தை மூன்று லோகத்திலே மூன்று மூர்த்தியாய் எழுந்தருளி யிருக்கின்றதென்று கூறுகின்றார்களே அங்ஙனம் பேதமாவோ வெனின், பேதமாயினுமாகுக அபேதமாயினுமாகுக. இந்த உலகங்களில் அடைந்தவர்களுக்குப் புனராவிருத்தி இல்லை இல்லையென்று அந்தச் சமயிகள் அறுதியிட்டிருக்கின்றபடியாலும் ''எவ்வுருவில் யாரொருவனுள் துவாருள்ளத்துள் அவ்வுருவாய்த் தோன்றி யருள்கொடுப்பான்'' என்று திரு ஆதி உலாவிலும், ''யாதொரு தெய்வங் கொண்டீ ரத்தெய்வ மாகியாங்கே - மாதொருபாகனார் தாம் வருவர்'' என்று சிவ ஞானசித்தியிலும், ''இலிங்

கத்திட்ட புராணத்துள் ஸீருஞ்சமணருஞ் சாக்கியரும் மலிந்துவாது செய்வீர்நும் மற்றுந் தெய்வமு மாகிநின் றான்" என்று திருவாய்மொழியிலும், ஆனை தந்திருக் கின்றபடியால் சொரூப லட்சணத்தை யுடைய பிரமமே உபாசகர்களுடைய தியான முதிர்ச்சிக்குத் தக்கபடி அந்தந்த உலகங்களிலே அந்தந்த மூர்த்தியாய் சகளீகரிக்கின்றதென்பது திண்ணம். இந்தச் சகளீ காரமே சம்புவர்க்கத்தில் படிக்கப்பட்ட சிவ விஷ்ணு பிரமனென்று சகல சமயாதீதாத்துவித சித்தாந்திகள் கூறுகின்றார்கள்.

நிற்க வேறு பகுணங்களற்ற மூவித தடஸ்த பிரமமே மாயைக்குட்பட்ட ஊர்த்துவ லோகங்களிலே வசிக் கும் பிரமன், விஷ்ணு, உருத்திரன் என்னும் மூன்று மூர்த்திகளை புமதிஷ்டித்து ஸ்தூல கிருத்தியங்களைச் செய்கின்றதென்றும், இம்மூன்று கிருத்திய மூர்த்தி களும் தற்போத மிகுந்த காலத்தில் சகள, நிஷ்களப் பிரமங்களை அறிவது அசாத்தியமென்றும், இவர்களைக் கடந்த துரியப் பொருளாகிய நான்காவது வஸ்துவென் னும் சகள, நிஷ்கள பரவஸ்துவே முழுமுதற் கடவுளெ ன்றும் அடியில் காட்டிய பிரமாணங்கள் நிலைநிறுத்தும்

## சுத்தப்பிரஹ்மமே மூவித சகளமூர்த்தி.

1. ஒருவனா யுலகேத்த நின்ற நாளோ
யோருருவே மூவுருவ மான நாளோ. (தேவாரம்)

2. படைப்பொடு கெடுப்புக் காப்பவன் பிரம
பரம்பரன் சிவபிரா னவனே, (திருவாய்மொழி)

3. அரியாகிக் காப்பானயனாய் படைப்பா
னரனா யழிப்பவனுந் தானே- (திருஆதிஉலா)

4. கொண்ட மூர்த்தியோர் மூவராய் குணங்கள்
படைத்தளித்துக் கெடுக்கும் (திருவாய்மொழி)

5. படைத்தளித் தழிப்ப மும்மூர்த்திக ளாயினை (தேவாரம்)

6. மொய்கொள் சோதியோ டாயினானொரு
மூவ ராகிய மூர்த்தியே (திருவாய்மொழி)

இங்குக் கூறிய திரிமூர்த்திகள் பிராகிருத சம்பந்தம்பெற்ற மூவர்களல்லவென்றும், சம்பு வர்க்கத்தில் படிக்கப்பட்ட நவந்தருபேதத்தி லுள்ளவர்களென்றும் விளக்கவே சிவதத்துவ விவேகம்:—

"குணங்களைக் கடந்தோ னெனினு மாயையினைத் தோய்தலாற் குணமுடையவன்போல், அணங்கொரு பாலுங் கறைமிடற்றழகு மம்பகமூன்றுமா முருக்

கொண், டிணங்குறுநாமஞ் சிவன்பவன்முதலா வினைக் தயனரியரன் மூன்று, மூணங்கிடாவுலகைநடாத்துவோ ஞகியோங்கினை நீங்கரும்பொருளே.'' என்று கூறியது.

சகார மூர்த்திகள் பிராகிருத சம்பந்தம்பெற்ற மும்மூர்த்திகளுக்கும் அதீதம்.

1. முந்திய முதல்நடு விறுதியு மானாய்
மூவரு மறிகில ரியாவர்மற் றறிவார் (திருவாசகம்)

2, மூவராலு மறியொணாமுத லாயவானந்த
மூர்த்தியான் (திருவாசகம்)

3. மூவர்க்கு மென்றனுக்கும் வழிமுதலே (திருவாசகம்)

4. மூவரென்றே யெம்பிரானொடு மெண்ணி (திருவாசகம்)

5. மூவராகிய மூர்த்தியை முதல் மூவர்க்கு
முதல் வன்றன்னை (திருவாய்மொழி)

6. மூவர்முதல்வ னொருமூவுல காளி (திருவாய்மொழி)

7. திருமா றுன்முகன் செஞ்சடையா னென்றிவர்களெம்
பெருமான் றன்மையை யாரறி கிற்பார் (திருவாய்மொழி)

8. அரியுமல்ல வயனுமல்ல வானுமல்ல வப்புறம். (சிவவாக்கியர்)

9. அவனன்றி மூவரா லாவ தொன்றில்லை. (திருமந்திரம்)

இதனால் பிராகிருத சம்பந்தம்பெற்ற திரிமூர்த்தி கள் ஜீவர்களென்றும், படைக்கப்பட்டவர்களென்றும், காரணர்களல்லவென்றும், இம் மூவர்களுக்கும் அதீத

மானவரே விஸ்வகாரணரென்றுங் கூறுவதற்குச் சுருதிப் பிரமாணங்கள் வருமாறு:—

1. ப்ரஹ்மம விஷ்ணு ருத்ரேந்திராஸ் ஸம்ப்ரஸூயந்தே
நகாரணம காரணாநது த்யேயஸ்சம்பு:
2. ப்ரஹ்ம்ம விஷ்ணவீசா நேந்த்ரா தீநாம்நாமரூப த்வரா
ஸ்தூலோஹ மிதயதயாஸ் வசாம்ஜீவ:
3. ப்ராஹ்ம்ம விஷ்ணுச்ச ருத்ரச்ச ஸர்வேவா பூதஜாதப:
நாச மேவாநுதாவந்தி
4. சிவ மதத்வைதம் சாந்தம் சதுர்த்த மந்யந்தே.
5. பிரஹ்ம்ம விஷ்ணு ருத்ராதீதம்.

அன்றியும், வேதத்தில் கூறியபடியே பிருதிவியில் பவராயும், அப்புவில் சர்வராயும், தேயுவில் உருத்திரராயும், வாயுவில் பீமராயும் ஆகாசத்தில் மஹாதேவராயும், சூரியனில் உக்கிரராயும், சந்திரனில் சோமராயும், ஆத்மாவில் பசுபதியாயும் விளங்குகின்ற பரம்பொருள் எதுவோ அதுவே துரியப்பொருள். அப்பொருளே நாலாவது பொருளாகிய "சதுர்த்தம்" என்று சுருதி முறையிடுகின்றது. இதன் பெருமையை மஹேஸ்வரன், மஹாதேவன், பசுபதி, பரமாத்மா என்னும் நாமங்களின் அர்த்தபாஹுள்யங்கள் தெளிவாய் விளக்குகின்றன. இதுவே அஷ்டமூர்த்தமென்

றும பெரியோர் பணிப்பர். இதற்குப் பிரமாணம்:—

நிலநீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப்பகலோன்
புலனாய மைந்தனோ டெண்வகையாயப்
புணர்ந்துநின்றான். (திருவாசகம்)

ஆகியைந்து பூதமா யிரண்டுசுடரா *யருவாகி (திருவாய்மொழி)

இருநிலனாய்த் தீயாகி நீருமாகி யியமான னாயெறியுங் காற்றுமாகி
அருநிலைய திங்களாய் ஞாயிறாகி யாகாசமாயட்ட
மூர்த்தமாகி (தேவாரம்)

இவ்வஷ்டமூர்த்தத்தி லடங்காதது எது? இவ்வெட்டு ரூபகாரத்தை வேண்டாதது எது? ஆகவே யார் எதை உபாசனை செய்தபோதிலும நாலாவது பொருளாகிய பிரமத்தையே உபாசித்ததாகும். இப்பிரமம எல்லாவற்றிற்குங் காரணமா யிருத்தலால் இதை யிப் பெயராலன்றி வேறு எக்கடவுள் பெயராலும எப்பொருளின் பெயராலும் கூறினுங் குற்றமில்லை. எல்லாப் பெயரும் இவர்பெயரே. எல்லா வடிவும இவர் வடிவே. எல்லாக் குறியும் இவர்குறியே. யார் யாரைத் தொழுதாலும, எதை உபசரித்தாலும முடிவில் இப் பிரமத்தையே தொழுததாகவும் உபசரித்ததாகவும்

* ஆத்மாவாகி.

முடியும். இப்படிப்பட்ட வுண்மையை ஆராய்ச்சி செய்யும் சாந்த உணர்வில்லாதார் தத்தமக்கு வந்த வாறே இயம்புவார்கள்.

பிரமன், விஷ்ணு, சிவன் என்னுஞ் சகளப் பிரமங்களிலே "சிவனையே உபாசிக்கவேண்டும். மற்றிருவரை உபாசித்தல் முறையல்ல" என்னும் வீரசைவர்கள் கூற்றும், "விஷ்ணுவே பரமகாரணன். அவ் விஷ்ணு ஸ்தூல சூக்ஷ்ம சித்தசித்விசிஷ்ட ரூபத்தைத் தரித்து, "ஸர்வம் விஷ்ணுமயம் ஜகத்" தாக விளங்குகின்றனேயன்றி உண்மையில் அஷ்டமூர்த்தத்தில் அடங்கியவையெல்லாம் முமுக்ஷு உபாசிக்கத்தக்க சர்வேஸ்வரனது ஸ்வரூபங்களல்ல. அவற்றில் முக்கியமாகப் பிரமருத்திரர்களை அவனே யென்று கூறுதல் விசேஷித்த அவர்களுள் எழுந்தருளிய அந்தர்யாமியைச் சொன்னதேயன்றி அவர்களை உபாசிக்க வேண்டுமென்னுங் கருத்தல்ல. முக்கியமாய் அகங்காரயுக்த அச் சீவர்களை அதிஷ்டித்திருக்கும் ஈஸ்வரனும் அநுபாஸ்யன்" என்னும் வீர வைஷ்ணவர்கள் கூற்றும் உசிதமன்று. இவர்கள் கூறும் வெறுஞ் சொல் மதாபிமானமுடையதென்றெறுதுக்கவே "விரிவிலா வறிவினர்கள்

சைவமொருசமயஞ் செய்தே எரிவினைற் சொன்னேரனு மெம்பிரார் சேற்றதாகும்'', என்ற அமுத வசன மும், "தெய்வமிகழேல்" என்ற மூதாட்டியினை யும் எழுந்தன. இவ் வுண்மையையே "சன் மார்க்க ஞானமதின் பொருளும் வீறு சமய சங் கேதப்பொருளுந் தானென்றாகப் - பன்மார்க்க நெறியி னிலுங்கண்டதில்லை பகர்வரிபதில்லை மன்றுள் பார்த்த போதங், கென்மார்க்க மிருக்குதெல்லாம் வெளியே பென்ன வெச்சமயத் தவர்களும் வந்திறைஞ்சாநிற்பர்" என்று தாயுமான சுவாமிகள் விளக்கியுள்ளார். இதைக் கடைப்பிடிக்க, கடைப்பிடிக்க.

நிற்க, திரிமூர்த்திகளுக்கும் மேலான விஸ்வகா ரண மூர்த்திசிவம் அல்லது பிரமம் என்று வெளிப்பட் டது. இப் பிரமத்தின் சொரூபலட்சண வுபாசகர் கள் சிவத்தை நிராலம்பமாகவும் நிராதாரமாகவும் நிஷ்டைகூடி அறிவு மயமாய் விளங்குவார்கள். ஒரு மூர்த்தியையும் முன்னிலையாக வைத்துச் சமாதி கொள் ளார்கள். வேதாந்த சூத்திரம் நான்காவது அத்தியா யம் முதல்பாதம் இரண்டுமூன்று அதிகாரணங்களிலே கூறியபடி சோஹம் பாவனையிலே தலைப்பட்டு நின்று

சிவமா யிருப்பார்கள். தாயுமானவரும் "உன்னை நானென்று பாவிக்கி னத்துவிதமார்க்கமுறலாம்" என்றும், "ஓராதே யொன்றையு நீ முன்னிலையாதே" என்றும், ஸ்ரீமத் உமாபதிசிவம் "ஓராதே யொன்றையு முற்றன்றோதே நீ முந்திப் பராதே பார்த்ததனைப்பார்" என்றும், சடையாபர் "ஓர் பற்றில்லாத பாவனையதனைக் கூடி லவனையுங் கூடலாமே." என்றும், ஸ்ரீமத் அருணந்திசிவம "பாவனையிறந்துநின்று பாவிக்கப்படுவதாகும்" என்றும், "அன்னிய மிலாமையானு மறிவினுள் நிற்றலானும், தன்னறிவதனாற் காணுநதனை மையனல்லனிதனை" என்றும் உரைத்திருக்கின்றார்கள். இப்படிப்பட்ட நிஷ்டையைக் கைவரப் பெற்றவர்களோ எடுத்ததேகாருடம்பின்கண்ணே ஞானவிகாசமுஞ்சொரூப விகாசமும்பெற்று நிரதிசயாநந்த மயமாய் விளங்குவார்கள். இவர்களுக்கு ஆன்ம அறிவு அடங்கிப்போம். இவர்களது பூரணத்தில் சகலமும அடங்கி யிருக்குமாதலால் இவர்களுக்கு அன்னியமாக ஒரு பொருளுண்டாய் அதனை யறியமாட்டார்கள். இவர்களது பிரம்மமாய் நிற்குஞ் சுவாநுபவநிலை சாக்ஷியாகிய சிவஞானத்தையும், காணப்படுவதான சிவத்தையும், "காண்

பவனை தன்னையும் பகுத்தறியும் முறைமையின்றி அத்துவிதமாய், அகண்டாகாரமாய், நித்தியவியாபகமாய் சச்சிதாநந்தப் பிழம்பாய்,நிறைவாய்,தன்மயமாய் இருத்தலாம். இதுவே மஹாவாக்கியத்தின் அர்த்தமாகும். இதன் விரிபொருளை வல்லார் மாட்டறிந்துணர்ந்துகொள்ள வேண்டும். இந்நிலையை அடைந்தவர்களை உண்மை *வேதாந்திகளென்னும் பெயர் பெறுவர். இவர்கள் தாங்கி யிருக்குங் கருமசரீரம் யோகாக்கினியிலே தகிக்கப்பட்டிருத்தலின் பிராரத்துவம் புசித்தவாறே பிணவிபலாய் பூமியிலே விழாது உருவச்சித்தி, அருவச்சித்தி அருவுருவச்சித்தி யென்னும் மூவித சித்திகளிலே ஒன்றை யடைய விதேக கைவல்லியமென்னும் பரமுத்தி யடைவார்கள். இதற்குப்பிரமாணம்:—

1. கண்ணுறுதல்தன் நிறைவதனிற் கலந்துகாயங்
கழிந்தக்கா லெங்குமாய் கருதரனபோல்
நிற்பன் (சிவஞானசித்தி)

---

* தன்னையுந் தனக்காதாரமாய்நின்ற தலைவனையுமுணராது அகம் பிரமமென்று கூறுவார் போலிவேதாந்திகளாவர்.

2. பொருளை நின்பூரணமே விட்டகாலம் (தாயுமானவர்)
3. உலகம்யாவு முயிர்பலவும் நானேசிறிதும் வேறில்லை (பிரமகீதை)
4. தேகம்யா தேனுமொரு சித்திபெற சீவன்முத்தி யாதுநெறி நல்லநெறி யையா பராபரமே. (தாயுமானவர்)
5. உலகநெறி போற்சடல மோய வுயிர்முத்தி இலகுமெனல் பந்த வியல்பே பராபரமே. (தாயுமானவர்)
6. சாமாறுங் கெடுமாறுந் தமருற்றார் தலைத்தலைப்பெய் தேமாறிக் கிடந்தலற்று மிவையென்ன வுலகியற்கை (திருவாய்மொழி)
7. மண்மேல் யாக்கை விழுமாறும் வந்துன் கழற்கே புகுமாறும் அண்ணா வெண்ணக் கடவேனோ. (திருவாசகம்)
8. மேலொரு வடிவை யெடுத்ததேயாகில் மேவுமிவ் வுடலிங்கே வீழும். (குமரதேவர்)

இந்தப் பிரமாணங்களிற் காட்டிய நிலைமை தமக்கரியதென்று மற்றையர்கள் விட்டொழித்தார்கள் போலும். இதனாலே பஞ்ச பூத பரிணமமாகிய சரீரம் கீழே விழுந்துபோக ஆத்மா சூக்ஷ்ம தேகத்தோடு மேலே கிளம்பி திவ்விய மங்கள விக்கிரக ரூபம்பெற்று மோக்ஷமடையு மென்பது பகமுத்தியாகும். "நித்த வுருவத்தைப் பெற்றிருக்கை முத்தியெனில் பெரும்

பதமே யதுவும்'' என்றார் ஸ்ரீமத் அருணைநந்திசிவம். ஆதலால் சித்தாந்த முத்தி நித்த வுருவத்தைப் பெற்றிருத்தலன்று. சிவலோகப் பிராப்பியுமன்று.

இனி பிரமத்தின் தடஸ்தலட்சண உபாசகர்கள் ஸ்தூல, சூக்ஷும பிரகிருதிகளைக் கடந்த பரமவியோமமாம் பிரம்மலோகம், விஷ்ணுலோகம், சிவலோகம் இவைகளிலெழுந்தருளி யிருக்கின்ற சகள மூர்த்திகளைத் தங்கள் தங்கள் சமயங்களிலே பிரதிபாதிக்கப்பட்ட சம்ஸ்காரங்களைப் பெற்று தியானயோக சமாதியிலிருந்து அந்தந்த மூர்த்திகளின் அநுக்கிரகத்தாலே புனராவிருத்தி யில்லாத அந்தந்தப் பதங்களிலே நித்தியமாய் விளங்கியிருப்பார்கள். இப்பதங்களும் சுத்தமாயாகாரியமாகிய அப்பிராகிருதமாதலால் சர்வ சங்கார காலத்திலே லயமடைய அவைகளிலெழுந்தருளியிருக்கும் உபாசகர்களும் அங்கிருந்தே சாக்ஷாத்காரமாகிய பரமுத்தியிற் றலைப்படுவார்களென்பது வைதாந்தத் தெளிவாகிய சித்தாந்த மார்க்கத்துடையார் கொள்கையாகும். ''அவரவ ரிறையவர் குறைவில ரிறையவர், அவரவர் விதிவழியடைய நின்றனரே'' என்னுஞ் சடகோபர் திருவாணையையும் யூகித்தறிக.

நிற்க, பிராகிருதத தோற்றங்களென்னும் அண்டத்துக்குட்பட்ட சத்தியலோகம், வைகுண்டம், கைலாசம் என்னும் ஊர்த்துவலோகங்களிலே பிரம, விஷ்ணு, ருத்திரர்களைப் பரப்பிரமமாகப் பாவித்து நிஷ்காமியமாய் உபாசனை செய்கின்றவர்கள் தேக நீக்கத்திலே அந்தந்த லோகங்களை யடைந்து, ஆங்குள்ள போகங்களைப் புசித்து, அந்த லோகங்கள் லயப்படுங் காலத்தில் சாக்ஷாத் பரமேஸ்வரன் முன்னின்றருள, வாறாயின் அங்கிருந்தே பரமுத்தியிற் றலைப்படுவார்கள். இல்லையாயின் அந்த லோகங்களோடு தாங்களும் லயமடைந்து பின்பு சிருஷ்டி காலத்திலே புண்ணிய ஜனனத்தையுற்று எவ்வாற்றானுங் குருவருளால் ஞானத்தைப்பெற்று மோக்ஷமடைவார்கள்.

ஊனமிலா முத்திப்பதம் பெற்றுலகமெல்லாம்
ஒடுங்கும் போதரன் முனிலாதொழியி லுற்பவித்து
ஞானநெறியடைந்த டைவா சிவனையங்கு
நாதனே முன்னிற் கினமுறுத்துவர்நற்றாளே.

என்னுஞ் சிவஞானசித்தி செய்யுளா லுணர்க.

இனி திரிமூர்த்திகளை பரப்பிரமமென்று உபப்பிரமமணங்களாகிய அவ்வவர் புராணங்களிலே கூறி

யிருக்கின்றதே அதுவென்னையெனின், பிரபஞ்சம் பிரகிருதி சம்பந்தமாதலால் பிரகிருதிக்குரிய ஸ்தூல கிருத்தியங்களை அவர்களே செய்கின்றபடியாலும், அவர்களிடத்திலே பரப்பிரம்மத்தின் அதிகாரசத்தி உடலுயிர்போல் பிரிவறநிற்கையாலும், அவர்களையே சகளப் பிரம்மங்களாக புராணங்கள் உபசரித்தனவே யன்றி வேறல்ல. அஷ்டாதச புராணங்களை ஸ்தூல பார்வைபோ டாதாயாது சூக்ஷ்ம நோக்கால் விசாரிக்கின்றவர்களுக்கு இவ்வுண்மை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கும். இதையே "புராண மிதிகாச மெவையும் பொருளினைத்தும், பிராணனறியா துளவிடத்திவை பேதற்றே" என்றார் தத்துவராயர்.

இங்ஙனம் திரிமூர்த்திகளைப் பகுத்தறியாது, "சதுர்த்தம்" என்றுமறை முடிவு கூறியபடி நான்காவது பொருளாகிய பரப் பிரமத்தையும், இரண்டாவது கர்த்தாவாகிய விஷ்ணுவையும், மூன்றாவது மூர்த்தியாகிய உருத்திரனையும் ஒன்றென்று குழப்புகின்றார்கள். இவர்கள் இப்படி குழப்புவதால் நான்காவதாகிய சகள மூர்த்தியைப்பற்றி பெருமைபாகச் சொல்லும் போது குதூகலமும் பெருமகிழ்ச்சியுங் கொள்வது

போல் இரண்டாவது மூன்றாவது மூர்த்திகளைப் பற்றி புராணங்களிலும் அநுபவ நூல்களிலும் இழிவாகக் கூறியதைக் கேட்க உடன்பட்டிருத்தல் வேண்டுமென்றே. அங்ஙனமோ செய்யார். இவர்களது நிலைமை பரிதாபம். இதனாலே திரிமூர்த்திகளுக்கும் சாக்ஷாத் பரப்பிரமத்துக்கும் பேதம் பெரிதாயிருக்கிறதென்று கரதலாமலகம்போல் விளங்குகின்றதல்லவா. சிவபுராணங்கள் பத்திலும் விஷ்ணுபுராணங்கள் நான்கினும் கூறிய பரத்துவம் சிவனையும் விஷ்ணுவையும் அதிஷ்டித்து நிற்கின்ற பிரமத்தையே போய்ச் சாரும். சிவ விஷ்ணு புராணங்களிலே கூறிய நிந்தனை * குணமூர்த்திகளாகிய அவ்விருவர் பக்கலிலுஞ் சாரும். இதுவே அவ்விருவகைப் புராணங்களையுமாக்கியோரது கருத்தாகும். இல்லாவிடின் முன்னொடு பின்மலைவுண்டாகும்.

மேல் திரிமூர்த்திகள பிரமபாவனையின் அநுபவத்தால் எல்லாமாய் நிற்குந்தன்மை அடைந்தமையாலும், ஞானாசிரியரா யெழுந்தருளி கீதோபதேசஞ் செய்தமையாலும், பரப்பிரமத்துக்குரிய நாமங்களும்,

* அபகர்ஷம்.

தொழில்களும் பெற்று அந்தந்தச் சமயத்துக்குரிய வழிபடுகடவுளாயினர். ஆகவே அவர்களில் எந்த மூர்த்தியை வழிபட்டாலும் ஜன்மசாபல்லிய மாகுமென்பதற் கையமில்லை. மெய்ப்படு நூன்முறை கண்டும் மோகத்தால் தம்மதமே மேற்கொண்டுழலும் அற்பவாராய்ச்சி யுடையவர்கள் தங்கள் வழிபடு கடவுளல்லாமல் மற்றவர்கள் மோக்ஷத்தைக் கொடுக்க அருக ரல்லரென்று கூறுவார்கள். அங்ஙனம் கூறுவது சுருதியுக்திக்குப் பொருந்தாது; சமயக்கடவுளிடத்துப் பற்றுண்டாகும்பொருட்டுச் சுருதிகள் அவசரபேதமாக அவ்விதங் கூறின. ஞானாசிரியனே பரப்பிரமமும் வழிபடுகடவுளாதலால் அவனாலாகாத காரியம் ஒன்றுமில்லை. யார் யார்க்கு எந்த மூர்த்தம் அருட்குருவாய்நின்று ஆண்டருளுகின்றதோ அதையே துதித்தல் மரபாம். அதுவே பூரணப்பொருளாம். அதுவே பிரம்மமாம். அவ்வாறு துதித்தல் இழுக்கன்று.

இதற்குப் பிரமாணம்:—

1. நகுரோ ரதிகம், நகுரோ ரதிகம் நகுரோ ரதிகம் பரமம் தெய்வம். (குருகீதை)

2. குருர்ப்ரஹ்மம்மா, குருர்விஷ்ணுஃ குருர்தேவோ மஹேஸ்

வரஃ - குருர் ஸாக்ஷாத் பரப்ரஹ்மஃ தஸ்மை ஸ்ரீ குரவே நமஃ (குருகீதை)

3. மைவிடா தெழுநீல கண்டகுருவே, விஷ்ணு வடிவான ஞானகுருவே, மலர்மேவி மறைபோது நான்முகக்குருவே மதங்கள்தொறு நின்ற குருவே. (தாயுமானவர்)

4, அருள்வடி வேழுமூர்த்த மவைகள்சோ பானமென்றே சுருதிசொல் லியவாற்றுலே தொழுதெய்வ மெல்லா மொன்றே (தாயுமானவர்)

5: அவாவறச்சூ ழரியை யயனை யரனை யலற்றி யவாவற்று வீடுபெற்ற குருகூர்ச சடகோபன் (திருவாய்மொழி)

6. நன்றெழுநாரண னான்முக னரனென்னுமிவரை ஒன்றநும மனத்துவைத் துள்ளிநும் † இருபசை யறுத்து (திருவாய்மொழி)

7. உணர்ந்துணர்ந் துரைத்துரைத்தரியயன ரனெனுமிவரை உணர்ந்துணர்ந் துரைத்துரைத் திறைஞ்சுமின்மனப்பட்ட தொன்றே (திருவாய்மொழி)

இங்ஙனங் கூறிய பிரமாணங்களின்படியே கிருத்திய கர்த்தாக்களாகிய மும்மூர்த்திகளும் பரமாசாரியர்களாதலால் பரப்பிரமமாக வந்திக்கப்படுகின்றார்கள்.

---

† அகப்பற்று, புறப்பற்று.

இதனையே பகவத்கீதாசாரியனும் "கீழ்பதினெட்டு அத்தியாயங்களில் சொன்ன கரும, ஞான, பக்தி யோகங்களிலுள்ள எல்லாத் தருமங்களையும் ருசிவாசனையோடு நன்றாக விட்டுவிட்டு என்னொருவனையே உபாயமாகவடை. நான் உன்னை சமஸ்த பாபங்களினின்றும் விடுவித்து மோக்ஷத்தை யடையும்படி செய்கிறேன். பயப்படாதே" என்னுங் கருத்தடங்கிய சுலோகத்தை அருளிச்செய்தாரென்று மெஞ்ஞானமுணர்ந்தோர் கூறுகின்றனர்.

இனி திரிமூர்த்திகளையும் அருட்குரவராகக் கொண்டு பவக்கடலைக் கடக்கும் வேதாந்தசித்தாந்திகள் குணத்துக்குத் தக்கபடி கோலத்துக்கேற்ப யாதாவது சின்னங்களைத் தரித்திருப்பார்களோவெனின், பதிவிரதையானவள் தன்னுடைய நாயகனால் தரிக்கப்பட்ட மாங்கல்லியத்தையும், அவனால் விரும்பப்பட்ட குங்குமம், மஞ்சள், மோதிரம் முதலானவைகளையும் அவன் வசீகரமாகும்பொருட்டு சதா தாங்கியிருப்பதுபோல் சமரசஞான சன்மார்க்க நிலையிலிருப்பவர்களும் அடியில்காட்டிய பிரமாணங்களிலடங்கிய வேதசம்மதமான ஞானச் சின்னங்களை அணிந்திருப்பார்கள்.

1. நீறிடா தவரைக்கண்டா லம்மநா மஞ்சுமாறே
(திருவாசகம்)

2. நீறசெவ்வே யிடக்காணி னெடுமா லடியாரென்றோடும்
(திருவாய்மொழி)

3, வெளியநீ றுடுமேனி வேதியன் பாதம்நண்ணி
(திருவாசகம்)

4. கரிய மேனிமிசை வெளியநீறு சிறிதேயிடும்
(திருவாய்மொழி)

5. நீறில்லா நெற்றிபாழ் (ஔவையார்)

6. எவரேனுந் தாமாக லலாடத்திட்ட திருநீறுஞ்
சாதனமுங் கண்டால் (தேவாரம்)

7. ....................வெண்ணீறும்
வேடமும் பூசையுமே மெய்யென்றான் பொய்யென்றான்
மாடையும் வாழ்க்கையும் மனையுமே (நெஞ்சுவிடுதூது)

8: உடையார்ந்த வாடையன் கண்டிகைய னுடைநாணினன்
(திருவாய்மொழி)

அன்றியும் யாதொரு சின்னங்களையுந் தாங்காது நாயகனிடத்திலே பதிவிரதத் தன்மையைக் காட்டுங் கற்புக்கரசிகளும் பிரபஞ்சத்திலே ஏகதேசத்திலும் ஏகதேசமாயுளராதலின் ஞானச்சின்னங்களை யணி யாது வேதாந்த சித்தாந்தக் கோட்பாடுடைய வரிட்ட

ரும் சிலருளர். அங்ஙனஞ் சித்தாந்தக் கோட்பாடுடைய வர்களே சமயிகளால் சொல்லப்படும் பதமுத்தியை விரும்பாது முத்திமுடிவென்னும் முத்தாந்தத்தை யறிந்து சாக்ஷாத்கரிப்பார்கள். இந்த முத்தாந்த மேடையிலிருக்கும் பரப்பிரமத்துக்கு சித்தாந்தமே நேர்வீதி. இதனால் சித்தாந்தம் எல்லாச் சமயங்களுக் குந்தாயகமாகும். இதைக் கடைப்பிடிக்க.

முத்தாந்த வீதி முளரிதொழு மன்பருக்கே
சித்தாந்த வீதிவருந் தேவே பராபரமே. (தாயுமானவர்)

இங்ஙனம் விதந்து கூறப்பட்ட வேதாந்த சித் தாந்த வீதியாகிய ராஜபாட்டையை ஒருபமான வாயி லாக விளக்குதும். எல்லாச் சற்குணங்களும் நிரம்பப் பெற்ற ஒரு நாயகன் யாவராலும் வணங்கப்பட்டு மிக வும் கம்பீரமாய் இலங்கிக்கொண் டிருக்கின்றான். அவனுக்கு ஆசையையூட்டும் நாயகிமார்கள் அறுவர் இருக்கின்றார்கள். அவர்களில் ஒவ்வொருவருக்கும் இரண்டு புதல்வர்களுண்டு. இவர்கள் யாவரும் ஒருங்கு கூடி வாழ்ந்துகொண்டிருக்கும் காலத்தில் நாயகனானவன் எல்லா நாயகிமார்களிடத்திலுஞ் சம அன்பு பாராட்டி அவரவர் களிக்கும்படி நடந்துகொண்டு வருகின்

ருன். ஆனால் நாயகிமார்களோ தங்களிடத்தில் அதிக காதலை வைக்கும்பொருட்டும், மற்றச் சக்களத்திமார்களைப் பார்க்கிலுந் தங்களுக்கு அதிக ஆதிக்ய முண்டாகும்பொருட்டும் தங்களை வஸ்திர பூஷணாதிகளோடு அலங்கரித்துக் கொள்வதோடு நாயகன் தங்களிடத்தில் வரும்போதெல்லாம் தங்களுடைய வனப்பையும் பெருமையையும் அவனுக்கு எடுத்துக்கூறி தங்களிடத்தில் அதிகவிசுவாசம் பாராட்டும்படி நடிக்கின்றார்கள். அவைகளையெல்லாம் நன்குணர்ந்த நாயகன் அவர்கள் எண்ணத்தை முடிப்பவன்போல் அபிநயங்காட்டி எல்லா நாயகிமாரிடத்திலுஞ் சமபபற்றையே வைத்திருக்கின்றான். இந்த ரகசிய உண்மையைத்தேர்ந்த மூத்தபுதல்வர்கள் எல்லாரும் தங்கள் புத்தியைத் தாய்மார்கள் எவ்வளவு கலக்கினாலும் அதனால் விபரீதங் கொள்ளாது அன்புள்ள தந்தையைப்போலவே தாங்களும் அபிநயங்காட்டி எல்லா அன்னைமார்களையும் பெற்ற தாயைப்போல் சமமரியாதைபண்ணி தந்தையின் அருளுக்குப் பாத்திரர்களாகின்றார்கள். அற்ப அறிவுள்ள இளைய புதல்வர்களோ ஈன்ற தாய்மார்களின் வலையில் அகப்பட்டுக்கொண்டு மற்ற அன்னையர்

களது நிந்தனைகளுக்கு ஆளாவதோடு அன்புள்ள தந்தையின் கிருபைக்குந் தூரமாயிருக்கின்றார்கள். இவ்விருவகைப் புதல்வர்களிலே மூத்த புதல்வர்கள் அநுசரிப்பது சன்மார்க்கம். இளைய புதல்வர்கள் கைக்கொள்வது பட்சமார்க்கம், இதுபோலவே சிவம் அல்லது பிரமமானது உயர்வும் ஒப்பு மில்லாமல் விளங்கிக் கொண்டிருக்கின்றது. அப்பொருளை யறிந்துகொள்ளவும் தம்மை வெகுமுகமா யலங்கரிக்கவுஞ் சாதனமாய் நிலைபெற்றிலங்குவது வைதசம்பந்தமாகிய ஆஸ்திக அறுவகைச் சமயங்கள். அச்சமயங்களை அநுசரித்துக்கொண்டுவரும் நாம் யாவரும் புதல்வர்களாயிருக்கின்றோம். நம்மவர்களில் சன்மார்க்கமென்னுஞ் சித்தாந்தத்தை அநுசரித்தொழுகுகின்றவர்கள் பிரமத்தின் மூத்த புதல்வர்கள். பட்சமார்க்கமென்னுஞ் சமயமார்க்கத்தை அநுசரிப்பவர்கள் தந்தையின் பூரணவருளைப்பெறாத இளைய புதல்வர்கள். இவ்வுபமானவாயிலாக சகல சமயாதீதாத்துவிதம் என்னும் சித்தாந்தம் எவ்வகைச் சிறப்பினையுடையதென்பதை நன்றாய்த் தெளிந்திடுக.

ஈண்டு சிவம் என்பது பிரம்மத்தின் பரியாய நாமம். சிவமென்றாலும் பிரம்மமென்றாலும் ஒன்றே. சிவம் அன்புருவமாதலின் வேதாந்த சித்தாந்திகள் உலகியலும அருளியலும் ஒருமிக்க உணர்ந்து, சமயப் பற்று ஜாதிப் பற்று ஆகிய இவற்றில் விழுந்தழுந்தாது, ஞானப்பற்றொன்றையே மேற்கொண்டு, சிற்றறிவுள்ள உயிர்கள் அவரவர் பக்குவத்துக்கு ஏற்ப அவ்வச்சமயப் பற்றுடையவர்களா யிருக்கின்றார்களென்று உணர்ந்து, வெறுகாது அவர்களிடத்து அன்பு செலுத்தியிருப்பார்கள். அத்தகையோருடைய அரிய பெரிய மார்க்கமானது,

எல்லாரு மின்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே. (தாயுமானவர்)

என்றபடி அன்புமார்க்கமாம். பொது வகையாக நோக்கின் யாவும் சமரசமாம். சிறப்பு வகையில் சிறிது வித்தியாசமேற்படும் அதுகாரணம்பற்றி சமயத் துவேஷம் வேண்டற் பாற்றன்று.

சுபம்! சுபம்!! சுபம்!!

முற்றிற்று.

மெய்கண்டதேசிகன் மிளிர்கழல் வாழ்க.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

அன்புடையீர் !

எனதன்பார்ந்த தந்தையார் உத்தியோக விஷயமாய்ச் சிகந்திரபாக்கத்துக்குச் சென்றபோது அங்கு ஆரிய சமாஜ பிரம சமாஜக் கொள்கைகள் அனேக முகமாகப் பரவி சைவ வைஷ்ணவக் கொள்கைகளைத் தலையெடுக்க வொட்டாது செய்தமையின், அக்கால நிலைமையை யநுசரித்து இவ்விரு சமயப் பயிர்களுந் தழைத்தோங்கவும், சித்தாந்த செந்நெறி எங்கும் பரவவும், கடவுளருளும் சமயப்பற்றும் யாவர்க்குமுண்டாகவும் வேண்டிய பிரசங்கங்கள் செய்து இவ்வரிய நூலை வெளியிட்டனர். இது சமரச சுபாவமுடையார்க்கு மிகவும் பிரயோசனமாயுள்ளதென்று எனது நண்பர்கள் கேட்டுக்கொண்டபடி இதை அச்சிட்டு வெளிப்படுத்தினேன். சுபம்.

இங்ஙனம்

சோ. ஞானசம்பந்தன்.

TAMIL

# POETICAL ANTHOLOGY.

No.—11.

WITH A GLOSSARY.

—»»*««—

# ஸ்ரீ கிடங்கரி.

Second Editon, 3,0C0 Copies

இஃது.

அரும்பதவகராதியுடன் பாடசாலைகளுக்காகப்

பதிப்பிக்கப்பட்டது.

KARIKAL.

Printed at the mohamed samadany press.

1887

# நீதிமஞ்சரி.

உ-ம் புத்தகம்.

U. V. SWAMI
TIRUVANMIYUR, MADRAS-41.

## இனியவை நாற்பது.

யானை யுடைய படைகாண்டன் மிகவினிதே
ஊனைத் தின் றூனைப் பெருக்காமை முன்னினிதே
கான்யாற் றடைகரை யூரினி தாங்கினிதே
மானமுடையார் மதிப்பு. 1

கொல்லாமை முன்னினிது கோல்கோடி மாராயம்
செய்யாமை முன்னினிது செங்கோல னாகுதல்
எய்துந் திறத்தா லினிதென்ப யார்மாட்டும்
பொல்லாங் குரையாமை நன்கு. 2

ஆற்றுந் துணையா லறஞ்செய்கை முன்னினிதே
பாற்பட்டார் கூறும் பயமொழி மாண்பினிதே
வாய்ப்புடைய ராகி வலவைக ளல்லாரைக்
காப்படையக் கோட லினிது. 3

அங்க முடமாவுடையார் தாய்வாழ்தல் முன்னினிதே
ஆர்த்தண் விசும்பி னசைதீராக் காண்பினிதே
பாசமில் செய்யமைய ரானுபரிந்தியாக்கும்
அவ்விய முடையராத லினிது 4

கடமுண்டு வாழாமை காண்ட லினிதே
நலமாண்பில் பெண்டிரை நீக்க லினிதே
மனமாண்பி லாதாரை யஞ்சி யகறல்
எனைமாண்புந் தானினிது நன்கு 5

குழவி பிணியின்றி வாழ்த லினிதே
கழறு மவையஞ்சான் கல்வி யினிதே
மயரிக ளல்லராய மாண்புடையார்ச் சேரும்
திருவுந்தீர் வின்றே லினிது 6

மான மழிந்தபின் வாழாமை முன்னினிதே
தான மழியாமை தானடங்கி வாழ்வினிதே
ஊனமொன் றின்றி யுயர்ந்த பொருளுடைமை
மானிடவர்க் கெல்லா மினிது 7

குழவி தளர்நடையைக் காண்ட லினிதே
அவர்மழலை கேட்ட லமிழ்தி னினிதே
வினையுடையான் வந்தடைந்து வெய்துறும் போழ்தும்
மனனஞ்சா னாக லினிது. 8

கற்றார்முற் கல்வி யுரைத்தன் மிகவினிதே
மிக்காரைச் சேர்தன் மிகமாண முன்னினிதே
எட்டுணை யானு மிரவாது தானீதல்
எத்துணையு மாற்ற வினிது, 9

நட்டார்ப் புறங்கூறான் வாழ்த னனியினிதே
பட்டாங்கு பேணிப் பணிந்தொழுக லுன்னினிதே
முட்டில் பெரும்பொரு ளாக்கியக்கான் மற்றது
தக்குழி யீதலே நன்று. 10

சலவரைச் சாரா விடுத லினிதே
புலவர்தம் வாய்மொழி போற்ற லினிதே
மலர்தலை ஞாலத்து மன்னுயிர்க் கெல்லாம்
தகுதியால் வாழ்த லினிது. 11

பிறன்கைப் பொருள்வெளவான் வாழ்த லினிதே
அறம்புரிந் தல்லவை நீக்க லினிதே
மறந்தேயு மாணா மயரிகட் சேராத்
திறந்தெரிந்து வாழ்த லினிது. 12

வெல்வது வேண்டி வெகுளாதா னோன்பினிதே
ஒல்லுந் துணையுமொன் றுய்ப்பான் பொறையினிதே
இல்லது காமுற் றிரங்கி யிடர்ப்படார்
செய்வது செய்த லினிது. 13

தானங் கொடுப்பான் றகைமாண்மை முன்னினிதே
மானம் படவரின் வாழாமை முன்னினிதே
ஊனங்கொண் டாடா ருறுதி யுடையவை
கோண்முறையாற் கோட லினிது 14

கயவரைக் கையிகந்து வாழ்த லினிதே
உயர்வுள்ளி யூக்கம் பிறத்த லினிதே
எளிய ரிவரென் றிகழ்ந்துரையா ராகி
ஒளிபட வாழ்த லினிது 15

அடைந்தார்த் துயர்கூரா வாற்ற லினிதே
கடங்கொண்டுஞ் செய்வன செய்த லினிதே
சிறந்தமைந்த கேள்விய ராயினு மாராய்ந்
தறிந்துரைத்த லாற்ற வினிது. 16

கற்றறிந்தார் கூறுங் கருமப் பொருளினிதே
பற்றமையா வேந்தன்கீழ் வாழாமை முன்னினிதே
தெற்றென வின்னாற்ற மகளிர்த் தாமொழுத்த திங்கட்கால்
பத்திமையிற் பாங்கினிப் பதில. 17

எல்லியம் போது வழங்காமை முன்னினிதே
சொல்லுங்காற் சோர்வின்றிச் சொல்லுதன் மாண்பினிதே
புலவிக் கொளினும் பொருளல்லார் தங்கேண்மை
கொள்ளா விடுத லினிது. 18

சிறாஅ ருடையான் படைக்கல மாண்பினிதே
நட்டா ருடையான் பகையாண்மை முன்னினிதே
எத்துணையு மாற்ற வினிதென்ப பால்படுங்
கற்றா வுடையான் விருந்து. 19

[illegible] குணத்தான் [illegible] முன்னினிதே
துச்சி லிருந்து துயர்கூரா மாண்பினிதே
[illegible] கருதி [illegible]
[illegible] மை இனிது. 20

— ∞ —

# இன்னா நாற்பது:

கொடுங்கோல் மறமன்னர் கீழ்வாழ்த லின்னா
நெடுநீர் புணையின்றி நீந்துத லின்னா
கடுமொழி யாளர் தொடர்பின்னா வின்னா
தடுமாறி வாழ்த லுயிர்க்கு. 21

எருதி லுழவர்க்குப் போகீர மின்னா
கருவிகண் மாறிப் புறங்கொடுத்த லின்னா
திருவுடை யாரைச் செறலின்னா வின்னா
பெருவலியார்க் கின்னா செயல். 22

ஆற்ற லிலாதான் விடுத்த படையின்னா
நாற்ற மிலாத மலரின் வனப்பின்னா
தேற்ற மிலாதான் றுணிவின்னா வாங்கின்னா
மாற்றமறியா னுரை. 23

பொருளுணர்வா ரில்வழிப் பாட்டுரைத்த லின்னா
இருள்கூர் சிறுநெறித் தாந்தனிப் போக்கின்னா
அருளிலார் தங்கட் செலவின்னா வின்னா
பொருளிலான் வண்மை புரிவு. 24

உடன்பா டிலாத மனைவிதோ ழின்னா
இடனில சிறியாரோ டியாத்த நட்பின்னா
இடங்கழி யாளர் தொடர்பின்னா வின்னா
படமுடையார் காணப் புகல். 25

உண்ணாது வைக்கும் பெரும்பொருள் வைப்பின்னா
நண்ணாப் பகைவர் புணர்ச்சி நனியின்னா
கண்ணி லொருவன் வனப்பின்னா வாங்கின்னா
எண்ணிலான் செய்யுங் கணக்கு. 26

குலத்திற் பிறந்தவன் கல்லாமை யின்னா
நிலத்திட்ட நல்வித்து நாறாமை யின்னா
நலத்தகையார் நாணின்மை யின்னாதாங் கின்னா
கலத்தல் குலமில் வழி. 27

மாரிநாட் கூவுங் குயிலின் குரலின்னா
ஈரமி லாளர் கடுமொழிக் கூற்றின்னா
மாரி வளம்போக்கி னூர்க்கின்னா வாங்கின்னா
மூரி யெருத்தி னுழவு. 28

ஈத்த வகையா னுவவாதார்க் கீப்பின்னா
பாத்துண லில்லா ருழைச்சென் றுணலின்னா
மூத்த விடத்துப் பிணியின்னா வாங்கின்னா
ஓத்திலாப் பார்ப்பா னுரை. 29

பெரியாரோ டியாத்த தொடர்விடுத லின்னா
அரியவை செய்து மெனவுரைத்த லின்னா
பரியார்க்குத் தாமுற்ற கூறுறின்னா வின்னா
பெரியார்க்குத் தீய செயல். 30

கல்லாதா னூருங் கலிமாப் பரிப்பின்னா
அல்லாதான் சொல்லு முரையின் பயனின்னா
இல்லார்வாய்ச் சொல்லி னயமின்னா வாங்கின்னா
கல்லாதான் கோட்டி கொளல். 31

பண்ணமையா யாழின்கீழ்ப் பாடல் பெரிதின்னா
எண்ணறியா மாந்தரொழுக்குநாட் கூற்றின்னா
மண்ணின் முழவி னொலியின்னா வாங்கின்னா
தண்மையி லாளர் பகை. 32

பொருளிலான் வேளாண்மை காமுறுத லின்னா
நெடுமாட நீணகர்க் கைத்தின்மை யின்னா
அடுபகையார்த் திருந் தூணின்னா வின்னா
கெடுமிடத்துக் கைவிடுவார் நட்பு. 33

— ∽ —

## நன்னெறி.

என்று முகம னியம்பா தவர்கண்ணும்
மென்றும் பொருள்கொடுப்பர் தீதற்றோர் — துன்றுசுவை
பூவிற் பொலிகுழலாய் பூங்கை புகழவோ
நாவிற் குதவு நயந்து. 34

பிறர்க்குதவி செய்யார் பெருஞ்செலவம் வேறு
பிறர்க்குதவி யாக்குபவர் பேறாம் — பிறர்க்குதவி
செய்யாக் கருங்கடனீர் சென்று புயன்முகந்து
பெய்யாக் கொடுக்கும்பிறர்க்கு. 35

நீக்க மறுமிருவர் நீங்கிப் புணர்ந்தாலும்
நோக்கி னவர்பெருமை நொய்தாகும் — பூக்குழலா
நெல்லி னுமிசிறிது நீங்கிப் பழமைபோல
புல்லினுந் திண்மைநிலை போம். 36

கடலே யனையமயாங் கலவியா லென்னும்
அடலே றனையசெருக் காழ்த்தி—விடலே
முனிக்கரசு கையான் முகந்து முழங்கும்
பனிக்கடலு முண்ணப் படும். 37

உள்ளங் கவர்ந்தெழுந் தோங்குசினங் காத்துக்
கொள்ளுங் குணமே குணமென்க—வெள்ளந்
தடுத்த லரிதோ தடங்கரைதான் பேர்த்து
விடுத்த லரிதோ விளம்பு. 38

தங்குறைதீர் வுள்ளார் தளர்ந்து பிறர்க்குறூஉம்
வெங்குறைதீர்க் கிற்பார் விழுமியோர்—திங்கள்
கறையிருளை நீக்கக் கருதா துலகின்
நிறையிருளை நீக்குமே நின்று. 39

இல்லானுக் கன்பிங் கிடம்பொருளே வன்மற்
றெல்லா மிருந்துமவற் கென்செய்யும்—நல்லாய்
மொழியிலார்க் கேது முதுநூல் தெரியும்
விழியிலார்க் கேது விளக்கு. 40

இன்சொலா லன்றி யிருநீர் வியனுலகம்
வன்சொலா லென்று மகிழாதே—பொன்செய்
அதிர்வளையாய் பொங்கா தழற்கதிரற் றண்ணென்
கதிர்வரவாற் பொங்குங் கடல். 41

நல்லோர் வரவா னகைமுகங்கொண் டின்புறீஇ
அல்லோர் வரவா னழுங்குவார்—வல்லோர்
திருந்துந் தளிர்காட்டித் தென்றலவரத் தேமா
வருந்துஞ் சுழல்கால வர. 42

எழுத்தறியார் கல்விப் பெருக்க மனைத்தும்
எழுத்தறிவார்க் காணி னிலையாம—எழுத்தறிவார
ஆயுங் கடவு ளவிர்சடைமுன் கண்டளவில்
வீயுஞ் சுரநீர் மிகை. 43

ஆக்கு மறிவா னலது பிறப்பினுல்
மீக்கொ ளுயர்விழிவு வேண்டற்க—நீங்கு
பவரா ரரவின் பருமணிகண் டென்றும
கவரார் கடலின் கடு. 44

உண்டு குணமுங் கொருவர்க் கெனினுங்கீழ்
கொண்டு புகலுவது குற்றமே—வண்டுமலர்ச்
சேக்கை விரும்புஞ் செழும்பொழிலவாய் வேம்பன்றே
காக்கை விரும்புங் கனி. 45

உடலின் சிறுமைகண் டொண்புலவர் கல்விக்
கடலின் பெருமை கடவார்—மடவரால்
கண்ணளவாய் நின்றதோ காணுங் கதிரொளிதான
விண்ணளவா யிற்றன்றே விளம்பு. 46

கைம்மா றுகவாமற் கற்றறிந்தோர் மெய்வருந்தித்
தம்மா லியலுதவி தாஞ்செய்வர் — அம்மா
முலைக்கு மெயிறு முதிர்சுவை நாவிற்கு
விளைக்கும் வலியனதா மென்று. 47

பேரறிஞர் தாக்கும் பிறர்துயரந் தாங்கியே
வீரமொடு காக்க விரைகுவார் — நேரிழாய்
மெய்சென்று தாக்கும் வியன்கோ லடிதன்மேல்
கைசென்று தாங்குங் கடிது. 48

அறிவுடையா ரன்றி யதுபெறார் தம்பால்
செறிபழியை யஞ்சார் சிறியர் — பிறைநுதால்
வண்ணஞ்செய் வாள்விழியே யன்றி யறைகுருட்டுக்
கண்ணஞ்சு மோவிருளைக் கண்டு. 49

தக்கார்க்கே யீவர் தகார்க்களிப்பா ரிலென்று
மிக்கார்க் குதவார் விழுமியோர் — எக்காலும்
நெல்லுக் கிறைப்பரே நீரடிக் காட்டுமுளி
புல்லுக் கிறைப்பரோ போய். 50

நல்லார் செயுங் கேண்மை நாடோறு நன்றாகும்
அல்லார் செயுங்கேண்மை யாகாதே — நல்லாய்கேள்
காய்முற்றிற் றின்றீங் கனியா மிளந்தளிர்நாள்
போய்முற்றி னென்னாகிப் போம். 51

பொன்னணியும் வேந்தர் புனைபாட பெருங்கலவி
பனொறு மறிநொதகர் மறமொருவவா—மின்னுறுமணி
பறுமபிரம்பு பொன்மேனி யதுபோய
சாறுங்கண் மெனுகருமோர் காண. 5

---

# நளவெண்பா.

---

சாகலை கவொருடன் சனுஞண்டல பொய்ப்பொழிரல
ரகன மருதக விளைசண்டாய—மேபாதல
சமாயாமை வைதந் நருபாடர மெசய்மை
நணயாமை பூண்டார் மரதி. 5

ஆய்கைதவோர் கலவுபருநாகிய சேர்க்கும்
திரதகைதமேப கொண்டருளைத் தேயாகும்-மறதகைதமே
பூவைருவமோர் தருசெய்யும் பெயச்சுதை மிக்கோாக
தீணுவெய்ரா யொருரா தொசது. 5

உருவழிச்சு புண்மை யாவழிக்கும் வண்மைத்
திருவழிக்கு மான்று சிதைக்கும்—மருவும்
ஒருவரோ டண்டிக்கு மொன்றலல கூறு
பொருவரோ தக்கோர் புரிந்து.

வேலை கரையிழந்தால் வேத நெறிபிறழ்ந்தால்
ஞால முழுது நடுவிழந்தால—சீலம்
ஒழிவரோ செம்மை யுரைதிறம்பாச் செய்கை
அழிவரோ செங்கோ லவர். 56

பொன்னுடைய ரேனும் புகழுடைய ரேனுமற்
றென்னுடைய ரேனு முடையரோ—இன்னடிசில்
புக்களையுந் தாமரைக்கைப் பூநாறுஞ் செய்யவாய்
மக்களையிங் கில்லா தவர். 57

சொன்ன கலையின் றுறையனைத்துந் தோய்ந்தாலும்
என்ன பயனுடைத்தா மின்முகத்து—முன்னம்
குறுகுதலைக் கிண்கிணிக்காற் கோமக்கள் பால்வாய்ச்
சிறுகுதலை கேளாச் செவி. 58

சினக்கதிர்வேற் கண்மடவாய் செல்வர்பாற் சென்றீ
எனக்கென்று நீமாற்றங் கண்டாய்—தனக்குரிய
தானந் துடைத்துத் தருமத்தை வேர்பறித்து
மானந் துடைப்பதோ வாள். 59

# அரிச்சந்திர புராணம்.

செய்யபண் மையி லுயிர்க்கொரு துணையெனச் சிறந்
வாய்மை யாலகந் தூய்மையா மற்றிலம் புறத்தைத்
தூய்மை செய்வது நீரலாற் சொலின்வே றுளதோ
பொய்மைசெய்யினும் வாய்மையே போனபெனச் சுருதி

புலைய னாவிரும் பாதகவிப் புன்புலால் யாக்கை
நிலையெ னுமருண பிறினு நெடிதுறச் சிறந்தே
தலைமை மேதரு சத்தியம் பிறழ்வது தரியேம்
கலையுணர்ந்தநீ யெமக்கிது கழறுவ தழகோ. 61

இம்மை யம்மைவீ டெனமறை புலங்கொள வியம்பும்
மும்மை யுந்தரு முறைபுடைத் தெனுநிலை முரணி
எம்மை யாழ்வயிற் றிடக்கிமீட் டெமிழ்கலா வெரிவாய்
வெம்மைகூர நரக் குய்க்கினு மெய்ம்மையைவிடேமால்.

பதியி ழந்தனம் பாலனை யிழந்தனம் படைத்த
நிதியி ழந்தன மினிநமக் குளதென நினைக்கும்
கதியி ழக்கினுங் கட்டுரை யிழக்கிலே மென்றார்
பதியி ழுக்குதன் வாயிழக் கருந்தவன் மறைந்தான். 63

# நீதிநெறிவிளக்கம்.

அறம்பொரு ளின்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையு நாட்டும் — உறுங்கவலொன்
றுற்றுழியுங் கைகொடுக்குங் கல்வியி னூங்கில்லை
சிற்றுயிர்க் குற்ற துணை. 64

எத்துணைய வாயினுங் கல்வி யிடமறிந்
துய்த்துணர் வில்லெனி னில்லாகும் — உய்த்துணர்ந்துஞ்
சொல்வன்மை யின்றெனி னென்னாகு மஃதுண்டேல்
பொன்மலர் நாற்ற முடைத்து. 65

வருந்தித்தாங் கற்றன வோம்பாது மற்றும்
பரிந்துசில கற்பான் றொடங்கல் — கருந்தனம்
கைத்தலத்த வுய்த்துச் சொரிந்திட் டரிப்பரித்தாங்
கெய்த்துப் பொருள்செய் திடல். 66

கற்றோர்க்குக் கல்வி நலனே கலனல்லால்
மற்றோ ரணிகலம் வேண்டாவாம் — முற்ற
முழுமணிப் பூணுக்குப் பூண்வேண்டா யாரே
அழகுக் கழகுசெய் வார். 67

முற்று முணர்ந்தவ ரில்லை முழுவதூஉம்
கற்றன மென்று களியற்க — சிற்றுளியால்
கல்லுந் தகருந் தகரா கனங்குழாய்
கொல்லுலைக் கூடத்தி னால். 68

தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை
அம்மா பெரிதென் றகமகிழ்க — தம்மினும்
கற்றாரை நோக்கிக் கருத்தழிக கற்றவெல்லாம்
எற்றே யிவர்க்குநா மென்று. 69

கல்வி யுடைமை பொருளுடைமை யென்றிரண்டு
செல்வமுஞ் செல்வ மெனப்படும் — இல்லார்
குறையிரந்து தம்முன்னர் நிற்பப்போற் றாமுந்
தலைவணங்கித் தாழப் பெறின். 70

ஆக்கம் பெரியார் சிறியா ரிடைப்பட்ட
மீச்செலவு காணின் நனிதாழ்ப — தூக்கின்
மெலியது மேன்மே லெழூஉச்செலச்செல்ல
வலிதன்றே தாழுந் துலைக்கு. 71

தன்னை வியப்பிப்பான் றற்புகழ்தல் தீச்சுடர்
நன்னீர் சொரிந்து வளர்த்தற்றால் — தன்னை
வியவாமை யன்றே வியப்பாவ தின்பம்
நயவாமை யன்றே நலம். 72

பிறரால் பெருஞ்சுட்டு வேண்டுவான் யாண்டும்
மறவாமே நோற்பதொன் றுண்டு — பிறர்பிறர்
சீரெல்லாந் தூற்றிச் சிறுமை புறங்காத்து
யார்யார்க்குந் தாழ்ச்சி சொலல். 73

கற்பன வூழற்றா கல்விக் கழகத்தாங்
கொற்கமின் றாத்தவா யங்காத்தல் — பொற்றூத்தம்
வல்லுரு வஞ்சனமி னென்பவே மாபறவை
புல்லுரு வஞ்சுவ போல். 74

கற்றன கல்லாத செவிமாட்டிக் கையுறா
குற்றந் தமதே பிறிதன்று — முற்றுணர்ந்தும்
தாமவர் தன்மை யுணராதார் தம்முணரா
ஏதிலரை நோவ தெவன். 75

கண்ணிற் சொலிச்செவியி னோக்கு மிறைமாட்சி
புண்ணியத்தின் பாலதே யாயினும் — தண்ணளியால்
மன்பதை யோம்பாதார்க் கென்னும் வயப்படுமற்
றெண்பயக்கு மாணல் லவர்க்கு. 76

குடிகொன் றிறைகொள்ளுங் கோமகற்குக் கற்றா
மடிகொன்று பால்கொள்ளு மாண்பே — குடியோம்பிக்
கொள்ளுமா கொள்வோர்க்குக் காண்டுமே மாநிதியம்
வெள்ளத்தின் மேலும் பல. 77

முடிப்ப முடித்துப்பின் பூசுவ பூசி
உடுப்ப வுடுத்துண்ப வுண்ணா — இடித்திடித்துக்
கட்டுரை கூறிற் செவிகொளாக் கண்ணிலியைக்
கெட்டுயிர்போ யிற்ற பிணம். 78

ஒற்றிற் றெரியா சிறைப்புறத் தோர்தும்பைப
பொறறிரு டுணையாத் தெரிதந்தும்—குற்றம
புறிவரிதென் றஞ்சுவதே செங்கோன்மை சென்ற
முறையிழுதுங கேளாமை யன்று. 79

ஏதிலார் யாதும் புகல விறைமகன்
கோதொரீஇக் கொள்கை முதுக்குறைவு—நேர்நின்ற
காக்கை வெளிதென்பா ரெனச்சொலாற்தாய்க்கொலை
சாலடிடைத்தென்பாரு முண்டு. 80

கண்கூடாப் பட்டது கேடெனினுங் கீழ்மக்கட்
குணர்டோ வுணர்ச்சிமற் றில்லாகும—பணபெரி
தான்வாய் மடுப்பினு மாசுணங் கண்டுயிலவ
பேரா பெருமூச் செறிந்து. 81

வாங்குங் கவளத் தொருசிறிது வாய்தப்பின்
தூங்குங் களிறோ துயருறா—ஆங்கதுகொண
டூரு மெறும்பிங் கொருகோடி யுய்யுமால
ஆருங் கிளையோ டயின்று. 82

உறுதி பயப்ப கடைபோகா வேனும
இறுவரை காறு முயல்ப—இறுமுயிர்க்கும
ஆயுண் மருந்தொழுக்க றீதன்று லல்லனபோல
ஆவனவு முண்டு சில. 83

மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்டுஞ்சார்
எவ்வெவர் தீமையு மேற்கொள்ளார் — செவ்வி
அருமையும் பாரா ரவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார். 84

சிறிய பகையெனினு மோம்புதல் தேற்றார்
பெரிதும் பிழைபா டுடையார் — நிறையகத்
தாழ்நீர் மடுவிற் றவளை குதிப்பினும்
பாசி நிழல்காண பரிது. 85

தூநட் டகப்வோப்பார் தக்கப் பகைமை
வலியிட்டு வெருக்கா மெயணைடுய — கழிபெருங்
கணமிறைட்டுஞ் செய்யைய கருவியிட் டாற்றுவார்
மணமையத்து மூடா பொதிந்து. 86

எந்த கழுப்பெனி னல்ல செயினும்
அந்தக் கதைவையுந் தீயவே யாகும் — எனைத்துணையும்
தீயவே செய்யினு நல்லவாக் காண்பவே
மாசின மனத்தி னவர். 87

இனியவ ரென்சொலினு மின்சொலே யின்னார்
கனியு மொழியுங் கடுவே — அனல்கொளுந்து [பச்
வெங்காரம் வெய்தெனினு நோய்தீர்க்கு மெய்பொடிப்
சிங்கி குளிர்ந்துங் கொலும். 88

நல்லா றொழுக்கின் றலைநின்றார் நல்கூர்ந்தும்
அல்லன செய்தற் கொருப்படார்—பல்பொறிய
செங்கட் புலியே றறப்பசித்துந் தின்னுவாம
பைங்கட் புனத்தபைங் கூழ்.

பெற்ற சிறுகப் பெறாத பெரிதுள்ளும்
சிற்றுயிர்க் காக்க மரிதம்மா—முற்றும்
வரவர வாயமடுத்து வல்விராய் மாய
எரிதழன் மாயா திரா.

வள்ளன்மை யில்லாதான் செல்வத்தின் மற்றையோர்
நல்குரவே போலு நனிநல்ல—கொன்னே
அருளில னன்பிலன் கண்ணறைய னென்று
பலரா லிகழப் படான்.

ஈகை யரிதெனினு மின்சொலினு நல்காதல்
ஓகோ கொடிது கொடிதம்மா—நாகொன்று
தீவினைக் கம்மியனால் வாய்பூட் டிடப்படினாற்
றூவா விவரென்செய் வார்.

சிறுமுயற்சி செய்தாங் குறுபயன் கொள்ள
பெறுமெனிற் றாழ்வரோ தாழார்—அறவலை
எண்மைய வாயினுங் கைவிட் டரிதெனினும்
ஒண்மையிற் றீர்ந்தொழுக லார்.

செயக்கடவ வல்லனவுஞ் செய்துமன் னென்பார்
நயத்தகு நாகரிக மென்னும்—செயிர்த்துரைப்பின்
நெஞ்சுநோ மென்று தலைதுமிப்பான் றண்ணளிபோல்
எஞ்சா தெடுத்துரைக்கற் பாற்று.

பகையின்று பல்லார் பழியெடுத் தோதி
நகையொன்றே நன்பயனாக் கொள்வான்—பயமின்று
மெய்விதிரப்பக் காண்பான் கொடிறுடைத்துக் கொல்
கைவிதிர்த் தஞ்சப்படும். [வான்போல் 95

தெய்வ முளதென்பார் தீயசெயப்புகின்
தெய்வமே கண்ணின்று நின்றொறுக்கும்—தெய்வம்
இலதென்பார்க் கில்லைத்த மின்புதல்வர்க் கன்றே
பலகாலுஞ் சொல்வார் பயன். 96

தீய செயல்செய்வா ராக்கம்பெருகினும்
தீயன தீயனவே வேறல்ல—தீயன
நல்லன வாகாவா நாவின் புறநக்கிக்
கொல்லுங் கவயமா போல். 97

வஞ்சித் தொழுகு மதியிலிகாள் யாவரையும்
வஞ்சித்தோ மென்று மகிழன்மின்—வஞ்சித்த
எங்கு முளனொருவன் காணுங்கொ லென்றஞ்சி
அங்கங் குலைவ தறிவு. 26

மறைவழிப் பட்ட பழிமொழி தெய்வம்
பறையறைந் தாங்கே கொடிப்பறக்கும் — கழிமுடைப்
புன்புலா னாற்றம் புறம்பொதிந்து மூடினும்
சென்றுரைக்குஞ் செய்யா முகத்து. 99

---

## அறநெறிச்சாரம்.

---

காலைச்செய் வோமென் றறத்தைக் கடைப்பிடித்துச்
சாலச்செய் வார்போற் றலைப்படுவர் — பாலை
கிடந்தா னெழுத லரிதாண்மற் றென்கொல்
அறங்காலை செய்யாத வாறு. 100

சென்றநா ளெல்லாஞ் சிறுவிரல் வைத்தெண்ணலாம்
நின்றநாள் யார்க்கு முணர்வரி — தனமெரு நயண
நன்மைபுரியாது நாளுடைப்ப வட்டிருக்கும்
புன்மை பெரிது புரா. 101

பட்ட வகையாற் பலரும் வருந்தாமல்
கட்டுடைத் தாகக் கருதிய நல்லறம்
முட்டுடைத் தாக விடைதவிர்ந்து வீழ்தலில்
நட்டாற்றுத் தோணி நன்று. 102

பலகற்றேம் யாமென்று தற்புகழ வேண்டா
அலகதிர் ஞாயிற்றைக் கைக்குடையுங்—காக்கும்
சிலகற்றார் கண்ணு முளவாம் பலகற்றார்க்
கச்சாணி யன்னதோர் சொல். 103

தன்னைத்தா னெஞ்சங் கரியாகத் தானடங்கின்
பின்னைத்தா னெய்தாப் பயனில்லை—தன்னைக்
குடிகெடுக்கு நெஞ்சிற்குக் குற்றேவல் செய்யின்
பிடிபடுக்கப் பட்ட களிறு. 104

நின்னை யறப்பெறு கிற்கிலே னன்னெஞ்சே
பின்னையான் யாதைப் பெறுகிற்பேன்—நின்னை
அறப்பெறு கிற்பேனேற் பெற்றேனமற் றீண்டு
துறக்கந் திறப்பதோர் தாள். 105

உள்ளூ ரிருந்தந்த முள்ளமறப் பெற்றாரேல்
களவிழ் சோலைப்பூங் காட்டுளார்—காட்டுள்ளும்
உள்ள மறப்பெறு கல்லாரே னூட்டுள்ளும்
நண்ணி நடுவூரு ளார். 106

காய்த லுவத்த லகற்றி யொருபொருட்கண்
ஆய்த லறிவுடையார் கண்ணதே—காய்வதன்கண்
உற்ற குணந்தோன்றா தாகு முவப்பதன்கண்
குற்றமுந் தோன்றாக் கெடும். 107

விருந்து புறந்தரான் வேளாண்மை செய்யான்
பெருந்தக் கவரையும் பேணான்—பிரிந்துபோய்க்
கல்லான் கடுவினை மேற்கொண் டொழுகுமேல்
இல்வாழ்க்கை யென்ப திருள். 108

அட்டுண்டு வாழ்வார்க் கதிதிக ளெஞ்ஞான்றும்
அட்டுண்ணா மாட்சி யுடையவர்—அட்டுண்டு
வாழ்வார்க்கு வாழ்வா ரதிதிக ளென்றுரைத்தல்
வீழ்வார்க்கு வீழ்வார் துணை. 109

மருவிய காதன் மனையாளும் தானும்
இருவரும் பூண்டீர்ப்பி னல்லால்—ஒருவரால்
இல்வாழ்க்கை யென்னு மியல்புடைய வான்சகடம்
செல்லாது தெற்றிற்று நின்று. 110

நாற்றமொன் றில்லாத பூவொடு சாந்தினை
நாற்றந்தான் வேண்டி யதுபோலும்—ஆற்ற
மறுவறு சீலமு நோன்புமில் லாரை
உறுபயன் வேண்டிக் கொளல். 111

இம்மை யடக்கத்தைச் செய்து புகழாக்கி
உம்மை யுயர்கதிக் குய்த்தலான்—மெய்ம்மையே
பட்டாங் கறமுரைக்கும் பண்புடை யாளரே
நட்டா ரெனப்படு வார். 112

வைகலு நீருட் கிடப்பினுங் கல்லிற்கு
மெல்லென்றல் சால வரிதாகு மஃதேபோல்
வைகலு நல்லறங் கேட்பினுங் கீழ்கட்குக்
கல்லினும் வல்லென்னு நெஞ்சு. 113

பாம்புண்ட நீரெல்லா நஞ்சாம் பசுவுண்ட
தேம்படு தெண்ணீ ரமுதமாம் — ஓம்பற்
கொளியா முயர்ந்தோர்க்கு ஞான மதும்பால்
களியாங் கடையாயார் மாட்டு. 114

கல்லா வொருவனைக் காரணங் காட்டினும்
இல்லைமற் றென்று மானுணர்தல் — நல்லாய்
நறுநெய் நிணமுழுக்க லுப்பப்பினு மூழை
பெறுமோ சுவையுணரு மாறு. 115

கட்டளை கோடித் திரியிற் கருதிய
இட்டிகையுங் கோடு மதுபோலும் — ஒட்டிய
காட்சி திரியி னறந்திரியு மென்றுரைப்பா
மாட்சியின் மிக்கவர் தாம். 116

கெடுக்கப் படுவது தீக்கரும நாளும்
கொடுக்கப் படுவ தருளே — அடுத்தடுத்
துண்ணப் படுவது நன்ஞான மெய்ப்பொருளா
லெண்ணப் படுவது வீடு. 117

திரையவித்து நீராட லாகா வுரைப்பார்
உரைபவித்த தொன்றுஞ்சொல் லில்லை—அரைசராய்ச்
செய்துமா மென்னினு மாகா துளவரையால்
செய்தவாக்கே யாகுந்திரு. 118

உடம்புக் குவட்டின் மிசையிருந் துண்ணினும்
இட்டுக் காலத்து கூராதாம்—தொக்க
உடம்பும் பொருளு முடையானோ நன்மை
தொடங்காக்கா லென்னாம் பயன் 119

இன்சொல் விளைநில னீதலே வித்தாக
வன்சொற் களைகட்டு வாய்மை யெருவட்டி
அன்புநீர் பாய்ச்சி யறக்கதி ரீன்மேவார்
பைங்கூழ் சிறுகாலைச் செய். 120

குற்றத்தை நன்றென்று கொண்டு குணமின்றிச்
செற்ற முதலா வுடையவரா—தெற்ற
அறிந்தாரென் றேத்து மவாசனைக் கண்டால்
துறந்தெழுவார் தூய்காட்சி யார். 121

உணர்ச்சியச் சாக வுசாவண்டி யாகப்
புணர்ச்சிப் புலனைந்தும் பூட்டி—உணர்ந்ததனை
ஊர்கின்ற பாக னுணர்வுடைய னாதமேல்
போகின்ற தாகும் பிறப்பு. 122

# பழமொழி

கல்விய னையம் பெரிதுடைய னல்லாருள்
சொல்விய நல்லவுந் தீயவா—மெல்லாம்
ஒவ்வாவனோ காட தமனாயில் லாரைந்
நகாழுங் காடுபோன் றுமந்து 123

னொடொனை ப்பாவா சாழ கொடுப்பாராய்
செனனு முருந்திய ருட்கவெழுந்தனர்
சினனுவாரு செய்பய வதுப்பார் கொண்டப்புழ
ஒன்றா மண்டாம வாழ்திகழ் 124

தாழ் நயமொன் றுநன் குடுநந் தந்தாககுந்
கேடு பயக்கும் சூழல் கிளைபயனி
நீக்க வெறுப்ப நின்பய னறிந் தாமிருந்த
கொடு குறைவது விடல். 125

இனிய யமையா விருமுதுமக்களும்
பொன்றினமைச் சண்டும் பொருள் பொருளாகக் கொள்ப
ஒன்றும் வகைபா னறஞ்செயக லூரகத்துளின் [வோ
குன்றும் வழித்டுபெபதில. 126

பாய்வதன் முன்னே வகைப்பட்ட நல்வினையை
ஆய்வின்றிச் செய்யாதார் பின்னை வழிநினைந்து
நோய்காண் பொழுதி னறஞ்செய்வார்க் காணாமை
நாய்காணிற் கற்காணா வாறு. 127

தாமேயுந் தம்மைப் புகழ்ந்துரைக்கும் போழ்தில்
அமரா ததனை யகற்றலே வேண்டும்
அமையாரும் வெற்ப வணிபாரே தம்மைத்
தம்மேனுங் கொள்ளாக் கலம். 128

மறுமனத்தா னல்லாத மாநலத்த வேந்தன்
உறுமனத்த னாகி யொழுகின்—செறுமனத்தார்
பாயிரங் கூறிப் படைதொக்கா லென்செய்ப
ஆயிரங் காக்கைக்கோர் கல். 129

கற்றறிவார் கண்டடக்க மடங்காதார்
பொச்சாந்துந் தம்மைப் புகழ்ந்துரைப்பார்—தெற்ற
அறைகல் லருவி யணிமலை நாட
நிறைகுட நீர்தளும்ப லில். 130

கோவாத சொல்லுங் குணனில்லா மாக்களை
நாவா யடக்க லரிதாகும்—நாவாய்
களிகள் போற் றூங்குங் கடற்சேர்ப்ப வாங்கி
வளிதோட் கிடுவாரோ வில். 131

உடைப்பெருஞ் செல்வத் துயர்ந்தபெருமை
அடக்கமி லுள்ளத்த னாகி—நடக்கையி
லொள்ளிய னல்லானமேல் வைத்தல் குரங்கின்கைக்
கொள்ளி கொடுத்து விடல். 132

எண்ணக் குறைபாடாச் செல்வமு மிறப்பிறப்பும்
மன்ன ருடைய வுடைமையும்—மன்னரால்
இன்ன ரெனல்வேண்டா வின்மைக்கு மும்மைக்கும்
தம்மை யுடைமை தலை. 133

அருமை யுடைய பொருளுடையார் தங்கண்
கருமமுடையாரை நாடார்—எருமைமேல்
நாரை துயில்வதியு மூர குளந்தொட்டு
மீதனை வழிச்சென்றா ரில் 134

பொல்லாத சொல்லி மறைந்தொழுகும் பேதைதன்
சொல்லாலே தன்னைத் துயர்ப்படுக்கும்—நல்லாய்
மணலின் முழுகி மறைந்து கிடக்கும்
நுணலுந்தன் வாயாற் கெடும். 135

மிக்குப் பெருகி மிகுபுனல் பாய்ந்தாலும்
உப்பொழிதல் செல்லா வொலிகடல்போல்—மிக்க
இனநல்ல நன்குடைய வாயினு மென்றும்
மனநல்ல ராகுவார் கீழ். 135

...ளர் தெரிந்து செலவர்க்கு ஈரக்கடனகவர்க்கும்
இறைத்தவர் மோதகல வேண்டும் — முறைதெரிந்து
...ம் பழுகா ஞயினதுவர் பொருட்பசம்
...ரறிசிய மாவெயழுந்து மாய 137

...ரு கனோ சொல்லும் பொய்யினை நாளோடுகிறபார
வரைச்சால வழிபாடாய் வாழ்தலு முண்டாமோ
...ம் விடாயாயினு தலைமேல் கொருவியர்
...சை விடாயாயிலில 1?8

# திரிகடுகம்

தன்குணங் குன்றுத் தகைமையுந் தாவில்சீர்
இன்குணத்தார் ஏவின செய்தலும் — நன்குணர்வின்
நான்மறை யாளர் வழிச்செலவு மிம்மூன்றும்
மேன்முறை யாளர் தொழில். 139

தாளாள னென்பான் கடன்படா வாழ்பவன்
வேளாள னென்பான் விருந்திருக்க வுண்ணுதான்
கோளாள னென்பான் மறவாதா னிம்மூவர்
கேளாக வாழ்த லினிது. 140

ஒருவாயுட் காலவழுங்கி வாழுதல் செருவாய்ப்பச்
செய்தவை நாடாச் சிறப்புடைமை எய்தப்
பலநாடி நல்லவை கற்றலிம் மூன்றும்
நலமாட்சி நல்லவர் கோள். 141

உண்பொழுது நீராடி யுண்டலு மென்பெறினும்
பால்பற்றிச் சொல்லா விடுதலுந் தோல்வற்றிச்
சாயினுஞ் சான்றாண்மை குன்றாமை யிம்மூன்றும்
தூஉய மென்பார் தொழில். 142

தன்னாசிச் சென்றுறை யுள்ளா னொருவனும்
மன்னிய செல்வத்துப் பொச்சாப்புந் தானும்
என்று பழுக்கா விசந்தாரு மிம்மூவர்
நின்ற புகழுடை யார். 43

கோலஞ்சி வாழுங் குடியுங் குடிதழீஇ
ஆலம்வீழ் போலு மமைச்சனும் — வேலின்
கடையணிபோற் றிணணியான காப்புமிம் மூன்றும்
படைவேந்தன் பற்று விடல். 144

முந்நீர்த் திரையி னெழுந்தியங்கா மேதையும்
நுண்ணூற் பெருங்கேள்வி நூற்கணை கண்டானும்
மைந்நீர்மை யின்றி மயலறுப்பா னிம்மூவர்
மெய்ந்நீர்மை மேனிற் பவர் 145

தன்னை வியந்து தருக்கலுந் தாழ்வின்றிக்
கொன்னே வெகுளி பெருக்கலும்—முன்னிய
பல்பொருள் வெஃகுஞ் சிறுமையு மிம்மூன்றும்
செல்வ முடைக்கும் படை. 146

வைத்தனை யின்சொலலாக் கொள்வானு நெய்பெய்த
சோறென்று கூழை மதிப்பானு— மூறிய
கைப்பதனைக் கட்டியென் றுண்பானு மிம்மூவர்
மெய்ப்பொருள் கண்டுவாழ் வார். 147

கண்ணுக் கணிகலங் கண்ணோட்டங் காமுற்ற
பெண்ணுக் கணிகல நாணுடைமை—நண்ணும்
மறுமைக் கணிகலங் கல்வியிம் மூன்றும்
குறியுடையார் கண்ணே யுள. 158

இளைஞர்க் குதவாதான் செல்வமும் பைங்கூழ்
விளைவின்கட் போற்றா னுழவும்—இளையனாய்க்
கள்ளுண்டு வாழ்வான் குடிமையு மிம்மூன்றும்
உள்ளன போலக் கெடும். 149

நன்றிப் பயன்றூக்கா நாணிலியுஞ் சான்றோர்முன்
மன்றிற் கொடும்பா டுரைப்பானும்—நன்றின்றி
வைத்த தடைக்கலங் கொள்வானு மிம்மூவர்
எச்ச மிழந்துவாழ் வார். 150

நோவஞ்சா தாரோடு நட்பும் விருந்தஞ்சும்
ஈர்வளையை யில்லத் திருத்தலும்—சீர்பயவாத்
தன்மை யிலாள ரயலிருப்பு மிம்மூன்றும்
நன்மை பயத்த லில. 151

இல்லார்க்கொன் றீயு முடைமையு மிவ்வுலகில்
நில்லாமை யுள்ளு நெறிப்பாடு மெவ்வுயிர்க்கும்
துன்புறுவ செய்யாத தூய்மையு மிம்மூன்றும்
நன்றறியு மாந்தர்க்குள. 152

காவோ டறக்குளந் தொட்டானு நாவிலை
வேதங் கரைகண்ட பார்ப்பானும்—தீதிகந்
தொல்வதுபாத் துண்ணு மொருவனு மிம்மூவர்
செல்வ ரெனப்படுவார். 153

நிறைநெஞ் சுடையானை நல்குர வஞ்சும்
அறனை நினைப்பானை யல்பொரு ளஞ்சும
மறவனை யெவ்வுயிரு மஞ்சுமிம மூன்றும்
திறவதிற் றீர்ந்த பொருள். 154

வாய்நன் கமையாக் குளனும் வயிறுரத்
தாயமுலை யுண்ணாக் குழவியும்—சேய்மரபின்
கல்விமாண் பில்லாத மாந்தரு மிம்மூவர்
நல்குரவு சேரப்பட் டார். 155

ஈதற்குச் செய்க பொருளை யறநெறி
சேர்தற்குச் செய்க பெருநூலை—யாதும்
அருள்புரிந்து சொல்லுக சொல்லையிம்மூன்றும்
இருவுலகுஞ் சேராத வாறு. 159

கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி கொண்டன
செய்வகை செய்வான் றவசி கொடிதோரீஇ
நல்லவை செய்வா னரச னிவர்மூவர்
பெய்யெனப் பெய்யு மழை. 157

ஐயகுரவ ராணை மறுத்தலு மாரவுற்ற
எஞ்சாத நட்பினுட் பொய்வழக்கும்—நெஞ்சமர்ந்த
கற்புடை யாளைத் துறத்தலு மிம்மூன்றும்
நற்புடையி லாளர் தொழில். 158

## நான்மணிக்கடிகை.

கள்ளி வயிற்றி னகில்பிறக்கு மான்வயிற்றின்
ஒள்ளரி தாரம் பிறக்கும் பெருங்கடலுள்
பலவிலைய முத்தம் பிறக்கு மறிவார்யார்
நல்லாள் பிறக்குங் குடி. 159

கற்றார்முற் றோன்றா கழிவிரக்கங் காதலித்தொன்
றுற்றார்முற் றோன்றா வுறாமுதல — தெற்றென
அல்ல புரிந்தார்க் கறந்தோன்றா வெல்லாம்
வெகுண்டார்முற் றோன்றாக் கெடும். 160

கண்ணூண்மை வேண்டுங் கடிய பிறர்செய்த
நன்றியை நன்றாக் கொளல்வேண்டும் — என்றும்
விடல்வேண்டுந் தங்கண் வெகுளி யடல்வேண்டும்
ஆக்கஞ் சிதைக்கும் வினை. 161

பறைநன்று பண்ணமையா யாழி னிறைநின்ற
பெண்ணன்று பீடிலா மாந்தரின் — பண்ணழிந்
தார்தலி னன்று பசித்தல் பசைந்தாரில்
தீர்தலிற் றீப்புகுத னன்று. 162

இன்னாமை வேண்டி னிரவெழுக இந்நிலத்து
மன்னுதல் வேண்டி னிசைநடுக — தன்னொடு
செல்வது வேண்டி னறஞ்செய்க வெல்வது
வேண்டின் வெகுளி விடல். 163

அலைப்பான் பிறிதுயிரை யாக்கலுங் குற்றம்
விலைப்பாலிற் கொண்டூன் மிசைதலுங் குற்றம்
சொலற்பால வல்லாத சொல்லுதலுங் குற்றம்
கொலைப்பாலுங் குற்றமே யாம். 164

கோனோக்கி வாழுங் குடியெல்லாந் தாய்முலையின்
பானோக்கி வாழுங் குழவிகள்—வானத்
துளிநோக்கி வாழு முலக முலகின்
விளிநோக்கி யின்புறூஉங் கூற்று. 165

திருவிற் றிறலுடைய தில்லை யொருவற்குக்
கற்றலின் வாய்த்த பிறவில்லை—எற்றுள்ளும்
இன்மையி னின்னாத தில்லையில் லென்னும்
வன்மையின் வன்பாட்ட தில. 166

கரப்பவர்க்குச் செல்சார் கவிழ்தலெஞ் ஞான்றும்
இரப்பவர்க்குச் செல்சார்வொன் றீவார்—பரப்பமைந்த
தானைக்குச் செல்சார் தறுகண்மை யூணுண்டல்
செய்யாமை செல்சா ருயிர்க்கு. 167

பிறக்குங்காற் பேரெனவும் பேரா இறக்குங்கால்
நில்லெனவு நில்லா வுயிரனைத்தும்—நல்லாள்
உடன்படிற் றானே பெருகுங் கெடும்பொழுதில்
கண்டனவுங் காணாக் கெடும். 168

போரின்றி வாடும் பொருநர்சீர் கீழ்வீழ்ந்த
வேரின்றி வாடு மரமெல்லாம்—நீர்பாய்
மடையின்றி நீணெய்தல் வாடும் படையின்றி
மன்னர்சீர் வாடி விடும். 166

நாற்ற முரைக்கும் மலருண்மை கூறிய
மாற்ற முரைக்கும் வினைநலம் தூக்கின்
அகம்பொதிந்த தீமை மனமுரைக்கு முன்னம்
முகம்போல முன்னுரைப்ப தில. 170

மழையின்றி மாநிலத்தார்க் கில்லை-மழையும்
தவமிலா ரில்வழி யில்லை - தவமும்
அரசிலா ரில்வழி யில்லை - யரசனும்
இல்வாழ்வா ரில்வழி யில. 171

யாறு ளடங்குங் குளமுள வீறுசால
மன்னர் விழையுங் குடியுள தொன்மரபின்
வேத முறுவன பாட்டுள வேளாண்மை
வேள்வியோ டொப்ப வுள. 172

கண்ணிற் சிறந்த வுறுப்பில்லை கல்வியின்
நுண்ணிய வாய பொருளில்லை கொண்டானின்
துன்னிய கேளிர் பிறரில்லை யீன்றாளின்
என்ன கடவுளு மில. 173

என்று முளவாகு நாளு மிருசுடரும்
என்றும் பிணியுந் தொழிலொக்கும—என்றும்
கொடுப்பாருங் கொள்வாரு மன்னர் பிறப்பாரும்
சாவாரு மென்று முளர். 174

பழியன்மை மக்காளாற் காண்க வொருவன்
கெழுவின்மை கேட்டா லறிக பொருளின்
நிகழ்ச்சியா னாக்க மறிக புகழ்ச்சியால்
போற்றாதார் போற்றப் படும். 175

ஊனுண் டுழுவை நிறம்பெறூஉ நீர்நிலத்துப்
புல்லினா னின்புறூஉங் காலேயம்—நெல்லின்
அரிசியா னின்புறூஉங் கீழெல்லாந் தத்தம
வரிசையா னின்புறூஉ மேல. 176

கைத்திலர் நல்லராங் கைத்துண்டாக் காவாரின்
வைத்தாரி னல்லர் வறியவர்—பைத்தெழுந்து
வைதாரி னல்லர் பொறுப்பவர் செய்தாரின்
நல்லர் சிதையா தவர். 177

மகனுரைக்குந் தந்தை நலத்தை யொருவன்
முகனுரைக்கு முண்ணின்ற வேட்கை—அகனீர்ப்
பிலத்தியல்பு புக்கா னுரைக்கு நிலத்தியல்பு
வான முரைத்து விடும. 178

தேவ ரனையர் புலவருந் - தேவர்
தமரனைய ரோரூ ருறைவார்—தமருள்ளும்
பெற்றன்னர் பேணி வழிபடுவார் - கற்றன்னர்
கற்றாரைக் காத லவர். 179

சாவாத வில்லை பிறந்த வுயிரெல்லாம்
தாவாத வில்லை வலிகளும—மூவா
திளமை யிசைந்தாரு மில்லை-வளமையில்
கேடின்றிச் சென்றாரு மில. 180

கொடுப்பி னசனங் கொடுக்க - விடுப்பின
உயிரிடை யீட்டை விடுக்க—எடுப்பின
கிளையுட் கழிந்தா ரெடுக்க கெடுப்பின
வெகுளி கெடுத்து விடல. 181

நல்லார்க்குந் தம்மூரென் றூரில்லை நன்னெறிச்
செல்வார்க்குந் தம்மூரென் றூரில்லை—அல்லாக்
கடைகட்குந் தம்மூரென் றூரில்லை தங்கைத்
துடையார்க்கு மெவ்வூரு மூர். 182

கல்லா வொருவர்க்குத் தம்வாயிற் சொற்கூற்றம்
மெல்லிய வாழைக்குத் தானீன்ற காய்கூற்றம்
அல்லவை செய்வார்க் கறங்கூற்றங் கூற்றமே
இல்லிருந்து தீங்கொழுகு வாள். 183

கள்ளாமை வேண்டுங் கடிய வருதலால்
தள்ளாமை வேண்டுந் தகுதி யுடையன
நள்ளாமை வேண்டுஞ் சிறியாரோ டியார்மாட்டும்
கொள்ளாமை வேண்டும் பகை. 184

இளமைப் பருவத்துக் கல்லாமை குற்றம
வளமிலாப போழ்தத்து வள்ளன்மை குற்றம்
கிளைஞரில போழ்திற் சினங்குற்றங் குற்றம
தமரலலா ரில்லகத் தூண. 185

எலலா விடத்துங் கொடைதீது மக்களைக்
கலலா வளர விடறீது—நலலார்
நலநதீது நாணற்று நிற்பிற் குலந்தீது
கொள்கை யழிநதக் கடை. 186

மாசு படினு மணிதஞ்சீர் குன்றாவாம்
பூசிக்கொளினு மிரும்பின்கண—மாசோடும்
பாசத்து ளிட்டு விளக்கினுங் கீழ்தன்னை
மாசுடைமை காட்டி விடும். 187

ஒருவ னறிவானு மெல்லாமயா தொன்றும்
ஒருவ னறியா தவனும்—ஒருவன்
குணனடங்கக் குற்ற முளானு மொருவன்
கணனடங்கக் கற்றானு மில். , 188

# சிறுபஞ்சமூலம்.

பொருளுடையான் கண்ணதே போக மறனும்
அருளுடையான் கண்ணதே யாகும்—அருளுடையான்
செய்யான் பழிபாவஞ் சேரான் புறமொழியும்
உய்யான் பிறசெவிக் குய்த்து. 189

படைதனக் கியானை வனப்பாகு மெண்ணின்
இடைதனக்கு நுண்மை வனப்பாம்—நடைதனக்குக்
கோடா மொழிவனப்புக் கோற்கதுவே சேவகற்கும்
வாடாத வன்கண் வனப்பு. 160

கண்வனப்புக்கண்ணோட்டங் கால்வனப்புச்செல்லாமை
எண்வனப்பித் துணையா மென்றுரைத்தல்—பண்வனப்
கேட்டார்நன் றென்றல் கிளர்வேந்தன் றன்னாடு |புக்
வாட்டானன் றென்றல் வனப்பு. 191

சிலம்பிக்குத் தன்சினை கூற்றநீள் கோடு
விலங்கிற்குக் கூற்ற மயிர் தான்—பலன்படா
மாவிற்குக் கூற்றமா ஞண்டிற்குத் தன்பார்ப்பு
நாவிற்கு நன்றல் வசை 192

நாணிலான் சால்பு நடையிலா னன்னோன்பும்
ஊணிலான் செய்யு முதாரதையும—ஏணிலான்
சேவகமுஞ் செந்தமிழ் தேறான் கவிசெயலும
நாவகமே நாடி னகை. 193

பெருங்குணத்தார் சேரமின் பிறன்பொருள் வவ்வன
[மின
கருங்குணத்தார் கேண்மை கழிமின்—ஒருங்குணர்ந்து
தீச்சொல்லே காமின் வருங்காலன் றிண்ணிதே
வாய்ச்சொல்லே யன்று வழக்கு. 194

மயிர்வனப்புங் கண்கவரு மார்பின் வனப்பும்
உகிர்வனப்புங் காதின் வனப்பும்— செயிர்தீர்ந்த
பல்லின் வனப்பும வனப்பல்ல நூற்கியைந்த
சொல்லின் வனப்பே வனப்பு. 195

வார்சான்ற கூந்தல் வரம்புயர வைகலும்
நீர்சான் றுயரவே நெல்லுயரும்—சீர்சான்ற
தாவாக் குடியுயரத் தாங்கருஞ்சீர்க் கோவுயர்தல
ஓவா துரைக்கு முலகு. 196

அழியாமை யெத்தவமுஞ் சார்ந்தாரை யாக்கல்
பழியாமை பாத்தலயார் மாட்டும்—ஒழியாமை
கன்றுசா வப்பால் கறவாமை செய்யற்க
மன்றுசார் வாக மனை.

பொச்சாப்புக் கேடு பொருட்செருக்குத் தான்கேடு
முற்றாமை கேடு மூராண்கேடு—தெற்ற
தொழின்மகன் றன்னொடு மொற்றாயி னென்றும்
உழமகற்குக் கேடென் றுரை. 198

பொன்பெறுங் கற்றான் பொருள்பெறு நற்கவி
என்பெறும் வாதி வியம்பெறும்—முன்பெறக்
கல்லார்கற் றாரினத் தல்லார் பெறுபவே
நல்லா ரினத்து நகை. 199

நல்ல வெளிப்படுத்து தீய மறந்தொழிந்
தொல்லை யுயிர்க்கூற்றுக் கோலாகி—ஒல்லுமேல்
மாயம் பிறர்பொருட்கண் மாற்றி மனத்தான்
ஆயி னொழித லறிவு. 200

நன்புலத்துள் வையடக்கி நாளுநா ளோர்போக்கிப்
புன்புலத்தைச் செய்தெருப் போக்கியபின்-இன்புலத்த
பண்கலப்பை யென்றிவை பார்ப்படுப் பானுழுவோன்
நுண்கலப்பை நூலோது வார். 201

கீற நன்று கிழனன்று தன்னில்லுள்
பார நன்றுபாத் துண்பதெல்—நேர்பெற
நன்று தளிசாலை நாட்டிற் பெரும்போகம்
ஒன்றுமாஞ் சால வுடன் 292

குளந்தொட்டுக் காடு பதித்து வழிசீத்
துளந்தொட் டுழுவய லாக்கி—வளந்தொட்ட
பாகு படுகிணற்றோ டென்றிவை பாற்படுத்தான்
ஏகுஞ் சுவர்க்க மினிது. 203

தானப்பிறந்த வின்னினைந்து தன்னைக் கடைப்பிடித்துத்
தான்பிற ராற்கருதற் பாடுணர்ந்து— தான்பிறரால்
சாக வெனவாழான் சான்றோரா லெந்நாளும்
ஆக வெனவாழ்க னன்று. 204

புண்பட்டார் போற்றுவா ரில்லாதார் போகுயிர்கள்
கண்கெட்டார் காலிரண்டு மில்லாதார்-கண்கடைப்பட்
டாழ்ந்து நெகிழ்ந்தவர்க் கீந்தார் கடைபோக
வாழ்ந்து கழிவார் மகிழ்ந்து. 205

கழிந்தவை தானிரங்கான் கைவாரா நச்சான்
இழிந்தவை யின்புறா னில்லா—மொழிந்தவை [ரால்
மென்மொழியா லுண்ணெகிழ்ந் தீவானேல் விண்ணோ
இன்மொழியா லேற்றப் படும். 206

தோற்கன்று காட்டிக் கறவார் கறந்தபால்
பாற்பட்டா ருண்ணார் பழிபாவம்—பாற்பட்டார்
ஏற்றயரா வின்புற்று வாழ்வன வீடழியக்
கூற்றயரச் செய்யார் கொணர்ந்து. 207

சத்தமெய்ஞ் ஞானந் தருக்கஞ் சமயமே
வித்தகர் கண்டவீடுள்ளிட்டாங்——கத்தகத்
தந்தவிவ் வைந்து மறிவான் றலையாய
சிந்திப்பிற் சிட்டன் சிறந்து. 208

கண்ணுங்காற் கண்ணில கணிதமெழுத் தியாழின்
றெண்ணுங்காற் சாந்தே யிலைநடுங்கிட்——டெண்ணுங்
இட்டவிவ் வைந்து மறிவா னிடையாய (கால
சிட்டனென் றெண்ணப்படும். 209

கற்புடைய பெண்ணமிழ்து கற்றடங்கினனமிழ்து
நற்புடைய நாடமிழ்து நாட்டுக்கு——நற்புடைய
மேகம்மே சேர்கொடி வேந்தமிழ்து சேவகனும்
ஆகவே செய்யி னமிழ்து. 210

பிழைத்த பொறுத்தல் பெருமைசிறுமை
இழைத்ததீங் கெண்ணி யிருத்தல்——பிழைத்தல்
பகைகெட வாழ்வது பல்பொருளாற் பல்லார்
நகைகெட வாழ்வது நன்று. 211

கதனன்னு சான்றாண்மை தீது கழிய
மதனன்று மாணபில்லா முன்னா——விதநன்றாம்
கோய்வாயிற் கீழுயிர்க்கீ துத்துங் குழாத்தெழுந்த
நாய்வாயு ணல்லதசை. 212

# தாயுமானவர் பாடல்.

அங்கிங்கெனாதபடி யெங்கும்பிரகாசமா
யானந்த பூர்த்தியாகி
அருளொடு நிறைந்ததெது தன்னருள் வெளிக்குளே
யகிலாண்டகோடி யெல்லாம்
தங்கும்படிக்கிச்சை வைத்துயிர்க் குயிராய்த்
தழைத்ததெது மனவாக்கினில்
தட்டாம னின்றதெது சமயகோடிகளெலாந்
தந்தெய்வ மெந்தெய்வமென்
றெங்குந் தொடர்ந்தெதிர் வழக்கிடவு நின்றதெது
வெங்கணும் பெருவழக்காய்
யாதினும் வல்லவொரு சித்தாகி யின்பமா
யென்றைக்கு முள்ள தெதுமேல்
கங்குல்பக லறநின்ற வெல்லையுள தெதுவது
கருத்திற் கிசைந்ததுவே
கண்டன வெலாமோன வுருவெளிய தாகவுங்
கருதி யஞ்சலிசெய்குவாம். 213

எத்தனை விதங்கடான் கற்கினுங் கேட்கினுமெ
னிதயமு மொடுங்கவில்லை
யானெனு மகந்தைதா னெள்ளளவு மாறவில்லை
யாதினும் மபிமான மென்

சித்தமிசை குடிகொண்ட தீங்கையொ டிரக்கமென்
செம்மைத்து நானறிகிலேன்
சீலமொடு தவவிரத மொருகனவி லாயினுந்
தெரிசனங் கண்டு மறியேன்
பொய்த்தமொழி யலலான் மருந்துக்கு மெய்ம்மொழி
புகன்றிடேன் பிறர் கேட்கவே
போதிப்ப தல்லாது சும்மா விருந்தருள்
பொருந்திடாப் பேதை நானே
முத்தனை குணக்கேடர் கண்டதாக் கேட்டதா
மவனியிசை யுண்டோ சொலாய்
அண்டபகி ரண்ட மூட டங்கவொரு நிறைவாகி
யானந்த மான பரமே. 214

தந்தைதாய் தமர்தார மகவென்னு மிவையெலாஞ்
சந்தையிற் கூட்டமிதிலோ
சந்தேக மில்லைமணி மாடமா ளிகைமேடை
சதுரங்க சேனையுடனே
வந்ததோர் வாழ்வுமோ ரிந்த்ரசாலக் கோலம
வஞ்சனை பொறாமை லோபம
வைத்தவுன மாங்கிருமி சேர்ந்தமல பாண்டமோ
வஞ்சனை யிலாத கனவே

எந்தநா ளுஞ்சரி யெனத்தேர்ந்து தேர்ந்துமே
பிரவுபக வில்லாவிடத்
தேகமாய் நின்றநின் னருள்வெள்ள மீதிலே
யானென்ப தறவு மூழ்கிச்
சிந்தைதான் றெளியாது சுழலும்வகை யென்கொலோ
தேடரிய சத்தாகியென்
சித்தமிசை குடிகொண்ட வறிவானதெய்வமே
தேசோமயா னந்தமே. 215

பொன்னை மாதரைப் பூமியை நாடிடேன்
என்னை நாடிய வென்னுயிர் நாதனே
உன்னை நாடுவ னுன்னருட் டூவெளி
தன்னை நாடுவன் றன்னந் தனியனே. 216

கையு மெய்யுங் கருத்துங் கிசையவே
ஐய தந்ததற் கைய மிலரியுண்டோ
பொய்ய னேன்சிந்தைப் பொய்கெடப் பூரண
மெய்ய தாமின்ப மென்று விளைவதே. 217

சோதியே சுடரே சுகமேதுணை
நீதியே நிசமே நிறைவே நிலை
ஆதியேயுனை யானடைந் தேனகம்
வாதி யாதருள் வாயருள் வானையே 218

இரும்பைக் காந்த மிழுக்கின்ற வாறெனைத்
திரும்பிப் பார்க்கவொட் டாமற் றிருவடிக்
கரும்பைத் தந்துகண் ணீர்கம பலையெலாம்
அரும்லைபச் செய்யென தன்னையொப் பாமனே. 219

சொல்லற்கரிய பரம்பொருளே சுகவாரிதியே
சுடர்க்கொழுந்தே
வெல்லற்கரிய மயலிலெனை விட்டெங்கொளித்தாயா
கெட்டேன்
கல்லிற்பசிய நாருரித்துக் கடுகிற்பெரியகடலடைக்கும்
அல்லிறகரிய வந்தகனாக் காளாக்கினையோ வறியே
னே. 220

# அரும்பொருளகராதி.

அ

அகந்தை (214); அகங்காரம், Pride, self-conceit.

அகிலம் (213); எல்லாம், All, the whole.

அங்கண் விசும்பு (4); அழகான இடமகன்ற ஆகாயம், The vast sky, spacious heaven.

அடல் (37); வலி, Power, strength.

அடிசில் (57); சோறு, Boiled rice, food.

அடுதல் (109); சமைத்தல், Cooking, dressing food.

அணிகலம் (148); ஆபரணம், Ornament, jewels.

அண்டம் (214); கோளம், An imaginary shell surrounding the earth and its accompanying sphere.

அண்மை (60); சமீபம், Nearness, proximity.

அதிதி (109); புதியவன், A guest.

அந்தகன் (220); யமன், The god of death.

அம்மை (62); மறுபிறப்பு, The next birth, or future state.

அயர்தல் (207); வருந்துதல், Being distressed, afflicted.

அயிலல் (82); உண்ணல், Eating, taking food, making a meal.

அல் (220); இருள், Darkness.

அவனி (214); பூமி, The earth.

அழற்கதிர் (41); உஷ்ண கிரணமுடையோன். The fiery rayed —the Sun.
அழுக்காறு (143), பொறாமை, Envy, grudging.
அளி (76); அருள், Love, kindness, clemency.

ஆ.

ஆக்கம் (71); செல்வம், Wealth, riches, fortune.
ஆன் (159); பசுமாடு, A cow

இ

இகத்தல்(15); கடத்தல், Departing from, going away from
இசை (64), புகழ், Praise.
இடக்கழியாளர் (25), காமிகள், The lascivious.
இம்மை (62); இப்பிறப்பு, The present birth, the present-state of existence, this life.
இயம் (199), ஓசை, Sound in general. 2. வாத்தியம். Musical instruments 3. சொல், A word.
இருசுடர் (171); சந்திராதித்தர், The two luminaries—sun and moon.
இவர்தல் (123); ஏறுதல், Rising, ascending.
இறைமாட்சி (76); அரசன்பெருமை, Regal dignity, royal excellency.

ஈ.

ஈர்வளை (151); அறுக்கப்பட்ட வளையை அணிந்தவள், (ஈர் Cut, parted asunder, and வளை, a shell) A lady with bracelets made of wrought shell.

உ.

உசா (122), வினவல், Inquiring, examination.

உணர்கிற்பார் (138); அறியவல்லார், Those who are capable of knowig or appieciating.

உதாரதை (193 ; கொடுக்குந்தன்மை, Liberality. munificence..

உம்மை (112), மறுமை, The future state of existence.

உயர்கதி (112); மோட்சம், Heavenly bliss.

உய்தல் (82); பிழைத்தல், Living, subsisting. 2. ஈடேறல், Obtaining heavenly bliss.

உருவெளி (213); நினைத்தது தோன்றும் உரு, An imaginary appearance of a person or other objects.

உரைதிரம்பல் (56 ; சொற்றவறல, Failing in word.

உழுவை (176), புலி, A tiger.

ஊ.

ஊக்கல் (17); முயலல், Prosecuting with energy, commencing with spirit.

ஊங்கு (64 ; மிகுதி, Greatness, importance.

ஊர்தல் (I22 ; செலுத்தல், Driving a vehicle.

ஊன் (I); இறைச்சி, Flesh, animal food.

எ.

எச்சம் (150); சந்ததி, Offspring, posterity.

எய்த்தல் (66); இளைத்தல், Growing weary by exertion, being tired.

எல்லி (18); இராத்திரி, Night.

எவன் (75 ; யாது, What.?

எள்ளுதல் (143); அவமதித்தல், Disregarding, despising, scoffing.

எற்று (69); எத்தன்மையது, Of what kind or sort, of what manner.

ஏ.

ஏண் (193); வலி, Strength.

ஏதிலார் (80 ; அயலோர், Neighbours, strangers, others.

ஏறு 37 ; விலங்கினாண்பொது, The male of beasts, especially the bull, lion, buffalo.

ஒ.

ஒருவுதல் (20); நீங்குதல், Swerving from, deviating.
2. நீக்குதல், Relinquishing, avoiding.

ஒற்கம் (20,74), தளர்ச்சி, Diminution, failure. 2, அடக்கம், Forbearance, restraint.

ஒற்று (79); வேவு, Spying, espionage.

ஓ.

ஓத்து (29); வேதம், The sacred writings, Vedas.

ஓம்பல் (29); காத்தல், Preserving, protecting, taking care of.

ஓர்தல் (79); ஆராய்தல், Finding out, knowing.

க.

கடிய (184 ; குரூரமானவைகள, Things that are sever painful results.

கடு 44 ; நஞ்சு, Poison, venom.

கடைப்பிடித்தல் (204 ; உறுதியாகக்கொள்ளல், Embracing or taking firm hold of.

கட்டி (147); கருகண்டு, Sugar-candy, jaggery.

கட்டுரை (78); உறுதிச்சொல், Earnest or vehement address, or advice.

கணா (188 ; குற்றம் - அதாவது சந்தேக விபரீதங்கள் Faults in study, *i. e.*, scruples and aptness to put wrong construction.

கண்ணறையன (91), தாக்ஷிணியமில்லான், A pitiless man, a hard-hearted person.

கண்ணோட்டம் (86 ; தாக்ஷணியம், Civility, complaisance kindness.

கம்பலை (219); ஒலி, Noise.

கம்மியன் (92); கம்மாளன், A smith.

கருங்குணம் (194); பேதமை, Ignorance.

கருதற்பாடு (204; மதிப்புடைமை, Being worthy of regard.

கலிமா (31); (contracted form of கலினமா, கலினம், Bridle and மா, Beast,) குதிரை A horse.

கலை (61); கல்வி, Learning, erudition, literature, philosophy. 2 ஞானநூல், Theological treatises.
கவயமா (97 ; காட்டுப்பசு, The gayal or wild cow.
கவல் (61); கவலை, Care, affliction.
கவறாடல் (53 ; சூதாடல், Gaming with dice.
கழகம் (74); கல்விபயிலிடம், A college, an assembly of learned men.
கழறல் (6); பேசல், Saying, telling, declaring.
கழிவிரக்கம் (160); கழிந்ததைப்பற்றி இரங்குமிரக்கம், Grieving for what is gone.
களி (114); மயக்கம், Bewilderment, aberration of mind, intoxication whether from liquor or circumstances.
களிறு (82); ஆண்யானை, A male elephant.
கள்ளாமை (184); களவுசெய்யாமை, Avoiding theft, refraining from thievish habits.
கற்றா 1,977); கன்றையுடைய பசு, A cow with a young calf.

கா.

கா (153); தோப்பு, A grove.
காமுறல் (13); ஆசைப்படல், Desiring, wishing for, loving
காலன் (194); காலக்கடவுள், Yama, the god of death.
காலேயம் (176); பசுக்கூட்டம், A herd of cows.
கான்யாறு (1); காட்டாறு, A jungle river.

கி.

கிருமி (215); புழு, Worm, reptile.
கிளர்தல் (125); பிரகாசித்தல், Shining, glaring.
கிளை (82); சுற்றம், Kindred, relatives.
கிளைஞர் (185); உறவினர், Kindred or friends.

கு.

குதலை (58); மழலைச்சொல், Lisping or prattle of children.
குழவி (6); குழந்தை, An infant, baby.

கூ.

கூடம் (68) சம்மட்டி, A blacksmith's hammer, sledge.
கூற்று (165); யமன், He who separates the soul and body, the god of death.

கே.

கேண்மை (18), நட்பு, Friendship
கேள் (140), நட்பு, Friendship.

கை.

கைத்து (177), செல்வப்பொருள், Wealth, riches, possession.
கைம்மாறு (47), பிரதியுபகாரம், A recompense, return for favours.

சையுறல் (75); வெறுக்கப்படல், Being disliked, being regarded with aversion.
சைவாரம் (206), ஸ்துதி, Praise, benediction.

சொ.

சொகுறு (95); கன்னம், cheek, the jaws, mandibles.
சொற்பொய் (150); கொடுமை, Injustice.
சொலிதல் (83), எரிதல், Kindling, inflaming.
சொக்கே (146), வீணாக, Uselessly, in vain.

சோ.

சோரம் (80); குற்றம், Fault, error, defect.
சோடல் (2); வளைதல், Bending, swerving, deviating
சோட்டிசெல்லல் (31; சபைக்குப்போதல், Going to an assembly.
சோவலன் (140; பலவான், A strong man.
சோற்முறை (14): ராஜ்யபரிபாலனம், The right administration of government.

ச.

சத்து (215; உண்மை Truth, reality. 2. மெய்ப்பொருள், The real universal spirit.
சமயகோடிகள் (213; அளவிறந்தசமயங்கள், Numberless systems of religion.

சலவர் (11), ஈரகமேகாபமுடையார், The revengeful, the malicious those who cherish implacable hatred.

சா.

சாலுதல (196), நிறைதல், Becoming full, being complete or replete.

சால்பு (81), மேன்மை, Nobleness, excellency.

சாலுருமைடை 142; ஊக்கம், Energy, spirit.

சி.

சிகிழ (98), விஷம், Poison, a kind of mineral poison.

சிலம்பி (192); சிலந்தி, A spider.

சிறை 79, மதில். A wall.

சினம் (59), கோபம், Anger.

சு.

சுரநீர் (43); ஆகாசகங்கை, The celestial Ganges.

சுழல்காற் (42); சுழிகாற்று, Whirlwind.

சூ.

சூழ்தல 124, ஆலோசித்தல், Deliberating, considering.

செ.

செயிர்த்தல 94, கோபித்தல், Being angry, indignant.

செரு (141); சண்டை, Battle, war.

செல்சார் 167); பற்றுக்கோடு, Protection, refuge, resort, asylum.

செறல் (22); கோபித்தல். Being angry with, hating.
செற்றம் (121); கோபம், Anger, wrath.

சே.

சேய்மை (60); தூரம், Distance, remoteness.
சேர்ப்பன் (124; கடற்கரைக்கு அதிபதி, Ruler of a maritime district, any king of the Pandia dynasty.

ஞா.

ஞாலம் (11); பூமி, The earth, the world.

த.

தகர்தல் (68); பிளத்தல், Being fractured, shivered, broken.
தருக்கல் (146); கருவித்தல், Being vain elated, proud.
தறுகண்மை (167; தாக்ஷிண்யமில்லாமை, Cruelty, savageness, warlike disposition.

தா.

தா (139); கேடு, Decay, destruction.
தாளாளன் (140), வர்த்தகன், A merchant, a man of enterprize, application.
தானை (167); சேனை, An army.

தி.

திறவு (154); நீக்கம், Separation.

து.

துச்சில் (20), ஒதுக்கிடம், Shelter, place of retreat.
துணித்தல் (91), வெட்டல், Cutting off.
துலை (71), தராசுத்தட்டு, Scales of a balance.
துறை (58), விஷயம், Subject, a branch of science.
துவன்றல் (31), நெருங்கல், Being close, thick, crowded together.

தூ.

தூக்குதல் (71), நிறுத்தல், Weighing, ascertaining the weight

தெ.

தெற்றென (100), தெளிவாக, Clearly, certainly, evidently.

தே.

தேசோமயம் (215), ஒளிமயம், Splendour.

தொ.

தொடுதல் (173), தோண்டுதல், Digging, scooping out, excavating.

ந.

நச்சுதல் (143), விரும்புதல், Desiring, longing for, loving.
நட்டார் (10), சிநேகிதர், Friends.
நண்ணல் (26), சார்தல், Adhering, being attached to or united with.

நமர் (123), நம்முடையவர்கள், Our people.
நள்ளல் (56), சினேகித்தல், Loving cultivating friendship

நா.

நாகரிகம் (91) ...ப்பாடு, Refinement of manners, politeness, civility
நாவாய் (151) மரக்கலம், A vessel, ship
நாறுமை (7) ... முளையாமை, Not springing forth not shooting up.

நி

நிதி (63) திரவியம். 1 ... 2 ..., Culness. 3 நவமணிகளில் ஒன்று, Any of the nine gems.

நெ

நெய்தல் (109), நீர்ப்பூக்கொடிகளில் ஒன்று A class of water flowers—Nymphoea alba.

நே.

நேரிழாய் (18), தகுதியான ஆபரணமுடையவளே, O Lady fitly ornamented.

ப.

பகிரண்டம் (214), வெளியண்டம், The universal space surrounding the mundane egg.
பசைந்தார் (162), உள்ளன்பினர், Friends, sincere friends.

பா[illegible]ரை (70), [illegible], Tread.

பண் (102), [illegible], Good quality, propriety, fitness. 2 இசைப்பாட்டு, Melody [illegible]

பண்ணமைதல் (32), [illegible]தல், Being attuned or adjusted as one [illegible] to another.

பதி (65), இடம், Place, location.

பய (95), அச்சம், Fear, [illegible] apprehension, alarm.

பரிதல் (4), [illegible], Commiserating, pitying, sympathizing.

பறைபறைதல் (79), பறை [illegible], Beating a [illegible]

பா.

பாகன் (122), சாரதி, A driver, charioteer.

பாசம் (187), தளை, Fetter, tie, bandage.

பாத்தல் (197), பகுத்தல், Distributing, sharing with.

பாயிரம் (129), வரலாறு, Account, history.

[illegible]ரப்பு (192), குஞ்சு, The young of frogs, toads, lizards, crabs, etc.

பால் (142), பக்கம், Side.

பாற்பட்டார் (207), [illegible]ருத்தறிவுடையோர், The discriminating, the judicious, the knowing.

பி.

பிழைப்பாடு (85), தப்புதல், Failure, fault, error.

பிறழ்தல் (56), வேறுபடுதல், Changing in form, colour, aspect or quality, commonly for the worse.

பிறைநுதால் (49); பிறைபோன்ற நெற்றியையுடையவளே, O maiden with forehead arched like the crescent moon.

பீடு (162); பெருமை. Honour, greatness, dignity.

புணை (21); தெப்பம். A float, raft.
புதல்வன் (96); மகன், A son.
புயல் (87); மேகம், Cloud.
புலால் (61); இறைச்சி, Flesh.
புலையன் (61); சண்டாளன், A low degraded man, a villain.
புறக்கடை (64); தலைவாயல், The main gate to a city, castle, house, &c.
புறம் (89); கொல்லை, An enclosed garden, a close, a field.
புனைதல் (52); அலங்கரித்தல், Ornamenting, adorning, decorating.

பூர்த்தி (213); நிறைவு, Fulness, completion, perfection of bliss arising from absorption with the deity.

பெ.

பெருஞ்சுட்டு (73); மதிப்பு, Great distinction, being highly distinguished.

பே.

பேறு (35); பயன், Gain, benefit, a good obtained, acquisition.

பை.

பைங்கண் (89); பசுமையான இடம், A verdant place.
பைங்கூழ் (89 ; பயிர், Green growing crop.

பொ.

பொச்சாப்பு 198 ; மறதி, Forgetfulness, loss of memory.
பொடித்தல் (88); புளகித்தல். Bristing as the hairs. o the body.
பொருநன் (169 ; போர்ச்சேவகன், A warrior, soldier, hero.
பொலிதல் (34 ; மிகுதல், Growing full, swelling.

போ.

போது(53); மலர், A flower, a flower bud ready to open.

ம.

மடுத்தல் (81); உண்ணல், To eat or drink
மண் (32); மார்ச்சனை, A black substance smeared on a drum to increase its sound.
மயரி (12); மயக்கமுடையவன், One whose mind is confused.
மயலி (6); மயக்கமுடையவள், One who is infatuated.

மறம் (54); பாவம், Sin, evil, vice.
மறவன் (154); கொலைஞன், A murderer.
மறை (62); வேதம், The Vedas, sacred writings.
மன்று (150); சபை, A court, assembly room.

மா.

மா (192); மிருகம், A beast, an animal.
மாசுணம் (81); பாம்பு, A snake, a rock-snake, large serpent.
மாண்பு (5); நற்குணநற்செய்கை, Virtue, moral excellence.
மாநிதியம் (77); பெருந்திரவியம், Great wealth.
மாய்தல (127); சாதல், Dying, perishing.
மாராயம் (2); சந்தோஷம், Compliment, congratulation

மி.

மிசைதல் (164); உண்ணுதல், Eating.

மீ.

மீச்செலவு (71); வரம்புகடந்த நடக்கை, A passing beyond, forward behaviour.

மு.

முகமன் (34); உபசாரம், Flattery, officiousness.
முட்டு (102); தடை, An impediment, an obstacle
முதுக்குறைவு (80); பேரறிவு, Great knowledge, wisdom.

முதுமக்கள் (12) முதியோர், The aged the elderly.
முந்நீர் 145), கடல் The sea, as containing three different kinds of water—rain water, river water and that of the abyss

முரண்ல (62, வேறுபடல், Being at variance.

மு

முரிவெருந்து (28,, கோ u ரன் வருந்து A lizy ox

மெலியார் (69, ஆற்றலவர்கள் I d u 1, t u, the impoverished.

மே

மேதை (14), புத்தி, Reason, understanding discretion, mental capacity

மோ.

மோனம (213 மௌனம், Silence muteness.

ய

யாத்தல 25, கட்டுதல், Binding.

வ

வண்மை 24); ஈகை Liberality.
வயப்படை (76, வெற்றிதரத்தக்க ஆயுதம், Conquering arms, winning weapons.

வருவாய் (141); வரும் படிப்பொருள், Income, resources.
வரை (123; மலை, A mountain.
வலக்கை (3); நாணமிலவான், A man devoid of shame.
வவ்வல் (12; அபகரித்தல், Taking away, taking by force.
வளி (131); பெண்களின்காதணி, (Abbreviation of வாளி;, A female ear ornament.
வள்ளன்மை (185; ஈகைத்தன்மை, Liberality, munificence.
வனப்பு (26; அழகு, Beauty, comeliness

வா.

வாதி (199; வீண்வாதம் செய்வோன், A caviller, a captious disputant.
வாரிதி (220); கடல், The sea, the ocean.
வார் (196; நீட்சி, Length.

வி.

விதிர்த்தல் (95); நடுங்குதல், Trembling quivering.
வியப்பித்தல் (72; நன்குமதிப்பித்தல், Causing to be esteemed, causing to be wondered at.
வியன்கோல் (48); பெரியதடி, A heavy club.
விறகு (90); விறகு, Fuel, firewood.
விரைதல் (48); சீக்கிரப்படல், Hastening, passing rapidly.
விலங்கு (192; மிருகம், Beasts in general.

[illegible] ([illegible]) [illegible], The [illegible]xcellent, the great, the [illegible] [illegible]us.
[illegible] 16 [illegible]

[illegible] 43, [illegible]

வெ

[illegible] (1[illegible]) [illegible], Un[illegible]censed, in[illegible]ligation.
[illegible] 14, [illegible] A [illegible]
[illegible] 14; [illegible], D[illegible]ing ardently [illegible]
[illegible], [illegible], A [illegible]
[illegible] 7[illegible], A large [illegible]me.

வே.

வேந்தன் (52): அரசன், A king.

வை.

வைகலும (113), [illegible], Day by day, daily
வைகுதல் (53), தங்குதல், Staying.

ஸூரிய நமஸ்காரம்

# சூரியப்பாமாலை.

களிப்பினிகள் — நன்மையிகள்
சூரியோபாசகர் அனைவருக்கும்
செப்பத்தகும்

ஸ்ரீ குருநாதசுவாமிகளினதும்
திருப்புகழ்சுவாமிகளினதும்
வழுத்தி

மதுரை - வண்ணச்சரபம்
ஸ்ரீலஸ்ரீ தண்டபாணி சுவாமிகளால்
இயற்றப்பட்டு

சென்னை
த. மு. கந்தசாமி செட்டியார்
பொருளுதவிகொண்டு
பதிப்பிக்கப்பட்டன.

இரத்தாக்ஷிவருஷ இடபரவி

MADRAS
P. R. RAMA IYAR AND CO.,
PRINTERS

உ

குருவே துணை

# பதிப்புப் பாயிரம்

## அறுசீர்விருத்தங்கள்

இந்நூலாசிரிய சுவாமிகள் குமாரர்

## தி. மு. செந்திநாயகம் பிள்ளை

அவர்கள் இயற்றியது

திருவருண்மா மணங்கமழுஞ் சந்தவண்ணச் சரப
மெனச் சிறந்தவெங்கள், குருபரனூ தண்டபாணிப்
பெரியோன் வானிடத்துக் குலவுமென்றாழ், பொரு
வருமெய்ப் பாமெனுமுண் மையையுலகிற் பகருவார்க்
குப் புகட்டுமேன்மைத், தெருண்மலிசூ ரியமாலை புத
யோச்சாத் தமனமெனுந திரங்கடோன்ற. (க)

மூன்றுவித மகுடமுறப் பப்பத்தாப் பிரிதருகவி
முப்பதாகத், தோன்றுறச்சொற் றொருபதிகத் தொடு
மூன்று தொகைப்பதிகந் துதித்திட்டன்பால, வான்
றுதிக்கக் குருபாதத் துவத்திருநா லிடைசவுர பார்க்
கத்தன்மை, யூன்றுசூ ரியதெரிசனச்சருக்க மறுபவமா
புரைத்ததன்றி. (உ)

## பதிப்புப்பாயிரம்

கவையாரப் பத்திகாண் டத்தினிடை யிரவியின்சீர் கழறியாரும், பவுராணி கங்கடந்த ஞானமுறச் சொலும் விதியும லருநதேற, விவுலோகத் தினிலச்சிட் டுதவி யழி யாட் புகழ்ச்சி யிசையக்கொண்டான், மவுனகுரக் குருவா முருகனரு ளாற்பொருட்சீர் வாய்ந்ததூயன்.

வைசியர்தங் குலத்தினுக்கோர் மணிபோல்வான் முனிசாமி வண்பேர்த்ததந்தை, கைசிறந்த குமாரனென னத் தோன்றியுணர் வுறுதியன்பு கனிந்துவாழ்வோன், மெய்சிறநத குணசீலன் கந்தசாமிப்பெயரால் விளங்கு தீரன், பொய்சிறந்தோர்க் கிகலாவா னெனக்கதிக மன வுரிமை பொருந்தினேனே. (௪)

## குருபாதமேகதி

உ

சூரியமூர்த்திசகாயம்

# சூரியமாலை.

## காப்பு

வெண்பா.

சீரியநல்லோர் தினந்தோறும் போற்றுமசக்குஞ்
சூரியமாலைப்பனுவல் சொல்வதற்கு — நாரியர்கஞ்
செங்கயற்கட் பார்வையினூற் சிந்தைமருளாகார்
பங்கயத்தாண் மென்றுகள்காப் பாம்.

## உதயம்.

வேதாகமங்கள்பல கோடிக்கு நன்னே
விளைந்துள்ள தொண்டருக்கும்
விண்ணூதி யாமைந்து பூதங்களுக்கு மேவது
விதமாய மற்றெவைக்கு

நீதான் முதற்பொருளெ னத்தெளிந் ததுமன்றி
நின்னருட் கிரணவொளியா
னினைகின்ற படியெண்ணில் கடவுளுண்டாயழியு
நிச்சயமு மறிவ தெளிதோ
சீதாரவிந்தநறு மலருக்கு மெய்த்தவசு
செய்கின்ற சிந்தைக்குநூல்
செபபியவிதிப்படிசெ ருக்களத் தமர்புரி
திறததோர்க்கு மினியதேவே
பாதாளலோகத்தி லுள்ளவர்கண் மன்னனும்
பகரரிய பெருமையானே
பலவிதக தன்பர்களும் வழிபடற் கண்டிணையில்
பகல் விளக்கும பரிதியே. (க)

நன்னிலை பெறுஞ்சமைய நூல்களெல்லாமினிது
நமதுமெய்க் கடவுள்கொள்ளு
நயனமென்றேபகரு நின்புக ழுதைக்கருதி
நாலுரைத்திடுவதெண்ணிற்
றன்னிகர் பெருங்கடலை யொருநாய்தன் வால்கொண்டு
சலியா தளப்பதொக்குந்
தமியேனை யெள்ளாம லுன்னடியர் தம்மடியர்
தம்மோ டிருக்க வைத்தா

ளென்னிருகண் மணியாகி யெநதவகை யுயிருக்கு
மிவ்வா றிருநத வொளியே
யெழின்மதியை யுண்டுண்டு மிழ்நதுவிண் ணூடுலவி
யாவைக்கு மின்ப மருள்வாய்
பன்னிரு தெருத்தொறும பவனிவரு தெய்வமே
பகாரிய பெருமையானே
பலவிதத தன்பர்களும வழிபட றகண்டிணையில்
பகல் விளக்கும பரிதியே. (௨)

திருமலையின மேலுற் றனைக்காரங்கூப்பித
திடககார னொருவனருகிற
றெண்ட னிட்டிடுகாத் தொடுநிறகவன்கலிற
றேகம பொருநத நீண்டு
மருமலரை யொததவிரு கைகுவிநத திருகவிதை
வாயாலு மோதி யொருவா
மனதிற் றியானித தருண்டும் பிழைததவொரு
மனிதனுந துயர் கொள்வதே
னிருமல நிரஞ்சன நிராதார மாநிற்கு
நெஞ்சினுங் குலவு நிசமே
நிகரிலா ஞானச்சு யஞ்சோதியேயுண்மை
நீதிநூற் கினிய பொருளே

பருமலர் தனக்குமென் சிந்தைக்கு நாயகா
பகாரிய பெருமையானே
பலவிதத் தன்பர்களும் வழிபடற் கண்டிணையில்
பகல் விளைக்கும் பரிதியே. (௩)

போதத்தினுஞ்சகல நாதத்தினும்புலவர்
புகல்கின்ற பொய்மெய்யினும்
புத்தியொடு சித்தியினு முத்தியினு மற்றுமுள
பொருள்வகைய னேகத் தினும்
பேதத்தொடுஞ்செல்லு மென்னெஞ்ச நின்னன்பு
பேரா திருக்கும் வண்ணம்
பிரியத்தி லுள்ளபடி வேறுமொ ருருக்கொண்டு
பேணுவது கடமை கண்டாய்
வாதத்தினிற்சற்று மிளையாத பலசமைய
வாணரும் வணங்கு மொன்றே
மதியாய மனைவியுட னுடுவின மெனப்பகரு
மக்களுங் கொண்ட சுடரே
பாதத்து கட்சுமை யெனக்குடைமை கண்டவா
பகாரிய பெருமை யானே
பலவிதத் தன்பர்களும் வழிபடற் கண்டிணையில்
பகல் விளைக்கும் பரிதியே. (௪)

இச்சைக் கடற்குட் கிடக்கின்ற தமியேனை
யெள்ளமலனு முதலைகொளவி
யீர்க்கின்ற படியா லுனைத்தெண்டனிட்டேனெ
னெள்ளள விரங்குவாயேற்
பிச்சைப் புசிப்புண்டு மாதவம் புரிவோர்
பெருங் குழாமாகி யுலகிற்
பேசரிய பலகோடி விளையாடல் செயுநலம்
பெற்று மகிழ்வேனல்லவோ
கச்சைக் கிழித்துப் புடைகறுப பரந்திலத்
கனதனத் தரிவை நல்லார்
கண்வலைக் கஞ்சாத நெஞ்சங் கடப்பக்
கவின்றருங் கதிர் வட்டமே
பச்சைப் பரித்தேரி வர்ந்துவரு முதல்வனை
பகரரிய பெருமை யானே
பலவிதத் தன்பாகனுமை வழிபடற் கண்டிணையில்
பகல் விளக்கும் பரிதியே. (ரு)

தவமே முயன்றுனைத் தெண்டனிடுமேலவர்
தீமைக்கண்டு நாணுறுதார்
சருவசித்திகளுமபொ யென்று நிந்திக்குமத்
தருணத்தி லென்றனுள்ள

மவமாவருந்திக் கொதிப்பதித் தனையென்
றறைந்திடற் பாலதன்றென்
றறிதியேலின்னமு மிரங்காதிருப்பதே னையகோ
வென் செய்குவே
னவநாத சித்தர்களும் மற்றுமுள முத்தர்களு
நாடிப் பணிந்த சுடரே
நால்வகை யுயிர்த்தொகை யனைத்திற்கு முயிராகி
நாடொறுங் குலவு மிறைவா
பவவேத னைப்பிணி தவிர்த்தருளு நம்பனே
பகாரிய பெருமையானே
பலவிதத் தன்பர்களும் வழிபடற் கண்டிணையில்
பகல்விளக் கும்பரிதியே. (சு)

வாரணக் கோடனைய கொங்கைகண் டெனதுள்ள
மறுகுவது மொருந்தும்
வஞ்சகப் புலையர்பெரு வாழ்வுறுத லெண்ணிமிகு
மானமுற் றுருல்குவதுநற்
சீரடைந் தவர்மகிமை யுலகஞ்சொலிற்கொடிய
தீநிகர்பொறுமை கொண்டு
திட்டுவது மனையபல செய்கைகளு முணருநின்
றிருவுள மிரங்கிடாதோ

காரருந் தும்புன லுவர்ப்பைத் தவிர்க்குங்
கதிர்த்தொகை விரிக்குமணியே
ககனவட் டத்தினடு வட்டத்தி னூடிலகு
கனல்வட்ட மானமுதலே
பாரனைத் தும்பொதியும் வெயிலுடைக் கடவுளே
பகரரிய பெருமையானே
பலவிதத் தன்பர்களும் வழிபடற் கண்டிணையில்
பகல்விளக் குப்பரிதியே. (௬௭)

கண்கொண்டு காணரிய கடவுளரை யெண்ணிக்
கரங்குவித் திட்டபேருங்
காசினியி லெண்வகைச் சித்தியும் பெற்றுக்
களிப்புற் றிருந்துபின்ன
ரெண்கொண்ட நெஞ்சந் தவிர்ந்தபர மானந்த
மெய்தினு ரென்னு மொழிகேட்
டிசைவதற் கையமுற் றெதிருறு முனைத்தொழு
மெனக்கருள் கிடைப்பதென்றோ
விண்கொண்ட வாழ்வினர்க ளென்றுபல நூல்களும்
விளம்புவது நின்னையன்றி
வேறலவெ னப்பரவு மெய்யர்விழி யொளியளவில்
வேறுமொரு வடிவுகொள்வாய்

பண்கொண்ட வண்டுதுயில் பதுமமலர் சமுகனே
பகரிய பெருமையானே
பலவிதத் தன்பர்களும் வழிபடற் கண்டிணையில்
பகல்விளைக் கும்பரிதியே. (அ)

புதலும பற்த்துநுகர் மேடத்தை யுங்கொன்று
புண்ணைய ஊனெடுத்துப்
புலவர்வந் துண்ணுவது கண்டவர்கள் போலப
புலம்பியதை வெநதருநது
மதவாத ருக்கடிமை யாகிக் கிடப்பவரு
மதியாமை கண்டு நெஞசம
வாடிக் கொதிக்குமெனை யருளாண்மை பெற்றுலகின்
மகிழ்கூர விடுவதுண்டோ
விதமா யிரங்கோடி யானசமைய யத்தெவரு
மெச்சிடக் குலவுமணியே
வெய்யநர கத்திடை குளிக்கின்ற வினையினர்
விரும்பாத விண்விளக்கே
பதசார மநுமனுக் குரைசெய்த குரவனே
பகரிய பெருமையானே
பலவிதத் தன்பர்களும வழிபடற் கண்டிணையில்
பகல்விளைக் கும்பரிதியே. (கூ)

எக்குலத் தோரெனினு மூனருந் தாதவர்க
ளெனினுயர்ந் தோர்களென்று
மெண்ணினுயிர் கொல்லுந் தொழிற்காரர் தந்தலைக்
கிடையனையர் கூரவரென்று
நெக்குநெக் குருகியுங் கதறியும் வணங்குமவர்
நிகரற்ற தொண்டரென்று
நெஞ்சகத் தாட்கருதி நிற்கின்ற நிலையுணரு
நீயிரங் காததென்னோ
கைக்குளுறு நெல்லிக் கனிக்குநிக ராமெனக்
கருதுவ தளிக்குமொன்றே
கனலோடு மதியமு முடுக்களுந் தன்னுட்
கலந்தமை யுணர்ந்து கதிரே
பக்குவமு திர்ந்தவர்க ளேயறிய நின்றவா
பகரரிய பெருமையானே
பலவிதத் தன்பர்களும் வழிபடற் கண்டிணையில்
பகல்விளக் குமபரிதியே. (௰)

## உச்சம்.

வேறுமகுடம்

புரவி யேழுடையதனி யிரதத்திலேறிப்
பொருப்பைவல மாவையென்னப்
புகல்கின்ற பேருமசை யாதுறுவை யுலகமே
போய்வருமெனச்சொல்வோருங்
காவினர்க ளென்றெண்ணி நடுநின்று நின்னைக்
காங்குவித் தேத்துமென்றன்
கண்ணொளி மழுங்காத வண்ணமொரு குருவாக்
கவின்றரவி ரங்கலென்றே
பரவிப் பணிந்தவர்கள் வினையெலா நசிவுறப்
பார்க்குமொரு பார்வையானே
பத்தியி லழுந்தாத படிறருக் களவற்ற
பவவேலை யுதவுமிறைவா
விரவியென் றொருபெயர் புனைந்தமணி யேயினையி
விருள்வலி கெடுக்குமெநதா
யேக தத்துவமாகி வாணிலுற் றாசாளு
மீடின்மெய்ப் புகழாளனே. (௱க)

புண்ணிலிடு கோலென்ன மதவாதர்சொல்வந்து
புந்தியிற் றைக்குநோவாற்
பொருவிலெண்சித்தியும் பெற்று விளையாடிப்
புகழ்க்கடல்விளைத்த பின்னர்
விண்ணிலதுவாயொழித லொடுநின் சந்நிதியின்
மேவிக்காங் குவித்தேன்.
வெள்ளிபொன்னுள்ளவரு மெள்ளும் படிக்கென்னை
விடுவதுவு முறைமைதானோ
கண்ணிலுயிருந்தன்னை யுணரும்பொருட்டே
கனற்கதிர் விரித்தபரனே
கமலமதிலு றுபருவ மலரனைய வுண்மைக்
கருத்துக்கிசைந்த பொருளே
யெண்ணிலுடுவுஞ்சசியு மெலிய வருபரிதியே
யிருள்வலி கெடுக்குமெந்தா
யேகதத் துவமாகி வானிலுற் றரசாளு
மீடின்மெய்ப் புகழாளனே (௰௨)

கல்லோடு மொப்பென வுரைக்கரியவன் னெஞ்சர்
கல்லைப்படுத்த மெலியுங்
கடையேனை நின்னடியர் கூட்டத்திலுற்றுக்
களிப்புற வமைத்தளித்து

வல்லோ வெனுங் கொங்கை மடவாரை யெண்ணிமன
மறுகாதஞான நல்கி
மற்றுமோ ருடல்கொண்டு வாடாத வீடதனின்
மன்னுறச் செய்வைகொல்லோ
பொல்லோர் விதித்தபர சமையங்களும்பரவு
பொற்புமிகுவட்டமான
புண்ணியப பொருளே முதிர்நத மெய்த்தவராசர்
போதத்தினிக்கு மமுதே
யெல்லோர் விழிக்குமெதி ரெதிரிலகு பெருமையா
யிருள்வலிகெடுக்குமெநதா
யேகதத துவமாகி வானிலுற் றரசாளு
மீடின்மெய்ப புகழாளனே (௰௫)

கஞ்சாவபின்கள் ளரக்குண்டபேருங்
கழித்திகழு மருள் பிடித்துக்
காசினி யெலாமொருங் கழுமாறு செய்வார்
கணம் படுகளத்திலோடுஞ்
செஞ்சாறு நீநதிக்களிக்கு முழுவீரரைத்
தெரிசனஞ்செய்ய நாடுஞ்
சிந்தனை யளித்த நீ யென்றைக்கிரங்கியருள்
செய்வாய் கொலறிகின்றிலே

னஞ்சாத வைராக முற்றவர்களுள்ளத்தி
லகலாது நின்றபொருளே
யம்புலிதனைப் புணர்ந்தாருயிரத் திரள்பெருகி
யகில நிறையச்செய்குவா
யெஞ்சா நலங்குலவு மன்பருக்கினியனே
யிருள்வலி கெடுக்குமெந்தா
யேகதத் துவமாகி வானிலுற் றாசாளு
மீடின்மெய்ப் புகழாளனே. (௰௪)

மந்திர மொழிந்துசில வடிவங்குறித்துமிக
வழிபட்டு முன்னை நாடி
மலைமீது நின்றுருண்டும் பனுவல் பலபாடி
வாரியொடு தீயிலிட்டு
மெந்திரமெனச் சுழலு மனமுநிலை பெறவில்லை
யின்னற் பெருங்குவைக்கு
ளெள்ளளவு நீங்கவிலை யினியென்ன செய்யலா
மென்றுழல்வதறி கிலாயோ
தந்திர முயன்று கெடுமவருணர்வதற்கரிய
தபனனென நின்ற மணியே
சதகோடி மாதவர்கள் பதமலர்த் துகளுமென்
றலையிலுறவைத்த சுடரே

யிந்திரன் முதற்குலவு பல தேவமானவா
விருளவலி கெடுக்குமெந்தா
யேகத்த துவமாகி வானிலுற் றாசாரு
மீடினமெய்ப் புகழாளனே. (ώரு)

வழிபட்டு நிற்குமவரெண்ண முற்றுதவுதனி
வள்ளலென் றுன்னை நாடி
மாநிலமுறப் பணியு மென்றற் கிரங்கியொரு
வரமளித் தாண்டுகொண்டால்
விழியுற மேதிக்கடா வெனவுழப்புமவர்
வீறடங்கப் புரிந்து
மெய்த்தொண்டரானந்த வேட்டையிடை மூழ்கிட
விடுத்துனை வழுத்திடேனோ
பொழிலிறசிறந்த குழலுடைய குந்திக்கினிய
புருடனென வந்தபரனே
பொருகளத்திற ராடியம்காலரசா முடிகோடி
புரளமுன் கண்ட பொருளே
யெழிலிக்கணங்களுக் குபிரனைய செல்வனே
யிருள்வலி கெடுக்குமெந்தா
யேகத்த் துவமாகி வானிலுற் றாசாரு
மீடின் மெய்ப்புகழாளனே (ώசு)

வெவ்வுரகவிடமனைய சொற்பகரும வமபாகரு
மெய்த்தெய்வமான வுன்னை
யிட்டுவெவ்வேறு பல கடவுளருளாரென
விளம்பிக்குழம்பு நாகரு
மாவ்வுவன மற்றேதுமில்லா தெழுந்தமூலை
யுடைய மடமாதருக்கு
நள்ளமொல் கிததளரு மென்றறகிரங்கியரு
ளுதவுதின மொன்றுள்ளதோ
வளவுமவை யெல்லாம வணங்குமவா பெறநுவகை
வாரியிடைமூழ்க விடுவாய்
றைகோடி கெட்டனவும வாழ்வனவும வருவனயும
வதநிக்கும வண்மையுடையா
யவ்வுயிர்களுக்குமோ ருயிராய சோதியே
யிருள்வலி கெடுகதமெந்தா
பகதத துவமாகி வாணிலுற றாசரு
மீடின் மெய்ப் புகழாளனே (௱௭)

ஏளரிய பலவகைச் சுருதியினு முலகினர்
விருமபுநெறி களினுமற்ற
கார மெவறறினு மயங்காம லுன்னையே
மெய்ப்பொரு ளெனத்தெளிந்து

கள்ளரிய தமிழ்கொண்டு பாடிப் பணிந்துந்
    தயங்குறு மெனக்கிரங்கித்
காணரியிற் குருவாகி வந்தருள் புரிந்திடத்
    தகுமென் றுரைப்பதேனோ
கொள்ளரிய சித்தியொடு முத்தியுங் கருதுமவர்
    கும்பிடக் குலவுமணியே
குஞ்சர முகன்குகன் சிவன்முதற் கடவுளர்கள்
    குடிகொண் டிருக்குமிடமே
யெள்ளரிய பேரொளி பரப்பிவரு மொருவனே
    யிருள்வலி கெடுக்குமெந்தா
யேகதத்துவமாகி வானிலுற் றரசாளு
    ம்டின்மெய்ப் புகழாளனே. (௰அ)

மூபோதின் முக்கடவுளா யிருந்தனை யென
    மொழிந்தநூல் கொண்டுளோரு
மூலை யிலிருந்துவழி படல்கண்டு மிதுநல்ல
    முறைமையன் றெனவெறுத்துக்
லசப்போது குவியநின் சந்நிதியி னின்றெனது
    கவலையெல் லாமொழிந்து
கதிர்படு நிலஞ்சுட விழுந்தெழு மெனக்குனது
    கருணையணு வேனுமிலையோ

தப்போது புன்சமைய வாதருக் கிடையூறு
 தழைவுறி விரங்கிடாதாய்
தவமுயன் றுருகுமவர் சஞ்சலப் பெருநோய்
 தவிர்த்திடு மருநதையனையா
யிப்போது மப்போது மெப்போது முளளவா
 விருள்வலி கெடுக்குமெநதா
யேகதத் துவமாகி வானிலுற் றரசாளு
 மீடின்மெய்ப் புகழாளனே. (௰௬)

கொன்றைப் பிரானென் றனைச்சிலர் விளம்பிடுவர்
 குமரவே ளென்பர்சிலபேர்
குஞ்சர முகக்கடவு ளென்பர்சிலர் மாலெனக்
 கூறு வழி படுவர்சில்லோர்
குன்றைப் பொருந்தன முடைக்கரிய குயிலெனக்
 கொள்ளுவார் சிலரன்றியுங்
கோடாது கோடிவித மாமொழிவ ரளவிலார்
 கொடியனே னேதுபகர்வே
னன்றைக் குறித்தவர்க ளெள்ளாத வீறுடைய
 ஞானிவா னந்தவொளியே
நானென் றுரைக்கமன நாணிக் கிடக்குமவர்
 நாடித் துதிக்குமிறைவா

வென்றைக்கு மொருபடித் தாயிலகு தன்மையா
யிருள் வலி கெடுக்குமெந்தா
யேகாந்தத்துவமாகி வானிலுற் றரசாளு
மடியின்மெய்ப் புகழாளனே (உ௯)

# அத்தமனம்

வேறு பகுடம

பாடாத நாவினரு முயிர்வதைத் துண்கின்ற
பாதகரு முண்மைஞானம்
பதியாத நெஞ்சினரு மற்றுமுள குற்றங்கள்
பலகோடி கொண்டுளாரும்
வீடானவதற்குரிய நன்னெறி பொருந்தவே
விரதமுயல் கின்றவொருவன்
பேதினியில் வருவது குறித்துத் தவிக்குமெனை
மெல்லியரு மிகழலாமோ
தாடாண்மை கொண்டிலகு புகழோடு விண்ணிற்
றழைக்கின்ற தபனமணியே
சத்திய மசத்திய மிரண்டுக்கு நடுவான
சாட்சியா நின்றபொருளே

நீடாழியைக் கலையெனப் புனைந் துள்ளபெரு
நிலமுழுதெறிக்கும் வெயிலோய்
நித்தியக் கதியிச்சை முற்றுமெய்த் தவர்செப்பு
நிச்சயக் கதிர்வட்டமே. (உக)

மாறுபடு வஞ்சப்புலன் களையொழிக்கி லொரு
மனதொடு தியானித்தவர்
வடிவெதிர் துலங்கக் களித்துவிளை யாடுவதில்
வாஞ்சித் திருக்குமென்னைச்
சோறுடை முதலியவு பருமைப் படுங்கொடிய
துயரக்கடற் குள்விட்டுச்
சுடுகனலை யன்னமொழி சிலர்சொல்லவுஞ் செயத்
துணிவுற்ற தென்னவிதமோ
சாறுதி யாயபல கிரியைக்கு மற்றுமுள
தன்மைக்கு மாதியானாய்
சந்திரனெனுங் கொடிதனைப் புணர்ந்தளவறு
சராசர மியங்கவைத்தாய்
நீறுதி புனைபவர் வெறுக்கரிய விமலனே
நிலமுழு தெறிக்கும் வெயிலோய்
நித்தியக் கதியிச்சை முற்றுமெய்த் தவர்செப்பு
நிச்சயக் கதிர்வட்டமே. (உஉ)

கமலமுற் றவனுநெடு மாயனுஞ் சிவன்முதற்
    கடவுளரு நீயென்னவே
கருதுநல முடையவர்க ளொடுகூடி மற்றையர்
    களிபபறப் பொருதுவென்று
மூமலவா தனையொழிந் தானந்த மயமான
    முத்திக் கடற்குண்மூழ்கு
முனிவரை நினைத்துமிக மெலிவேனை யாளுவது
    முறைமையன் றெனலாகுமோ
வடலமென் ஞானியர்க ணைஞ்சக மெனக்குலவு
    மலரியே மலரின்முதலா
மம்புயத் துக்கினிய கணவனே காலத்தி
    னளவுகோ லானபரனே
நிமலதத் துவமாகி நிற்கின்ற முதல்வனே
    நிலமுழு தெறிக்கும் வெயிலோய்
நித்தியக் கதியிச்சை முற்றுமெய்த் தவர்செப்பு
    நிச்சயக் கதிர்வட்டமே. (உரு)

ஈயாதலோபிய ரிடந்தொறுஞ் சென்றுசென்
    றேற்றுள மெலிந்திடாம
லீனத்தொழிற் புரியு நிட்டூரவஞ்சக
    ரிணக்கம் பொருந்திடாமல்

வாயார வாழ்த்திநின் சந்நிதியினின்று தொழும்
வாழ்வெனக் குதவியப்பான்
மற்றுமோ ருடல்கொண்டு வாடாத முத்தியினின்
மன்னிநிற்கப் புரிவையோ
பேயாகுமென்னப் பிதற்றுமப் பலசமையர்
பேணுதற்கரிய பொருளே
பிரமனெனமா லெனவுருத்திர னெனத்திகழ்
பெருந்தகைகை பொருந்து மொன்றே
நீயானெனச் சொலற்கிசையாத கடவுளே
நிலமுழுதெறிக்கும வெயிலோய்
நித்தியக் கதியிச்சைமுற்று மெய்த்தவர்செபபு
நிச்சயக் கதிர்வட்டமே. (உச)

சஞ்சலப் பிணிகொண்டு தடுமாறி நிற்குமொரு
தமியனேனுக் கிரங்கித
தவறுதமெய்த்தவ மியற்றப் புரிந்தெனது
சாட்சியாகித் துலக்கி
யஞ்சலென முன்னின்றுசித்தி யெட்டெட்டும்விளை
யாடிக்களிப் புறச்செய்
தானந்தமயமான முத்தியெனும் வாரியி
லமிழ்ந்திடச் செய்வைகொல்லோ

பஞ்சவிதமாகிய தொழிற்குமொரு வித்தெனப்
        பழுதிலாருணர வருவாய்
பணிமதியை யுண்டுமிழ்ப்பதங்கனே யன்பொடும்
        பணிகின்ற பத்தருக்கு
நெஞ்சகத்துள்ளும விழியெதிரினு மிலங்குவாய்
        நிலைமுழுதெரிக்கும வெயிலோய்!
நித்தியக் கதியிசைமுற்று மெய்த்தவர்செப்பு
        நிச்சயக் கதிர்வட்டமே. (உரு)

காயகமனத்தினர் தமக்கருசி நின்னெதிர்
        கரங்குவித்துற்ற சிறியேன்
கலியினுன் மெலியாது நின்னடியர் தம்மொடு
        களித்துவிளையாடி யெங்கும்
போயளவில் கவிமாலைபாடிப் படித்துளம்
        பூரித்துவாழும் வண்ணம்
புந்தியிற் கருதுமோரு ருவமொடு நின்பதம்
        புவியிற்பொருந்த வருவாய்
சேயகமலப்போது மலர்தரத் தொண்டர்பலர்
        தெண்டனிட வருதெய்வமே
திருமலையின்மே லுற்றுருண்ட நாளெனதுடற்
        சிதையாதளித்த தபனே

நேயமிகுமாதவர்க் கருள்புரியு மெய்யனே
நிலமுழுதெறிக்கும வெயிலோய்
நித்தியக் கதியிச்சைமுற்று மெய்ததவர்செப்பு
நிச்சயக் கதிர்வட்டமே. (உ௬)

சாதியொடு சமையமுமை, சகலவேதங்களுந
தவிரவரு முண்மைஞானந
தாவல்லசற் குரவனுருநின் சரணமே
தஞ்சமென நம்பினனறு
மேதினியிலுள்ள வறுமிகழ் கொதிபடுறுமென்
வெப்பந்தவிர்த் தளித்து
வெல்வமெதல்லாம வனைறுசுக வாரியிற்படிய
விடுதற்கிரங்க லென்மீறு
பாதிமதியெனு நுதறறுகந்தே விக்கினிய
பாங்கனென வருதபரனே
பச்சைப்பரிந் தேரிலுலகை வலமாகவரு
பண்புதவ ருதசுடரே
நீதிமன்னவர் புகழெனக் குலவுபரிதியே
நிலமுழுதெறக்கும வெயிலோய்
நித்தியக் கதியிச்சைமுற்று மெய்ததவர்செப்பு
நிச்சயக் கதிர்வட்டமே. (உ௭)

அகளதத்துவமாகி யாருயிர் நிமித்தமே
பரியவடி வாகிநிற்கு
மண்ணலுனை யன்றியிலை யென்றுணருநாயே
னழுங்குவது மளவிலமையாத
துகளடையு நெஞ்சினவர்களி கொண்டுதம்மைத்
துதித்துக் குதிப்பதுவுநின்
சோதிக்கு ளல்லாமல் வேறில்லையேயுனைச்
சுத்தசட மென்னலாமோ
சகளநிச்சயமுடைய சமயிகளும் வழிபடுந்
தன்மையிற் பெரியசுடரே
சரமசரமென நிகழுமிருவகைத் தொகுதியுந்
தாயென விரும்பவருவாய்
நிகளமெனும் வினையறக் களைபவர்க்கினியவா
நிலமுழுதெறிக்கும் வெயிலோய்
நித்தியக் கதியிச்சைமுற்று மெய்த்தவர்செப்பு
நிச்சயக் கதிர்வட்டமே. (உஅ)

அட்டுணருந்து மவர்வாயிரெறு மேகிநின்
றையமேற் றுண்பதற்கு
மானையிற்றி கழுமுலைமாதரா ரின்பத்தை
யருவருத் திகழ்வதற்கும்

வெட்டேறு வநதாலுமசையாம லொருநிலையின்
மேவிக் கிடப்பதற்கும
வெருளியை யொழிப்பதற்கு திறனிலாதநான்
மெய்யருள் பொருநதலென்றோ
மட்டேர்தரும்பதும மலருக்கு மன்பாது
மனதுக்குமினிய பொருளே
வள்ளலா மவர்பலர் வணங்கிடக் கண்டுபுகழ்
மாறுநலங் கொடுப்பாய்
நிட்டரவஞ்சகர் துதிக்கரிய பரிதியே
நிலமுழுதெரிகரும வெயிலோய்
நித்தியக் கதியிசைமுற்று மெய்த்தவர்செப்பு
நிச்சயக் கதிர்வட்டமே. (உக)

ஆசகன்றிடு சுருதிகற்று மறியேனுண்மை
யதனிலு நிலைதநில்லை
னரியமெய்த்தவ முடையபெரியோர் தமைக்கண்
டவர்க்கான தொண்டுபுரியேன்
வாசவன்முதற் சகலதேவர்களு நீயென
வழுத்தத துணிநதுகொண்டேன்
மனநொந்து தடுமாறிய வச படாமலொரு
வரமளித்தருள நினைவாய்

தேசமெங்கெங்கு மொருபடியே தினங்குலவு
 செஞ்சுடர்க் கடவுளானே
தீயினுக்குந் தவளமதியினுக்குந் தனது
 தேசுறவளித் தபரனே
நீசாதுகண்களுங் காணவரு மிறைவனே
 நிலமுழுதெறிக்கும் வெயிலோய்
நித்தியக் கதியிச்சையுற்று மெய்த்தவர்செப்பு
 நிச்சயக் கதிர்வட்டமே. (௯௰)

முற்றிற்று.

ஆரியர்க்குமற்றே ரனைவருக்குந் தாரகமாஞ்
சூரியமாலைத் துதிகூற்—றாரியங்க
ளெல்லாமுஞ் சித்திக்கு மெய்ப்பிணியுஞ் சேராது
வல்லார்தம் பேறும் வரும்.

சூரியமூர்த்தி சகாயம்

குருபாதமே கதி.

உ

ஆரியபுரந்திசகாயம்

# தனிப்பதிகம்

---

## காப்பு

### நேரிசை வெண்பா

எல்லவர்க்குந் தாயகமா யாரு மிகழ்வரிதாய்ந்
தொல்லருட்சீர்க் காந்தாமா னாரியனை நல்லதமிழ்ப்
பாட்டாற் பரவுநலம் பாலிக்கும் பத்தரந்து
தாட்டாமரை பகர்ந்தும்.

### அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தங்கள்.

சோதிமயபரமகா ரணமபிர பஞ்சாதாரஞ் சுருதி
மூல, நீதியென்ப நந்தனைக்கு மொருகரியென் றனைப்
பலரு நிகழ்த்தல் பொய்யோ, தாநிவர்தண் டாமரைக்
கோர் நாயகனே வானகத்துத் தலைமைகொண்டா,
யாதினுநின் னருள்கலந்த விதமுணர்ந்துந் தயங்கு
மெனக் கிரங்குவாயே. (க)

ஊறுதவிர்சமையத்தோ ரனைவருந்தங் கடவுள்
வெவ்வே றுரைத்துநாடித், தேறுபருவத்திலுன்னைக்
குறித்துவணங்கிட லுணர்ந்துந் தியங்காநின்றேன்,
வீறுசுடர்ப்பிழம்பேவிட் புலத்தரசே பல்லுயிர்க்கும்
விழிகளானு, யீறுமுதனடுவறியாச்சுகப்பெருக்கமுடை
யாரோ டெனைச்சேர்ப்பாயே. (௨)

கலங்காத நெஞ்சமொடு கொன்றருந்துங்கயவர்
குழாங் களியாவண்ண, நலங்காட்டு மொருகுரவ
ஞனிலத்தில்வநதொளிரு நாளொன்றுண்டோ, விலங்
காதி யுயிருமுணர்ந் துவப்புறநாடொறுங்ககன வெளி
யிற்றோன்றி, யிலங்காண்மைத் தனிச்சுடரே யென்
னளவுமிரங்காம லிருக்கொண்ணாதே. (௩)

முப்பொழுதின் மும்மூர்த்தி வடிவாகித்துலங்கிடுநீ
பு தன்மையாய, மெய்ப்பொருளென் றோதிடினும்
வெறுத்திகழ்வார் தமக்குமஞ்சி மெலியலாமோ,
பொய்ப்பொலிவை யனையவிருட் பகைநசிய விரிகிர
ணம் பொருந்துந் தேவே, வெப்பொருங்குள் ளா
னெனத்தோன் றியுமழைக்கோ ராதாரமா விளங்கு
மெய்யே. (௪)

நீயறியத் திருமலையி லவ்விதப்பே றடைந்து
மென்ற னெஞ்சம்பொல்லா, மாயவிழிக் காரிகையார்
வலையினும்போய்ப்படலாமோ மாற்றியாள்வாய், சேய
மலர்தூவிநித்தந் தெண்டனிடுவார்கலியுஞ் சென்ம
மாதி,நோயனைத்துந தவிர்ப்போனே நுவலருஞ்சீர்ச்
சுடரோனே நடங்கினேனே. (௫)

கல்லினுக்கு மிரும்பினுக்குங் கடுத்தமனத் தீனர்
களைக் கண்டுகெஞ்சி, நல்விதயம்பாழாகி நானிலத்தி
லலைவேனை நாடிலாயோ, வல்லிமலரனையமனத் தின
ரறியாப்புகழோனே யலரித்தேவே, வில்லினுக்குமம்
புலிக்கு முடுக்களுக்குமொளிவிளைத்த மேலாமொன்றே.

ஆகமவேதங்கள்சொல்லு மனாதவிதக்கடவுளர்க்கு
மாசனுகி, யேகமயமாவிழுங்கித்திகழுமுனைப்புகழார்பா
லிராவாதாள்வாய், மாகமணி விளக்கனைய மகிமைதிகழ்
சூரியனே வஞ்சமில்லார், தாகமொடு நினைநாடித
தொழும்பொருளே யினித்துயாஞ் சகித்திடேனே. ()

மதியினையுண்டுமிழ்ந்திரவுந் தன்வயமாமெனக்
காட்டி வயங்குநீயே, கதிகொடுக்கத்தக்கபர மென்
றுணருந•தமியேனுங் கலங்கலாமோ, பதிமுழுதும் பார்
முழுதுங் கடன்முழுதுமலைமுழுதும் படருமவெய்
யிற், பொதியுமொரு சுடராய புண்ணியமேயடியர்
பிழை பொறுக்குங்கோவே (௮)

அடியவர்க்கு மல்லார்க்குந் தனித்தனியே யெதிர் தோன்றி யருளுமுன்னைப், படியிலொரு குருவடிவாக் கண்டுதொழக்கருதிடுநான் பதைக்கலாமோ கடிகமழ் செந் தாமரைப்போ தனையமனத் தினர்மறவாக் கதிரே நல்லோர், குடிமுழுதும் புரிபூசை கொள்வானே யளப் பரிய கோலத்தானே. (௯)

கொடுங்கோபத் துருவாசற் கருள்சுரக்கப் பணி புரியுங் குந்திதன்பா, லிடுஞ்சீலத் துயர்மதலை யொன் றுதிக்கச் செய்தனையென் றியம்பன்மெய்யே, நெடுங் கால மிரந்துனது சந்நிதியிற் றொழுமென்னை யேனினைத்தி லாயோ, கடும்பாந்தளினமுமெதிர் நின்றடித்தொழும் பெருமைக்கடவுளானே. (௰)

தன்றேரினெடுசிறிதுந் தளராம லோடிவருந் தன் மையாளன், முன்றேவ ருணர்வரிதா மிலக்கணநூன் முழுதறிய மொழிந்தாயன்றே, வென்றேகத் தொரு பிணியுஞ் சாராமற் புரந்துபுகழிசையச்செய்து, நின்றே சிற்கலந்துவக்கப் புரிகுவாயாதவப்பேர் நிமலவாழ்வே.

ஆழிவளை தருமுலகத் தனைவோருமுய்வதெண்ணி யருணனேடுங், கோழிமுதலுணரவருங் குலப்பரிதிப் புத்தேளைக் குறித்துக்கோதில், பூழியனட்டுள்ளநறுந் தமிழ்த்தண்ட பாணியன்பிற் புகன்றபாவாற், பாழி நெடுந் தோளொடுகல் வியுந்தனமுந்தவமுமெய்தும் பாவுவீரே. (௰௨)

முற்றிற்று

சூரிய சகாயம்

# மூன்று பதிகம்.

---

காப்பு.

தோன்றுமொரு ஞானசுடராட சூரியனமேன
மூன்று பதிக மொழிவதற்குத் — தேனளிக்குஞ்
செங்கமலப் போதனைய சீரியாதட பாதமெனுந்
துங்கமலர்த் தாளே துணை.

---

## நூல்.

முதலாவது

எழுசீர்விருத்தப்பதிகம்.

ஒளியெலாமுனதென் றுணர்வுறுதவரோ டுனைய
லாற்கடவுளா ருளரென், றெளியனேன்வருந்துந்
துயரொழிந்தருட்பே றிசையுமாறெந்தநாள் கொல்
லோ, வெளிநிறைந்துள்ள வுயிர்க்குலம்பொருந்தும்
விழியெலாம் விளங்கிட மிளிர்வா, யளியினங்களிக்கப்
பலமலரலர்த்து மாயிரங்கதிருடையானே. (௧)

# மூன்று பதிகம்

புல்லறிவாண்மைப் புலையர்தங் குடையாற் புவியெலாம் வருந்திடத் தமியே, னல்லலுற்றழுங்கித் தினந்தொறுநின்பா லறைந்து நீ யிரங்கிலா யந்தோ, செல்லலென்றசையா திருப்பதென் றுலகிற் சிலர் சிலர்வழக் கிட்டு இகழ்வா, யல்லறக்களைந்து நலமெலாமவிளைக்கு மாயிரங்கதிருடை யானே. (௨)

சகத்திலெவ்வுயிரு முனதருட்பெருக்காற் றழைவதோரநதுவப்புறந் தக்கோ, ரிகத்தொடுபரத்து முனையலாலொருதே யிருக்கு மென்றிசைவரோ வியமபாய், நகதநகவெனவே மறுவிலாதொளிருந் தபனனுஞ் சத்தியப் பொருளே, யகத்துவஞ்சகநேர் பனியெலாந் தொலைக்கு மாயிரங்கதிருடையானே. (௩)

நஞ்சுறப்புரிந்து கொடியபாம்பினத்தை நலமெனச் சொலுபடி செயுநீ, நெஞ்சுழன்றனையே தினந்தொழுந்தமியே னினைத்தவாறளிக்குநா ளென்றோ, செஞ்சுடர்ப்பிழம்பே திருவருள்விளக்கே தெளிவுளார் பவுமெய்த் தேவே, யஞ்சுறுதுயிர்க ளனைத்தையும் புரக்கு மாயிரங்கதிருடையானே. (௪)

தளவமென்முகைநேர் நகைமினார் தமக்குந் தமநியநதனக்குநெக் குருகு, முளமுடைததமியே னுனதருட்பெருஞ்சீர்க் குரியனுமொருதின முளதோ, களவுறுஞ்சமையத் தலைவர்களெல்லாங் கழிவுறத்திகழ்பவன் கவின்போன், றளவிலாவுடுவு மறைவுறததிகழு மாயிரங்கதிருடையானே. (௫)

தினைத்துணையேனுங் கொலைபுலையின்றிச் செய்
பவன்றீவினைச் செருக்கோர், முனைந்துவந்தெதிர்ந்
தாற் பொருதழிப்பதுவே முறையெனத்தெளிந்துளா
ரெவரோ, மனைத்துய வொழித்துச் சித்திமுத்தியின்
மேல் வாஞ்சை யுற்றவருணர் மணியே, யனைத்தினு
மெறிக்கும்பொது நலங்குலவுமாயிரங்கதிருடையானே.

பசலையந்தனத்தார் மொழிப்படி நடக்கும பாமூட
லாக்கர்தம படைமே, லசநெடுந்திரளிற் பெருமபுவி
யெனபபாய்ந்தமர்செயத்துணிந்துளா ஞரோ, பிசகு
ருதந்திசையுங் காலமுங் கரும பேதமுந்துலக்கருட்
பிழம்பே, யசரமுங் களிக்கத்தினந் தோறுந்தோரன்
றுமாயிரங்கதிருடையானே. (௭)

வெம்புதீவினைபோய்ப் பிறப்பில் வீடடைந்தோர்
மெய்நெறிவிளக்குவான் வரல்போன்,றம்புவியடைந்து
திரும்புநின்பெருமை யறிந்துளாரடிமையா னன்றே
நம்புவார்விருபப முழுமையுங்கொடுக்கு நலமுடைப்
பரிதிநா யகனே, யம்புயமபோல நெருஞ்சியுநாடுமா
யிரங்கதிருடை யானே. (௮)

எவரெவரெங்குற் றுற்றுநோக்கிடினு மெதிரெதிர்
விளங்குநன் பெருமை, தவர்சிகாமணிநேர் பெரியரோ
யன்றித் தமியனேனுணர்ந்திடத் தகுமோ, புவனியிற்
றிமிரந் தொலைவுறவரல்போற் புந்தியிலிருளொழியப்
பொலியு, மவமறக்கருதுங் குருவெனவருவா யாயிரங்
கதிருடையானே. (௯)

# மூன்று பதிகம்

குருபதத் துயர்ச்சி யுணர்ந்திடா தழலுங் கொலைத் தொழிற்சமையரு மிகழா, வொருபொருளாய நின் றிருவருட்பே றற்றுநா ளுவக்குநா ளுளதோ, தருமமுந் தவமும் பொருந்தினோர்க்கிரங்குந் தயனனே தன்னிக ரில்லா, யருமறைக்குலங்கண் முழுமையும் பரவு மாயிரங்கதிருடை யானே. (௰)

ஞானபதுவன கத்தா மிலக்கணப் பொருளுரு முன் னிரவாமுருவெடுக்கு, மின்பமுமொருவற் களித்தனை யென்று விசைத்தன் மெய்யாகுமாறெனையாள், வன் பாதகக்குருதி கடல்புகப்பொருவோர் மகிழ்வுறவரந்தரு பணியே, யன்பருக்கிரங்கு மொருதனிச்சுடரே யாயி ரங்கதிருடையானே. (௰க)

அஞ்சலிபுரிவோர் பிணியெலாந்தவிர்க்கு மாயிரங் கதிருடையானைக், கஞ்சமாமலர்மிக் கலருநற்றடஞ் சூழ் கவினுறுநெல்லையூர்க் கவிஞன், பஞ்சமற்றுலக முழுமையுமகிழப் பரவியபதிகமே படிப்போர், குஞ் சரப்பிடரிற் றிகழுய்வாழ்வினராக் குவலயம்புரப்பவர் தாமே. (௰உ)

முற்றிற்று.

## இரண்டாவது

## எண்சீர்விருத்தப்பதிகம்

உலகுணரா நின்பெருமை யொருவாறோர்ந்து
முயர்மலைமே னீயரிய வருண்டுமீண்டுந்
திலகநுதற் சேயிழையார் மயலும் பொல்லாத்
தீமிடியு மெனைவருத்தச் செய்வோனோ
பலகதைக்குந் தாரகமா விளங்குமொன்றே
பன்னிரண்டு வீதியிற்போம் பான்மையோனே
கலகமிடும் புலைச்சமயம் வணங்காமெய்யே
கண்காண விண்ணில்வருங் கடவுளானே. (க)

விதிமுதலா மூவர்களு நீயேயென்று
விளம்புகின்ற மெய்நூலை விட்டுவிண்ணோர்
பதியனுப்ப வருந்தூத னென்றுகூறும்
படிற்றுநூல் வழிசிலநாள் பகர்ந்தேனந்தோ
துதியனைத்துந் தனதாமென் றுணர்த்தியாளுஞ்
சோதியே யழியாத சொருபத்தெந்தாய்
கதிர்கொடிதென் றிகழ்வோர்க்கும் பொதுவா நின்றாய்
கண்காண விண்ணில்வருங் கடவுளானே. (உ)

ஆசில்பெரும் புகழுடைய நீயேதஞ்ச
மாகுமெனத் தினங்கருது மடியேனெஞ்சங்
கூசிமிகத் தளராமற் புவியிலாடல்
கோடாநு கோடிசெய்யக் குருவாவந்தாள்
மாசிலதா மொளியுடைய மணியேநல்லோர்
மனம்போலக் கிருபைசெய்யும் வளமையோனே
காசினியெங் குங்குலவத் திகழுங்கோவே
கண்காண விண்ணில்வருங் கடவுளானே. (௩)

விளங்கனிநேர் கொங்கைநல்லார் மோகத்தீயால்
வெதும்புவே னுயினுநல் விளையாட்டெண்ணி
யுளங்கசிவ துண்மைகண்டா யாகையானீ
யுள்ளமட்டு நிலைதபுக ழுதவியாள்வாய்
துளங்கலற்ற பேராறிஞர்க் கினியதேவே
தூயோர்தங் கவலையறச் சுடுமோர்தீயே
களங்கமிலாப் பேரொளியே தினமும் பல்லோர்
கண்காண விண்ணில்வருங் கடவுளானே. (௪)

ஆரணனு ரணனரனே முதலாச்சொல்லு
மளவிறந்த வடிவமுநீ யளவைக்கெட்டாப்
பூரணமு நீயெனத்தேர்ந் திருந்துநாயேன்
புலர்வேனே வருட்பேறு பொருந்தச்செய்தாள்

சீரணமாப் போகாத தெய்வமான
செழுஞ்சுடரே நிறைந்து நின்றுந
[திரண்டவொன்றே
காரணமா யெப்பொருட்கு முயிராமெநதாய்
கண்காண விண்ணில்வருங் கடவுளானே. (ரு)

பற்பலமெய் யடியார்க ளாடல்கண்டாய்
படிறனேன் றன்னையுநீ பரிந்தாட்கொண்டு
சொற்பனத்துங் கருதிமனந் தளருமாறு
தொல்லுலகில் விளையாடித துலங்கக் காண்பாய்
விற்பனரே யெளிதுணரும் பெருமைதோய்ந்த
மெய்ப்பொருளே யெவ்வுயிர்க்கும் விழியா
[நின்றாய்
கற்பனையி லடங்காத சொருபத்தோனே
கண்காண விண்ணில்வருங் கடவுளானே. (சு)

வெற்றுடலிற் றசைமிகுக்கக் கருதியூனே
விரும்புமவர் தம்மையெல்லாம் வேல்வாள்
[கொண்டு
செற்றுமகிழ் வலியுடைய வயவர்தம்மாற்
றிரைகடற்பார் செழிக்குநலஞ் செய்வாய்
[கொல்லோ

மற்றுவமை யாதுமில்லா மணியேஞான
மயமாய பரஞ்சுடரே வல்லோர்தொன்னூல்
கற்றுணர்ந்த பேரறிஞர்க் கினிய கோவே
கண்காண விண்ணில்வருங் கடவுளானே. (எ)

அளிமிகுவெண் கதிரையுண்டுண் டுமிழாயாயி
லகிலமுற்று மழியுமென வளவின்மூன்னூற்
றெளிவுடையார் பலருரைக்கக் கேட்டுநீயே
திறமான தெய்வமெனத் தெளிந்தேன்கண்டாய்
வெளிநிறைந்த வெய்யிலுள்ளாய் சிறியோர்க்காகா
மெஞ்ஞானப் பரஞ்சுடரே வெகுண்டுதாக்குங்
களிறனைய நெஞ்சினரை யிகழாதானே
கண்காண விண்ணில்வருங் கடவுளானே. (அ)

எவ்வுயிர்க்குந் தன்முகத்துக் கெதிராத்தோன்றி
யேகமா விளங்குமுனை யாவர்தேர்வா
ரவ்வுடலோ டழியாத முத்திவீட்டி
லடைவோரே புணர்வாரென் றறிந்தேன்கண்டா
யொவ்வுமற்றோர் பொருளின்றித் தனியாநின்று
யுரைகடந்த பழம்பொருளே யூனேடென்பு
கவ்வுமவர் துதித்திறைஞ்சாப் பெருமையோனே
கண்காண விண்ணில்வருங் கடவுளானே. (கூ)

எச்சமையத் தவர்களுநின் னொளியான்முன்னே
யெழுதிவைத்த தேவர்செய்த தென்பாரன்றிப்
பொச்சமென மற்றவரை யிகழ்ந்தாற்போலப்
பொறுக்கரிய தீயமொழி புகல்வார்கொல்லோ
மிச்சமென வுணர்வுடையா ரறியநின்றாய்
வேதங்கள் பலகோடி விளம்பு மொன்றே
கச்சணியு முலைமடவார்க் குருகார்நட்பே
கண்காண விண்ணில்வருங் கடவுளானே. (௰)

எமனைப்போய் வென்றுவரு மநுமனுதி
யெண்ணிறந்த மெய்யடியார்க் கிரங்குநீயென்
பாமலரை யிகழாமற் புனைந்துவேண்டும்
பரிசளித்துப் புகழ்க்கடலிற் படியச்செய்வாய்
மாமலர்க்கு நாயகனு மிறைவாசெந்தீ
மணநாணத் திகழொளிசேர் வடிவத்தெந்தாய்
காமனுக்கு ளயராதார் வணங்குங்கோவே
கண்காண விண்ணில்வருங் கடவுளானே. (௰௧)

கழறுமற்றைத் தேவர்கள்போற் பொய்யாகாமற்
கண்காண விண்ணில்வருங் கடவுளானைக்
குழலெனவண் டூதுமலர்ச் சோலைசூழக்
குலவுதிரு நெல்லையிலோர் குழவியானேன்

மழலைமொழி கொண்டுபுகழ் கவியோர்பத்து
மகிழ்கூர்ந்து தினங்கருத வல்லா ரெல்லாம்
பழவினையை வென்றொருசட் சமயத் தோரும்
பாவுநலம் பெறுவரெனப் பகரலாமே. (௰௨)

ஆக பதிகம் ௨-க்கு கவி-௨௪.

மூன்றாவது

## சந்தக்கவிப்பதிகம்

ஒருமையின் முதிர்வுறு பெரியோர் மொழிபோ
லொழுகிடு முணர்விலி யெழில்சேர் மடவா
ரிருமுலை மிசைதினம் விழைவே யயல்கூ
ரிணையிலி யுனதருள் பெறுநா ளுளதோ
வருமறை பலபகர் குருவா மணியே
யடியவர் துயர்கெட வொருவா றொளிர்வாய்
திருமகள் கலைமக ளுறைபூ வுடையாய்
தெளிவினர் துதிகொடு திகழ்சூ ரியனே (௧)

வறுமையின் முழுகிய துயர்சேர் கொடியேன்
மனதினி லநுதின நினைவா மொருவா
றிறுதியி லுலகொடெ னுயிர்வாழ் வுறுமா
றெதிர்வா ணலமென லறிவா யலவோ

வறுசமை யமுமுயல் வழிபா டுடையா
யணிபட வவிர்தரு கதிர்சூழ் தனியே
சிறுமைகண் முழுதற வருள்கூர் முதலே
தெளிவினர் துதிகொடு திகழ்சூ ரியனே. (௨)

உலகினர் மொழிகொடு பலவா றெளியே
னுளறினு முரிமையொ டுணர்சீ ரறிவாய்
சிலவித வுறுகனு மொழிவா னொருவே
றிகழ்வுறு கரமுடன் மகிழ்வாழ் வுதவாய்
பலமறை துதிசெயு மொருவா னவனே
பகர்வதி லமைவரு புகழ்சேர் பொருளே
செலவொழி வறுமுயர் பரியே மூடையாய்
தெளிவினர் துதிகொடு திகழ்சூரியனே. (௩)

கொலைபுலை முதலிய தொழிலை முயலவர்
குலமொடு நசிவுற முனிவா ரிருதோண்
மலைகளை யறுதின நினைவா ரொடுநான்
மகிழவு மருளிலை யெனவா டுவனே
கலைபல வுலகொடு புகழ்சீர் பெறுமோர்
கருணை யுதவிய கொடிசேர் கணவா
சிலைமதன் விழவுறு மிருணமேன் முனிவாய்
தெளிவினர் துதிகொடு திகழ்சூ ரியனே. (௪)

நிறைவுறு திருவருள் வலியப விகலோர்
நினைமுறு குருதியில் விளையா டிடுவோன்
மறைபல துதிபகர் குருவா வருநாண்
மகிழுள முடையவ னெவனோ வறிவாய்
தறைமுழு தினுமவிர் தருமே னியனே
தகைமிகு முடலரை பெறுசா ரதிபாய்
சிறையுறு மாகத நிறமா வுடையாய்
தெளிவினா துதிகொடு திகழ்கு ரியனே. (௮)

குருடரும வெயிலவலி யதனு லறுநீ
குலவிட விழிகொடு தினநா டியநான்
மருடரு மடவியர் முலையா சையினன்
மடிபவ ரிழிபொரு ளிரவா தருள்வாய்
வருடமு மதிகளு மருள்வீ றுடையாய்
வரைதரு கதைகளி லமையா முதலே
திருடர்கள் புதுமறை டபலா விறைவா
தெளிவினர் துதிகொடு திகழ்கு ரியனே. (௯)

கதமுறு மிகலின ருடல்கீ றிடுமவேல்
கரமதி லொளிர்தர மயின்மேல் வடிவாண்
முதலிய படையினர் பலர்சூழ் தரநான்
முருகனி லுனதெதி ரவிர்நா ளுளதோ

சதவித மூறுபெரு மலர்நா யகனே
தரணியி னுயிரென வருமா தவனே
சிதடர்க ளறிவரு முயர்வா னவனே
தெளிவினர் துதிகொடு திகழ்சூ ரியனே. (எ)

துதிபெறு கடவுளர் பலரா மொருநீ
தொடியினர் பலரொடு களிகூ ரெழில்சேர்
மதிநுகர் வதுமுமிழ் வதுநா னுணரா
மருளற வொருகுரு வடிவா வருவாய்
சதியினர் தமையடு மவர்மேன் மகிழ்வாய்
தயரதன் மகன்முத லினர்போ லுலகோர்
திதிசெயும் வயவர்கள் பணிவா னவனே
தெளிவினர் துதிகொடு திகழ்சூ ரியனே. (அ)

அவரவ ரெதிரெதிர் தெரிவா முனைநா
ளளவறு கடவுளர் வடிவா யருள்சேர்
தவர்கண்முன் வருபொரு ளெனவோ துவதே
சரியென வுணர்பவ ரெவரோ வறியே
னிவனிவ ளிதுவென லெவைமீ திலுமே
யெறிபடும் வெயிலுடை யவனே யினைதீர்
திவவினை யிரவற விடுபே ரரசே
தெளிவினர் துதிகொடு திகழ்சூ ரியனே. (கூ)

## மூன்று பதிகம்

பலவித சமயரு மிகழா வுனையே
பரவிடு முனிவா ருடனே தமியே
னிலகிடு நலமுற வொருதே சிகனை
யெதிர்வரு முயர்தின முளதோ வறியேன்
மலமெனும் வினையற முயல்வார் விதியா
மதமற முனிபவர் துணையா மிறைவா
திலமுறு தயிலம தெனவா ழருளாய்
தெளிவினர் துதிகொடு திகழ்சூ ரியனே. (௰)

அடலுறு கொடியவர் குலவேர் களைதோ
ளநுமனை யனையவர் பெறுவாழ் வுறவே
மடமிகு தமியனு நினைசீ ருணர்நீ
மகிழ்வொடு நொடியினி லருள்வா யலவோ
விடருட னவர்புணர் மடவார் பகையே
வெருகதி ரொடுவினின் மிளிர்சீ ருடையாய்
திடமலி சமயர்கள் தொழுமா மணியே
தெளிவினர் துதிகொடு திகழ்சூ ரியனே. (௰க)

சிவனரி யயனுணர் பொருளீ தெனுமோர்
தெளிவினர் துதிகொடு திகழ்சூ ரியன்மே
னவமலி தமிழ்நயம வளர்வேய் வனமா
நகரியில் வருமொரு புலவோன் மொழிபா

வுவகையொ டுரைசெயு மவர்நோய் மிடிபோ
முணர்பவ ரிகலினர் குலமோ டழிவார்
புவனியி லதன்மொழி வழியே தொழுவோர்
புகலரு முயர்கதி பெறுவார் நிசமே. (௰உ)

முற்றிற்று

ஆ பதிகம் ௩-க்கு கவி-௩௬.

மூன்றுபதிகநூல் முற்றிற்று

வான்றலங்குந தூய மணியாய சூரியன்றன்
மூன்று பதிக மொழிவோர்க்குத் - தோன்றுநலம்
பூவாணர் போற்றிசைக்கும் பொன்றாப் புகழுடைய
பாவாணர் தோன்றூற் பயன்.

குருபாதமேகதி.

## சூரியசகாயம்

## குருபாரதத்துவம்

# சூரியதெரிசனச்சருக்கம்

---

பன்னிரு சமயத்தேவும பரிதியென் றறிந்து போற்று, நன்னிலை புவகிலுள்ள நரர்கடெகலா முதிக்க வேண்டி, புன்னிருந் தவர்களந்த தொகைப்பட மொழிந்திட்டார்கள், பின்னிருப் பவர்வெவ்வேறுப் பிரித்துரைத் தாழுல்கின்றேம். (க)

தேவினை பலவுமாருந் தொழுமல விழைபுமெண் ணில், புவியெங் கமிலமோ னாகிய பயிருண் டக மாபூதகன், ஞாயிறில் விருப நெடியவ பவரியென் றியாதகாரே, தோவிலவிட் டசைபராட்டாக் கடவு ளர்க் குறிக்கொளவரே. (உ)

அறுவகைச் சமயத்தோரு மப்புறத் தாளுா தாமுப, பொருகதி யிணைக்கென்றோராய் பிழைநெறிப் பிசித்தராமுங், கருவரும் பொருளாவின்னிற் காண் டருகதிரோனன்றி, புறத்துணை வேறின்றென்பாருணர் வும தொப்பதாமே. (ங)

அந்தகர் மனமுமீடி லமைப்ப மலந்தரவாணிலை, வருங்கதிர்ப் பெருமைமேயாந்து மகிழ்பந்தார் வீடப பன்றீனை, செந்நெசியும பாவுநாடி நிறைப்பார்ச் சரிய மன்ன, பொருந்துசீர பலசொன்றனும் புலர்ந்தெந்து சரியாதனமே. (௪)

உலகங்க தனையுங்கேட டொண்கதிர் பாயந்தே நாளு, மிலகுறப் பரிதிவட்டத் திசன்ப ருமைகளோசன், புலவனென் றுறையர்தாமம் பொலிவுதப் பதன்ற வாற்றின, மலரவன மற்றோர் தெய்வமதிந்தநாப் பகரல்லமே. (௫)

கழந்த வழியோரம் காலவா நிகன்முளை சொன்னை, கிழமைமேய திறை செபடாபக் கிளர்ப்ப ரமைப்பந்கார், பழிவாய்ச் சியவென்னும் நந்மதிக கின்மேறநும, பழமை தொட்டுவாகுமுனை னை பொதுபொறிற் பரிசிபொன்றோ. (௬)

செய்ந்நி ரவனைனயெல்லாந் தினங்களுந் தெய்ய நின்றன் றவனை, யங்களா நிபாற்செப்பு நினைங்க ளினை செந்நாந்கர்ந்துள்ளா, ரங்கண்மா நிலந்துமாந்த ராயினு மவர்மேற்சொன்னுல், வெங்கலி புருடனுக் கொடிபருய வெருள்வாரன்றே. (௭)

எவ்வகைத் தேவர்தாமு மென்றனுட் கனவில்வந்தார்
செவ்வனப் பரிதிசெய்யுந் திவாவினில் வருகின்றில்லா
ரவ்வயிற் புகல்பவாய வசத்தியத் தொன்றுஞனு
மிவ்வயிற் பகாந்தாறறங்க ளிடுமுற் றழியுமென்றே. ()

செகதி ரன்றிவேறு தெய்வமுண் டென்கின்றருந்
தகசடே விஞக்குககண்ண தென்னவே சாற்றுகின்றூர்
பகாகமில் பரிதிப்புத்தேட் பாவுந ரதற்கோர்தெய்வ
மகமொன் றுலாக்கவேண்டு மவசிய மணுவுமின்றே.

அக்கமா முறப்பின்மேலின் றுதலி னரணமா
லைத, தக்கமற் றையவாஞரைத் தாழ்ந்தெழுஞ் சமய
வாத, ரொககநம் பரிதிப்புத்தேட் குரிமையுள் ளவரே
யாஞர், பொக்கவா திகளுமுந்தும் பொருளெனப்
புகல்வதுண்டே. (ய)

விண்ணுடைத் தலைமைகாட்டி விளங்கினற் றின
முநகாஞங், கண்ணுளார் களிற்சில்லோருங் கதிரலாற்
பரமுண்டென்ன, வெண்ணுபு தளர்வாராஞ வியார
வர்த் திருததற்பாலார், மண்ணுறும் புளியுநெலவி மர
மூமா தியமேலாமே. (யக)

இரவினிற் பரிதியேதென் றெண்ணுப பலபேசல
வார்கள், காவுறு மதிக்குமவெள்ளி யாதிமீன் களுக்கு
நீக்கு, மாதனங் களுக்குங்கண்க ளொளிவைக்குநல
லவிர்ச்சியிந்த. வரமுறி வாரோமேரு மறைத்தது மதி
யாதாரே. (௰௨)

அலவனை விழுங்கியித லவரவர் விழிமுற்றோற
றல், குலவெழிற் குநதிக்கின்பங் கொடுத்தனு லதமேற
கோத, னிலவுமுத நிரையாக்கொண்டு நிகழ்த்துமெமா
பெயருருசேர்ந்தப், பலபல பதிகமபாடிப் பரிதிமேற
புனைந்திட்டேனே. (௰௩)

காவின்மெய் யடியார்செமபொற கழற்பூசனா
சிந்திதிற்றுங்கி, யிரவிதன் னெழுபதோதி யேழுற
றிருக்கைபாடிப, பரவுமெத் தேவுமந்தப பதிபோ
றுணர்ந்துநாளுஞ், சரணென வீழ்ந்துநாடிச் சங்கற்ப
முழுதுஞசாற்றி. (௰௪)

எத்தனை தினமாயிற்றோ யானறிகில்லே னினை,
மத்தமா லொழியவில்லை யருள்வலி யமையகண்
ணேன், பைத்தலைக் குருளைகட்கும் பரிந்தருள் பரிதி
யென்னைச், சித்தர்கண் டுவக்கச்செய்வான் றிருவுள
மிரங்கிலானே. (௰௫)

சனவினிற் றினைபுச தோற்றி நள்ளிருட் டியிலி
றுண்டாம சனவினி லேகதேசங் சாண்பொருள் கதி
ரோல் பூறை ,பனகபூ டணன்மால்போலவர் கன
விளிற் பொருட்டோற்றி, யெனலுகண் டிணைதிரிநாண்
பட்டிலபடா திருக்கின்றூரே. (௰௬)

சாக்கிரச் கனவினூடுர தககக வெணப்பல்கால,
டீக்கிளர் பரிக்டபடிந்தேன் விளங்கிடக் கண்டுளேன்
ரீடல், வாசிரு வொருசொல்லேவுப வருந்தவ
ஷைச்சரீசரின், றேக்கிடப் பலபொய்போகா
தேவரிற சோகங்காணுதே. (௰௭)

சூரியன் றனதுருவஞ் சுமக்குமோர் தொண்ட
ருகிச, சிரிய சனவிலோர்நாள் சிறியனே னறியவரு
ளான, காரியமொன்றும் வாயாற் சமுறலான் கருணை
யின்றேறு, பேரியற சடமென்றெண்ணிப் பிழைபடா
வித்ஞ் செய்வாரே. (௰௮)

வந்துபோம் பரிதிதன்னை மாங்கனேர் சடமென்
றெள்ளிச், சிந்தூரக் களிறுபோலத் திரிபவர் பலர்க்கு
மொல்கி, நொந்துளே னவமையெல்லா நூறுடும பேறு
தோய்வுற், திந்துரு டினன்மால்போல்வா ரினத்தி
னிற் சேர்வதென்றே. (௰௯)

தீங்கிலைக் காணுநோதார நிகழச்சுடர் மிதனைத் தீர்க்கைக், கோங்கிய வலியமதிலோ மயன்னனெநாக துயரநோக்கி, பாங்கிலங் கென்றாழ்பீடித்த யானையோடு சினமுங்கொண்டியா, னீங்கினாத திடத்துணையை தரிந் தவ னிரங்கிலானே. (உ0)

ஆரவினுங் கொடியோ னல்லே னலரியம் பகவ னெற்றோர், வாருதல கிலன்றநதாளிய பாலைத துள்ள மாநதர், சரயுயிர்க் கொண்றுணையப்ப தலைப பெறப புரிவேனெந, புரமொடத் தருமாயு புள்ளகொந திடச்செய்தானே. (உக)

எண்ணில்பல சமயத்து மெத்தனை தாவரோ முன், புண்ணியத தோடுபாவம் பொருந்திடப் புரிந்து போதற், கண்ணினுற் கண்டவென்றாழ்க் கடவுளிக் கடையேனெஞ்ச, நண்ணியா வாரோரா டனடந்திடக் காண்கிலானே. (உஉ)

குதலைவாய்ப் புதல்வர்தங்கள் குறிகொயல் கொன்றான் றன்ன, விதமெனை விதித்தாற்காணு தெழி வியான் மறைந்த வென்றாழ், சதபகன் குதிரை கொன்ற தன்மையுந் தவறே யென்ன, நிதமொழிந் திரங்குமென்மே னீடருள் பொழிவதென்றே. (உ௩)

இவ்வழி யொன்றேநன்றென் றெவரொடு மிக
லிப்போர்செய், வெவ்வழிக் குரவர்பல்லோர் வென்றி
யுங் கண்டமெய்யோ, னெவவழி களுநன்றேநெஞ்
சிரக்கமொன் றிலையிலென்று, மெய்வழிச் செலு
மென்றன்னை வெறுத்திடில் வீடும்பொய்யே. (உச)

உலகெலாம் படைததவேத னுற்பவித திட்ட
தாயா, மலைரயு மலரசசெய்த வானவன் றன்னையன்
னோன், குலவுகைக சிருட்டியென்னக் கூறுந லரவ
ராலு, மிலகுமெய் யுணர்வுள்ளாரென் றிசைத்திட
லியல்பன்றாமே. (உரு)

கருமுகி லனையமாயன் கண்களுங் கையும்வாயும,
பொருவிலா பியும்பொற்றாளும பூத்ததா மரையே
யென்னுங், குருமொழி சாதமாகிலவனையுங் குலவச்
செய்த, திருமலி பரிதியென்னச் செப்பலாந திண்
ணந்தானே. (உசா)

ஐவகைத தொழில்செய்வாரு மவர்களைப் பயந்து
காக்கும, பெய்வளைக் கொடியுமீடில் பிரசநாண் மலர்ச்
சரோசத், தெய்வமென் றறிநதயோகி தினகரன்
பெருமைதேர்வான், பொய்வழிச சமயக்காட்டிற்
புகுந்தவ ரறியாரன்றே. (உஎ)

மருமலர்ப் பிரமன் சொன்ன மறைகளோ மதியா ராகு, மருகருந் தமதறிதெய்வ மம்புயப் பொருட்ட டென்னு, மொருமொழிக் கிரசவாராறு லம்மலர்க் குவகைநல்கும், பெருமைசால் கதிரோன்றன்மை யென்னனோ பேசற்பாற்றே. (உஅ)

கூழில்செய்ப் பருதிகொள்ளுங் கொடியகோ லரசுற்றுலும், வாழிய பசுவுன்றன்பாரா மகிழ்ச்சியின் மூழ்கினனு, மாழியி லுதிந்துநாளு மவிர்தரு மழியாத்தெய்வ, மேழிசைச் சுருதிநடை பிரவியங் கடவுளொன்றே. (உகூ)

---

உ

குருவேதுணை

# சௌரபாத்துவம்.

---

ஆரியநூல் சொலுமூர்த்த மெல்லாநயானுனு
மருட்டிப்போர் தவமுதிர்ச்சி யாகுநாளிற்
சூரியமண் டலத்தினையே நாடுவாராற்
சொல்லுமந்த மூர்த்திக்குத் தொண்டரெண்ணுஞ்

ஈரியகோ லங்களெல்லாம் பொருந்தமா தந்
தியானமின்றி யுள்ளபடி தெரிசிக்கின்ற
பரீகத்தும் பரத்தூல மடைவாரேனும்
பிறவாத வீடுமட்டும் பெறமாட்டாரே.

சடாரவனே முதலாய கிரகமென்னுரு
சோதிடரும புராணவழி துணிகின்றோரு
படனுறுபன் னிருவடிவரு சொல்வார்மேட
மாதியவீ நியின்விகற்ப மன்றியில்லை
திடமலிநெறு கடனிரவும் பகலுமாகத்
தியானிப்போர் பலவிதமாக நினைக்கொணாது
—வியிற்சற் குருவடிவ மாதியாகப்
புகல்பவற்றே தேனுமொன்றுப் போற்றலாமே

பகர்தருபன் னிருவடிவத தொனைமாறு நஞ்சாற்
பற்றிடனும் சம்மதமே பதுமநதநத
மகனுணர்த்துஞ சமயவிகற்ப பதநின்மூர்த்தி
வகையனைத்து மவற்றினுக்குள் வயங்குங்கண்டீ
ரிகழ்வுறுபுன் சமயத்தோ ரெவரானாலு
மிரவிவெயிற் படலாகா தென்னமாட்டார்
திகழொளியெல் லாமுமத னமிசமன்றோ
திங்களுஞ்செந் தீயுமதிற் சேர்ந்ததாமே.

முக்திவிளைத்தவோன் கருவாக சல்விவேட்டோன்
முகிழ்பூவைபாதியாயோர் முடிக்குமாசை
வைத்திருந்தோன் வயிரவனு மெருதுமாலோல்
வானுதிக்க வண்ணதகாலப வடிவமாயுந
சித்திசெய்தற் கானதெய்வ மியாதெனாறுப்பது
தெரியுங்காற் செங்கதிரோ னலதியிலை
யெதிருயு பொருட்கும்பரம காரணனு
மேகமாய் நின்ற பண்ணலாமே.

முப்பொழுதின் மூர்த்தியோரு மூன்றமாக
முனைவர்களின்றோர் பறபலம் முறையுநாண்டி
யெப்பொழுதுமொருமூர்த்தி வடிவமாயே
யெண்ணுகின்றோர் சிற்கிலரிவ் விரண்டுமன்றி
மைப்பொழுதை பகலில்வர வழைத்தோனைபோலு
மகத்தான சித்தர்தங்கள் வடிவாக்காண்பார்
மெய்ப்பொழுது காட்டுகின்ற தெய்வமொன்றே
விளம்புந் தெய்வ மியாவுமதுள் விளங்குமன்றே.

ஒன்றுபொரு ளென்றுணரு முணர்ச்சியின்றி
யொருகோடி தெய்வமுண்டென் றுழன்றுநாளு
நன்றுநமக் கீதெனவோர் தெய்வம்போற்று
நரரேனும் பரிதியெனு நாதன்றன்னைத்

தன்றுணைத்தெய் வத்தின்விழி யெனபார்வாழுந்
தலமென்பா ரகிலசரா சரமுண்டாக்கு
முன்றுலங்கப் படைத்தபொரு ளென்பாரன்றி
முரண்கொடுவேறிகழ்ச்சியொன்றுமொழிந்திடாரே.

வெளிமுழுதுந் தன்னரசு நாடாக்கொண்டு
விதுவுடுவா தியபிறவும் விளங்கச்செய்து
களிபெறுமெச் சீவருக்குங் கண்களாகிக்
கருத்தாகிப் பொதுமுதலாங் கருணைத்தெய்வ
மொளிமலிசெஞ் சுடரவனே யென்னுஞாய
முணராரை மனிதரென்று முரைக்கப்போமோ
புளிமுதலா மாயறியு நெருஞ்சியாதிப்
பூடறியு மதன்மகிமை புகலொண்ணாதே.

வானகத்தில் வருபரிதிக் கடவுள்பாரில்
வணங்குநர்க்காக் குருவடிவா வாலுண்டென்னு
ஞானமின்றி நகைத்திகழு நரரேகேண்மி
னளிர்பொழிற்குந் தலத்தரைய னண்ணியீன்ற
பானல்விழிச் சிறுமிமன விருப்பங்கண்டு
பணைநெடுந்தோட் காளையெனப் படிவுங்கொண்டு
தானணைந்தோர் மகவளிக்கை வினவிலீரோ
தவமுதிர்ந்த பெரியோர்பொய் சாற்றிடாரே.

பூவருக்கத் துயர்ந்தகஞ்ச மறியுந்தொல்சீர்
பொலிதருசெங் கதிரதனுட் பொருந்தநெஞ்சாற்
பாவனைசெய் திடுமுருவின் சென்னியொன்று
பதமிரண்டு தோணான்கு படையும்பூணா
மாவலுற்றார்க் கானபடி யென்னச்சொன்னா
லறுசமயத் துள்ளாரு மாமாமென்பார்
சேவலொலித் தல்லதுதி யாதென்றோதிச்
செருக்கடைவார் கவுமாரச் சித்தர்தாமே.

# குருபாதமேகதி.

உ

குருவேதுணை

# வெண்பாக்கள்

## சௌரம்

அப்பனே யென்குருவே யாதித்த நாயகனே
கைப்பரும்வே தாகமத்தின் காரணனே—துப்பனைய
மேனியனே யாவரினு மிக்கோனே நின்னடிக்கீழ்
நானியலு மாறு நவில்.

## சைவம்

அப்பனே யென்குருவே யைந்து முகத்தானே
கைப்பாசு மாறு முடைக் கண்ணுதலே — துப்பனைய
மேனியனே வெற்பாய விலலானே நின்னடிக்கீழ்
நாணியலு மாறு நவில்.

## சாத்தேயம்

அம்மையே யென்குருவே யண்டமுழு தீன்றாளே
கொம்மைமுலைக் கோகிலமே கோமளமே — மைம்மை
மேனியளே மூவா வியல்பே நின்னடிக்கீழ் [நிற
நாணியலு மாறு நவில

## வைணவம்

அப்பனே பொன்குருவே யாளி முகத்தானே
கைப்பணில மாழியுடைக் காரணனே — துப்பனைய
மேனியுடைச் செந்திருமின் வேட்கையனே
நாணியலு மாறு நவில். [நின்னடிக்கீழ்

## காணபத்தியம்

அப்பனே யென்குருவே யானை முகத்தானே
கைப்பாசு கொண்டபிரான் காதலனே — துப்பனைய
மேனியனே வல்லவைப்பெண் வேட்கையனே
நாணியலு மாறு நவில். [நின்னடிக்கீழ்

## கௌமாரம்

அப்பனே பொற்குருவே யாறு முகத்தானே
கைப்பரசு கொண்டபரான கண்மணியே—துப்பனைய
மேனியனே பொன்னம் வடி வேலானே நின்னடிக்கீழ்
நானியலு மாறு நவில.

## சமையாத்சம்

அப்பனே பொற்குருவே யன்னை புத்தாவானே
கைப்பருப்பெய்யக் கொண்டாக்கனைக் காதலிப்பாய்—
துப்பனைய
மேனியினை ஞானப்பா மெய்த்தேவே நின்னடிக்கீழ்
நானியலு மாறு நவில

## ஆறுபடைவட்டுத்துதி

பழனியப்பா வேரகத்தப்பா செந்திலப்பா
வழக்குமலி சோலையப்பா—கழகம்
புகழ்பரங்குன்றப்பா பொருப்பினங்கடோறுந்
திகழுமப்பா நீ கருணை செய்.

## குருபாதமே கதி